உலக்கமளிக்கும்
வலுசக்தி

ஆண்டறிக்கை 2021




CEYLON PETROLEUM STORAGE TERMINALS LIMITED

சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்

ஊக்கமளிக்கும்
வலுசக்தி

சிலோன் பெற்றோலியம் ஸ்ரோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்

ஆண்டறிக்கை 2021



பொருளடக்கம்

நிறுவன தகவல்	06
செயல்திறன் சிறப்பம்சங்கள்	12
விருதுகள் மற்றும் பாராட்டுகள்	14
எங்கள் தலைமைத்துவம்	**16**
தலைவரின் செய்தி	20
பணிப்பாளர் சபை	22
மூத்த முகாமைத்துவக் குழு	26
முகமைத்துவ கலந்தரையாடல் மற்றும் பகுப்பாய்வு	**30**
செயல்பாட்டுச் சூழல்	32
நிதி மூலதனம்	40
உற்பத்தி மூலதனம்	44
மனித மூலதனம்	52
ஆளுகை மற்றும் இணங்குவித்தல்	**58**
நிறுவன ஆளுகை	60
இடர் முகாமைத்துவம்	70
பணிப்பாளர் சபையால் ஆண்டறிக்கை	80
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை	83
நிதியியல் அறிக்கைகள்	**85**
கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை	86
நிதி நிலை அறிக்கை	110
விரிவான வருமான அறிக்கை	111
பங்குறிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று	112
காசுப்பாய்ச்சல் கூற்று	113
நிதியியல் அறிக்கைகளுக்கான குறிப்புகள்	114
விரிவான வருமான அறிக்கை	143
ஐந்தாண்டு நிதிச் சுருக்கம்	145


உளக்கமளிக்கும்
வலுசக்தி


SHAH DENIZ

நிறுவனத் தகவல்



தொடக்கம்
1961

நிறுவனத்தின் பெயர்
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்

சட்டப் படிவம்
அரசாங்க கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபார பொறுப்புகளை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் 2 (1) பிரிவு நியதிகளின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்
எரிபொருள் விநியோக நிலையம், கொலன்னாவ,
வெல்லம்பிட்டிய, இலங்கை.

தொலைபேசி	+94 11 2694482
	+94 11 2691643
	+94 11 2532122
தொலைநகல்	+94 11 2547827
மின்னஞ்சல்	secret@cpstl.lk
இணையதளம்	www.cpstl.lk

வரி செலுத்துவோரின் அடையாள எண்:
134011157

நிதி ஆண்டு
ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை

தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர்
திரு. எம். உவைஸ் மொஹமட்

பணிப்பாளர்கள்
திரு. ஈ. ஏ. ரத்னசீல
திரு. டி.ஜி.ஆர். மனோஜ் குமார்
திரு. தர்மதாச பண்டிதரத்னா
திரு. மனோஜ் குப்தா
திரு. அசீம் பார்கவா
திரு. ராஜேஷ் குமார் பகத்

தலைமை நிறுவனம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

செயலாளர்கள்
எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செக்டேரியல்
சேர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்.
இலக்கம் 11, காஸல் லேன், கொழும்பு 04.

கணக்காளர்
கணக்காளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள்
மக்கள் வங்கி, இலங்கை வங்கி







தொலைநோக்கு

தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன் மிக்க பெற்றோலிய முனையத்தொழிற்படுத்துனராக திகழ்தல்

பணி

பங்தார்ர்களின் எதிர்பார்க்க்ளை நிறைவு செய்கின்ற மற்றும் வாடிக்கயாளர் திருப்தி மட்டத்தனை உணர்ந்தகொள்ளத்தக்க அத்துடன் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கு அர்ப்பணித்துள்ள அதேவேளை முனைய வசதி பயன்பாட்டாளர்களுக்கு, வாடிக்கயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் தரத்தினை உறுதிசெய்தல், நுகர்வோரினதும் பொதுமக்களினதும் பின்னூட்டல் மூலம் வழி நாடாத்தப்படும் விசுவாசமிக்க, பாடுபடுகின்ற, சிறப்பாக பயிற்றப்பட்டதொழிற்படையின் அர்ப்பணிப்புமிக்க பங்கேற்பின் ஊடாக ஆரோக்கியம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்பிற்கான செயற்பாட்டிலுள்ள நியமங்களுக்கு கௌரவமளித்து நாட்டில் மிகவும் வினைத்திறன் மிக்க முனையத் தொழிற்படுத்துனராக திகழ்தல்.

எம்மைப் பற்றி

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் (சிபெஸ்ரேலி) நிறுவனமானது 2003 ஒக்டோபர் 13 ஆம் திகதிய 1310/8 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் பௌசர் தொகுதி ஆகிவற்றை உள்ளடக்குகின்ற பொதுப் பயன்பாட்டாளர் வசதியாக 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரத்தை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகும்.

இலங்கையில் நாம் மூன்றாம் நிலை பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுவதற்கும் முகாமைசெய்வதற்கும் அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெற்றோலிய மொத்தக் களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனியாவோம். ஆரோக்கியமான மற்றும் போட்டிமிக்க எரிபொருள் களஞ்சியப்படுத்தலையும் வினியோகத்தையும் கட்டியெழுப்பவதன் ஊடாக இலங்கையின் அபிவிருத்திப் பயணத்திற்கு ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பபை எடுத்தக்காட்டி, எமது பங்குதாரர் பெறுமதி மெய்ப்பித்தல்களை நாம் தொடர்ந்தும் நிலையாக மேம்படுத்தி வருகின்றோம்.

இந்நிறுவனமானது பங்கு மூலதனத்தின் 2/3 பங்கை உரிமையாக் கொள்கின்ற இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாவதுடன் மீதி லங்கா ஐஓசி பீஎல்சி நிறுவனத்திற்கு சொந்தமானது. சிலோன் பெட்ரோலியம் ஸடோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மெய்ப்பிப்பதற்கு தாய் நிறுவனத்தின் கிட்டத்தட்ட ஆறு தசாப்த கால அனுபவத்திலிருந்தும் நிபுணத்துவத்திலிருந்தும் பயனடைந்து சக்தித் துறையில் புத்தாக்கத்தைச் செலுத்தி நிலைபெறுதன்மையினை உறுதிசெய்கின்றது.

நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழில் துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான மொத்த நுகர்வோர்களினதும் சக்திக்கான கேள்வியினை நிறைவு செய்வதற்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை லங்கா ஐஓசி பீஎல்சி நிறுவனத்திற்கு உரித்தான நாடுமுழுவதும் சுமார் ஆயிரம் சில்லறைவிநியோகநிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம். கம்பனியின் பல்வேறு நடவடிக்கைகளில் சுமார் 3000 ஊழியர்களின் ஊக்கமிக்க பங்களிப்புடன் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றில் ஈடுபட்டுள்ள 11 மொத்தச் சாலைகள் மூலம் துணையளிக்கப்படும் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன.

நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழில் துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான மொத்த நுகர்வோர்களினதும் சக்திக்கான கேள்வியினை நிறைவு செய்வதற்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை இந்திய ஒயில் கம்பனிக்கும் உரித்தான நாடுமுழுவதும் சுமார் ஆயிரம் சில்லறை விநியோக நிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம். கம்பனியின் பல்வேறு நடவடிக்கைகளில் சுமார் 3000 ஊழியர்களின் ஊக்கமிக்க பங்களிப்புடன் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றில்

பிரதான முனையங்கள்

- கொலன்னாவை நிலையம் மற்றும் முத்துராஜவெல முனையம்

மொத்த கிடங்குகள்

- அனுராதபுரம்
- கொட்டகலை
- மட்டக்களப்பு
- மாத்தறை
- ஹப்புத்தளை
- சரசவி உயன
- பதுளை
- குருணாகல்
- காலி
- பேராதெனிய
- காங்கேசன்துறை

ஈடுபட்டுள்ள 11 மொத்தச் சாலைகள் மூலம் துணையளிக்கப்படும் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன.

கொலன்னாவ நிலையமானது 12 பெற்றோலிய உற்பத்திகளை கையாளுகின்ற அதேவளை முத்துராஜவெல நிலையம் 5 பெற்றோலிய உற்பத்திகளை கையாளகின்றது.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் விநியோகத் தொழிற்பாடானது இரண்டு சந்தைப்படுத்தும் கம்பனிகளான இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய ஒயில் கம்பனி இரண்டின் சார்பிலும் உற்பத்திகளை விநியோகிப்பதனை பொறுப்பேற்கின்றது.

கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன. நாடுபூராகவும் பெற்றோலிய உற்பத்தி விநியோகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் 11 வெளிப்பிரதேச மொத்தச் சாலைகளையும் ஒரு உள்நாட்டு புகையிரத ஓரச்சாலையினையும் தொழிற்படுத்துகிறது. இவ்வமைவிடங்களுக்கும் உள்நாட்டு புகையிரத ஓரச்சாலைக்கும் உற்பத்திகளின் நிறைவாக்கம் கொலன்னாவை விநியோக நிலையத்தில் ஏற்றப்படும் புகையிரதக் கொள்கலன்கள் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் அத்துடன் பிரதான முனையங்களில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட வீதித்தாங்கிகள் என்பவற்றை பயன்படுத்தி வீதி மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. விமான எரிபொருட்கள் கொலன்னாவை நிலையத்தில் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டு புகையிரதம் மூலம் நாளாந்த அடிப்படையில் கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது. இரத்மலானை மற்றும் இலங்கை விமானப்படையினால் தொழிற்படுத்தப்படுகின்ற ஏனைய விமானக் களங்களுக்காக வீதி மூலம் எரிபொருள் வசதி அளிக்கப்படுகின்றது. முத்துராஜவெல முனையங்களில் குறைந்த கந்தக உலை எண்ணெய் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையமான ஒரேயொரு வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்பட்ட குழாய் இணைப்பு ஊடாக அனுப்பப்படுகின்றது.


முனையம்
மொத்த சாலை
காங்கேசன்துறை
அனுராதபுரம்
மட்டக்களப்பு
குருணாகல்
முத்துராஜவெல
பேராதெனிய
சரசவி உயன
கொலன்னாவை
கொட்டகலை
பதுளை
ஹப்புத்தளை
காலி
மாத்தறை

நிறப்புக் கூறுகள் செயலாற்றுகை

			2021	2020 (மீளக்குறிப்பிடப்பட்டது)	2019	2018	2017	2016
நிதி மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: நிதி வளர்ச்சி**							
	வருமானம்	இ.ரூ.மில்	14,276	13,568	15,340	13,130	14,176	12,663
	தொழிற்பாட்டு இலாபம்	இ.ரூ.மில்	1,394	1,906	1,966	1,405	3,208	2,406
	இலாபம் / (நட்டம்) வரிக்கு முன்னர்	இ.ரூ.மில்	1,595	2,215	2,289	1,522	3,273	2,330
	இலாபம் / (நட்டம்) வரிக்கு பின்னர்	இ.ரூ.மில்	1,508	1,886	1,207	254	2,717	1,949
	பங்குறிமை மீதான வருவாய்	%	5%	7%	5%	1%	11%	9%
	நிதியியல் உறுதிப்பாடு							
	மொத்த சொத்துகள்	இ.ரூ.மில்	34,039	32,588	31,522	30,322	29,991	28,059
	மொத்த பொறுப்புகள்	இ.ரூ.மில்	5,313	5,369	5,773	5,556	4,828	5,208
	பங்குதாரர்களின் நிதிகள்	இ.ரூ.மில்	28,726	27,218	25,749	24,766	25,163	22,851
	காசு மற்றும் காசுக்கு சமனானவை	இ.ரூ.மில்	2,257	3,442	3,999	3,149	1,474	2,455
	பங்குதாரரின் தகவல்							
	ஒரு பங்கிலிருந்தான ஆதாயம்	இ.ரூ.	1.58	2.67	1.74	0.26	3.73	2.32
	ஒரு பங்கிற்கான பங்கிலாபம் (கொடுப்பனவு செய்யப்பட்டது)	இ.ரூ.	-	0.48	0.30	0.868	0.54	0.65
	ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி	இ.ரூ.	38	36	34	33	33	30
	சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி	இ.ரூ.மில்	1,812	2,458	2,319	1,613	3,616	1479
துணிக்கப்பட்ட மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: தொழிற்பாட்டு சிறப்பு**							
	ஆதனம், பொறி மற்றும் உபகரணம்							
	முனையங்கள் மற்றும் சாலைகள்	எண்ணிக்கை	13	13	13	13	14	14
	மூலதனச் செலவு	இ.ரூ.	1,358	1,358	981	375	833	913
மனித மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை: மக்களில் முதலீடு**							
	மொத்த ஊழியர்கள்	எண்ணிக்கை	2,629	2,629	2,856	2,932	3,045	3,118
	பெண்கள் பங்களிப்பு	எண்ணிக்கை	343	343	326	334	343	351
	ஊழியருக்கான கொடுப்பனவுகள்	இ.ரூ.மில்	6,908	6,908	6,636	6,853	5,570	5,782
	ஊழியர் ஊதிய வீதம்	%	6%	6%	5%	6%	1%	1%
	பயிற்சியில் முதலீடு	இ.ரூ.மில்	3	3	17	22	32	30
	மொத்த பயிற்சி மணித்தியாலங்கள்	மணித்தியாலம்	3806	3806	9706	12609	21,832	26,088
	சராசரி பயிற்சி மணித்தியாளங்கள் / ஊழியர்	மணித்தியாலம்	4	4	5	7	9	11
	ஊழியருக்கான வருமானம்	இ.ரூ.மில்	5.43	5.43	5.37	4.48	4.67	4.06
	ஊழியருக்கான தேறிய இலாபம் (நட்டம்)	இ.ரூ.மில்	0.57	0.57	0.42	0.09	0.9	0.63
சமூக மற்றும் உறவு மறை மூலதனம்	மறைமுக ஊழியர் (அண்ணளவாக)	எண்ணிக்கை	75	75	71	63	105	114
	வாடிக்கையாளர் தொடுகைப் புள்ளிகள்	எண்ணிக்கை	40	40	40	40	40	40
	நிறுவன சமூக பொறுப்புகளில் முதலீடு	இ.ரூ.மில்	6.5	6.5	3.8	2.1	6.1	5.7
	பயன்பெறுனர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக)	எண்ணிக்கை	8600	8600	8800	8700	8,500	7,000
	அரசாங்கத்திற்கான பங்களிப்பு	இ.ரூ.மில்	1,608	1,608	2,441	2,579	2,175	1,895
இயற்கை மூலதனம்	**உபாயமார்க்க முன்னுரிமை : நிலைபெறு தன்மை**							
	வலுச்சக்தி நுகர்வு	கிவோம்	5,342,888	5,342,888	6,360,903	6,397,024	5,554,900	5,573,604
	தண்ணீர் நுகர்வு	கிலீ	280,239	280,239	299,011	333,344	276,214	270,263
	கசடு அகற்றல்	கிலீ	32.4	32.4	118.8	165	-	435.60





விருதுகள் மற்றும் பாராட்டுகள்

நாட்டின் முதன்மைக் கைத்தொழில் சம்மேளனமான இலங்கைத் தேசிய கைத்தொழில் சம்மேளனம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட CNCI சாதனையாளர் 2021 விருது வழங்கும் நிகழ்வில் "மேலதிக பாரியா சேவைகள்" பகுதியின் கீழ் எமது அர்ப்பணிப்பினை மீள உறுதிப்படுத்தி தேசிய தங்க விருதை வென்றெடுத்து நாம் அங்கீகரிக்கப்பட்டுள்ளோம்.





THE CEYLON NATIONAL CHAMBER OF INDUSTRIES - CNCI

Achiever

CNCI ACHIEVER AWARDS 2021
FOR INDUSTRIAL EXCELLENCE

This is to Certify that

Ceylon Petroleum Storage Terminals Limited

was Presented the

Gold Award

in the **National Level Government Sector** *Category*

Wednesday 12th January 2022



எமது தலைமைத்துவம்





திரு. எம். உவைஸ் மொஹமட்
தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்



திரு. ஈ. ஏ. ரத்னசீல
பணிப்பாளர்



திரு. டி. ஜி. ஆர் மனோஜ் குமார்
பணிப்பாளர்



திரு. தர்மதாச பண்டிதரத்ன
பணிப்பாளர்



திரு. மனோஜ் குப்தா
பணிப்பாளர்



திரு. அசீம் பார்கவா
பணிப்பாளர்



திரு. ராஜேஸ் குமார் பகத்
பணிப்பாளர்

தலைவரின் செய்தி



2021 ஆம் ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடெட்டின் ஆண்டறிக்கையினை பணிப்பாளர் சபை சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். உலகளாவிய எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி காரணிகள் அதேபோன்று உள்நாட்டு அழுத்தங்கள் என்பவற்றை கையாண்ட ஒப்பீட்டளவில் கடினமான ஆண்டாகவே 2021 ஆம் ஆண்டு கம்பனிக்கு அமைந்திருந்தது.

உலகளாவிய சந்தைகள் நிச்சயமற்று காணப்படுகின்றன

விலைகளை பாதிக்கின்ற பல வகையான வெளிவாரி சார்புநிலைகளுடன் 2021 காலப்பகுதியில் பெற்றோலியச் சந்தை உலகளாவிய அதிர்வுகளால் தொடர்ந்தும் வருந்தியது. கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் ஒப்பீட்டளவில் தற்காலிக இடைநிறுத்தம் மற்றும் உலகம் முழுவதுமான பொருளாதார மீட்சிக்கான எதிர்மாறான உலகளாவிய சார்பு எண்ணப்பாங்கு என்பவற்றுடன் மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில் விலைகள் உயர்வடைந்தன. கொவிட் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையுடன் ப்ரெண்ட் மற்றும் வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியற் என்ற இருவகையான மசகெண்ணைகளினதும் விலைகள் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 95 வரை உயர்வடைந்தன. மேலும், உக்ரேனில் இடம்பெறும் யுத்தமும் ஒபெக் உற்பத்திக் குறைப்பும் குறுகிய காலத்தில் 2008 இலிருந்து முதற் தடவையாக பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 140 ஆக விலைகள் எட்டியமைக்கு வழிவகுத்த கரிசனைகளை தோற்றவித்தன. உலகளாவிய மசகு எண்ணைச் சந்தையின் நிலைமைகள், உலகின் புவிசார்அரசியல் நிலைமை தொடர்பிலான பல்வேறு நிச்சயமின்மைகளினால் தூண்டப்பட்டு மிகவும் தளம்பல் மிக்கதாக காணப்படுகின்றன. உலகளாவிய எரிபொருள் வழங்கல்களில் பற்றாக்குறையைத் தடுப்பதற்கு சர்வதேச சக்தி முகவராண்மை நாடுகள் அதேபோன்று ரஷ்யா அல்லாத தேறிய ஏற்றுமதியாளர்கள் என்பவற்றிடமிருந்து கணிசமான கையிருப்பு விடுவிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, பொருளாதாரங்கள் அல்லது அவற்றின் அபிவிருத்தி மட்டங்களின் நிலைமையினை பொருட்படுத்தாது பல நாடுகளில் பணவீக்க அதிகரிப்புக்களால் இப்பிரச்சினைகள் தீவிரப்படுத்தப்பட்டு உலகம் முழுவதும் காலநிலையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் அதிகரித்து, இறுதியாக பல நாடுகளில் ஒன்றில் அதற்காக நேரடி முரண்பாடு அல்லது சாத்தியப்பாடுகளை அதிகரிக்கின்றன. இவை அனைத்துடனும், கம்பனியானது அதன் தன்மையின் காரணமாக சிக்கலான அத்துடன் பல தடவைகள் தளம்பல் மிக்க மற்றும் நிச்சயமற்ற உள்நாட்டு தொழிற்படும் சூழல் என்பவற்றை தோற்றுவிக்கின்ற வளர்ச்சி எதிர்மறை காரணிகளுக்கு ஆட்பட்டுள்ளது.

உள்நாட்டு சூழல்

மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2020 இல் 3.7 சதவீதம் கொண்ட சுருக்கத்தின் பின்னர் 2021 இல் 3.6 சதவீதம் கொண்ட சாதனை

மிக்க வளர்ச்சியை மீட்டெடுத்ததற்கு மத்தியிலும் அத்துடன் மிளாய்வுப்படுகின்ற ஆண்டு காலபகுதியில் நோய்த்தொற்று மீட்சி சாதகமாக இருந்து வருகின்றமைக்கு மதிதியிலும் விசேடமாக எற்றமதிகளிருந்தான வருவாயில் அத்துடன் வர்த்தக பற்றாக்குறை தொடர்ச்சியாக விரிவடைகின்றமையில் இலங்கை மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியினை நோக்கிய எல்லைக்கு அப்பாலேயே காணப்பட்டது. 2022 மார்ச் அளவில் 21.50 சதவீதம் கொண்ட முதன்மைப் பணவீக்கமும் 17.3 சதவீதமாகவிருந்த மையப்பணவீக்கமும், குறைவடைந்த வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளும் எரிபொருள் மற்றம் எரிவாயு இரண்டிலும் குறிப்பிடத்தக்க பற்றாக்குறைகளை தோற்றுவித்து மின்சார தடைகள், பொருளாதார நடவடிக்கைகள் நின்றுபோவதற்கு வழிவகுத்து, டொலருக்கு எதிராக ரூபா 48 சதவீதம் தேய்வடைந்து இறுக்கமாக்கப்பட்ட இறைக் கொள்கைகள், எஸ் என்ட் பி, பிட்ச் மற்றும் மூடி ஆகிய தரப்படுத்தல் முகவராண்மைகள் இலங்கையின் நாட்டுக்கான தரப்படுத்தலை தரங்குறைத்தமை எனபன அனைத்தும் உள்ளக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டு பகுப்பாய்வாளர்கள் இருதரப்பினரும் மிக கிட்டிய எதிர்காலத்தில் ஒட்டுமொத்த சமூக வீழ்ச்சியை நோக்கி இலங்கை செல்கின்றது என்ற கடுமையான கரிசனைகளை தோற்றுவித்த பொருளாதார சமூக தோற்றப்பாட்டுக்கு வழிவகுத்தன. வீதிப்போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து அத்துடன் வாகனப் பதிவு அனைத்தும் துரிதமாகவம் சடுதியாகவும் வீழ்ச்சியடைந்தமை மூலம் மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில் பொருளாதார பின்னடைவு தீவிரமாக பிரதிபலிக்கப்பட்டது.

உள்ளக மற்றும் வெளிவாரி இரு வகையான சாரபுநிலைகளையும் கையாள்வதற்கு கம்பனி செயற்படுத்தியுள்ள வலிமையான இடர்நேர்வு முகாமைத்துவ செயல்முறைகளுக்கு மத்தியில், எதிர்பாராத அடுத்தடுத்த நிலையும் அத்துடன் பல எதிர்மறையான காரணிகளின் ஒத்திசைவும் உலகளாவிய தளம்பல் சந்தைகளுக்கும் அதேபோன்ற உள்ளக குழப்ப நிலைக்கும் அதனை இடர்நேர்வுக்குள்ளாக்குவதற்கு இலங்கையில் சக்தி துறைக்கு அபரிமிதமான அழுத்தங்களை ஒன்றிணைந்தன. மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டானது திறைசேரியில் வெளிநாட்டுச் செலாவனி இல்லாது போன நிலமை உருவாகி, நாடுமுழுவதும் எதிர்பாராத சமூக பொருளாதார அழுத்தங்களையும் பதற்றங்களையும் விளைவித்த அனைத்து பொருளாதார துறைகள் மீதும் மிதமிஞ்சிய அழுத்தத்தினை ஏற்படுத்திய 2022 இன் முதல் காலாண்டில் சக்தி நெருக்கடியினை தோற்றுவித்த கடுமையான பொருளாதார எரிபொருள் பற்றாக்குறைகளின் விளைவை எதிர்கொண்டது. இந்நிலைமைகளின் கீழ், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டட்டின் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையும் கூட கடுமையான அழுத்தங்களுக்குள் தள்ளப்பட்டது.

மோசமான துறைசார் செயலாற்றுகைக்கு மத்தியில், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெனின் வருவாய் முன்னைய ஆண்டில் 44 சத வீத்திலிருந்து வீழ்ச்சியடைந்து, 41 சதவீதத்திற்கு சென்ற மொத்த இலாப எல்லைகளுடன் 2021 ஆம் ஆண்டுக்காக 4.2 சதவீதம் கொண்ட விற்பனை அளவுகளில் அதிகரிப்புக்கு எதிராக ரூபா 14.3 பில்லியனாக 5 சதவீத வருவாய் வளர்ச்சியினை காண்பித்த அதேவேளை வரிக்கு பிந்திய இலாபம் ரூபா 1.2 பில்லியனாகவிருந்து ஆண்டுக்காண்டு ரூபா 2.0 பில்லியனிலிருந்து 41 சதவீதம் வீழச்சியடைந்து, பங்கொன்றுக்கான உழைப்பு ஆண்டுக்கு ரூபா 2.67 இலிருந்து ரூபா 1.58 ஆக 40.82 சதவீதத்தினால் வீழ்ச்சியடைவதற்க வழிவகுத்தது.

இருந்தும், இப்பிரச்சினைகளை பொருட்படுத்தாது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினலஸ் லிமிட்டட் சவால் மிக்க காலங்களுக்கு மத்தியிலும் இலங்கையின் சக்தி பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு முற்றுமுழுதாக அர்ப்பணித்துள்ளது. பெற்றோலிய துறைக்கு தொடர்ச்சியான தாக்கத்துடன் உயர்வான மற்றும் விடாப்பிடியான உலகளாவிய மற்றும் உள்நாட்டு சமூக பொருளாதார சக்திகளை கடுமையாக எதிர்கொண்டு, சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினலஸ் லிமிடெட், அதன் நிலையினை தன்னை திடப்படுத்திக் கொள்ளும் என்றும் நாட்டின் அபிவிருத்தி தங்கியிருக்கின்ற ஆதார மையமாக தொடர்ந்தும் விளங்கும் என்றும் நம்பிக்கையுடன் உள்ளது.


முகவுரை

மிகக் கடினமான அத்துடன் நம்பிக்கை இழக்கச்செய்கின்ற துறைசார் மற்றும் உலகளாவிய பொருளாதார எதிர்கால எதிர்பார்க்கைகளுக்க மத்தியில்சிலோன்பெற்றோலியம்ஸ்டோரேஜ்டேர்மினல்ஸ் லிமிடெட்டை நிலைநிறுத்துவதற்கு மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு முழுவதும் முகாமைத்துவ பணிப்பாளரும் சிரேஸ்ட முகாமைத்தவ அணியும் கடுமையாக போராடியது. எமது வலிமைமிக்க தொழிற்படையிலிருந்து சிறந்ததையும் நிறுவனம் ஒன்றுக்கொன்று இடையிலான அமைப்பியல்சார் உறவுகள் அதேபோன்று வழங்குநர்கள் மற்றும் விநியோகத்தர்களுடன் திருப்பதியளிக்கின்ற ஈடுபாடு என்பவற்றையும் அவர்களது அணுகுமுறை வெளிக்கொணர்ந்துள்ளது. அயராத முயற்சிகளுக்காக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்கள் கூட்டுத்தாபனத்தின் நல்வாழ்வுக்காகவும் அதன் மீது இன்றியமையாது தங்கியிருக்கின்ற இலங்கையின் பிரஜைகளுக்காகவும் முக்கிய பணியினை வழங்குவார்கள் என்றும் நம்புகின்றேன்.

எமது இவ் அனைத்து முயற்சிகளிலும் கௌரவ அமைச்சர் மற்றும் இரு கௌரவ இராஜாங்க அமைச்சகர்கள் அத்துடன் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அலுவலர்கள் ஆகியோரின் உறுதியான அத்துடன் முன்மதிமிக்க தொலைநோக்கு மூலம் வழிகாட்டப்படும் எதிர்காலம் ஒன்றை நோக்கி நாம் வீறுநடை போடுவதுடன் அவர்களது ஆதரவுக்கும் கடினமான காலங்களை நாம் கடப்பதற்கு இன்றியமையாத உதவியாக தொடர்ந்தும் நம்பிக்கை வைத்திருப்பதற்கும் எமது உண்மையான நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக, உன்னதமான மேற்பார்வையை வழங்கியமைக்காக எனது சக உறுப்பினர்களின் மெச்சத்தக்க, அனுபவமிக்க அத்துடன் உயர்வான இயலாற்றல்மிக்க உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மீளாய்வு செய்யப்படுகின்ற ஆண்டானது அண்மைக்காலத்தில் மிகக் கடுமையான ஆண்டுகளில் ஒன்றாக இருந்ததுடன் அவர்களது உதவியின்றி வளம்பெறத்தக்க அரச தொழில்முயற்சியொன்றாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல் லிமிடெட்டை பேணுவது சாத்தியம் இன்றியே இருந்திருக்கும். விலைமதிக்க முடியாத இம்மனித மூலதனம் அனைத்துடனும் நாம் வரவிருக்கும் ஆண்டுகளில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் லிமிடெட்டை முழுமையாக திரும்பச்செய்யும் போக்குகளுக்கும் அதனை வலிமையிருந்து வலிமைக்கு கொண்டு செல்வதற்கும் நாம் இயலுமாக இருப்போம் என நம்புகின்றென்.

நன்றி



திரு. எம்.உவைஸ் மொஹமட்
தலைவர் / நிர்வாக பணிப்பாளர்

பணிப்பாளர் சபை



திரு. எம். உவைஸ் மொஹமட்
தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர்

“மக்களை நன்கு பயிற்றுவியுங்கள், அதனால் அவர்கள் விட்டுச் செல்லலாம், அவர்களை நன்றாக நடாத்துங்கள் அதனால் அவர்கள் அவ்வாறு செய்யத் துணிய மாட்டார்கள்” - ரிச்சர்ட் ப்ரன்ஸ்சன்.

திரு. மொஹமட் உவைஸ் மொஹமட் அவரது தொழிற்படையின் உள்ளார்ந்தம் பற்றி வலுவான நம்பிக்கையாளரும் உற்பத்தித்திறன்மிக்க விதத்தில் முன்னோக்கி செல்வதற்கான ஒரே வழி ஐக்கியமும் ஒன்றிணைவும் ஆகும் என நம்புகின்றார். கடந்த அண்மைக் காலத்தில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் லிமிடெட்டில் நியமிக்கப்பட்ட இளமையான தலைவர் என்ற வகையில், திரு. உவைஸ் மக்களின் பிரச்சினைகளை சாதுரியமாக தீர்க்கும் திறன்களை நிரூபித்துள்ள அதேவேளை நோய்த்தொற்று நிலவிய காலம்முழுவதும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட புத்தாக்கம்மிக்க வியாபார ஆலோசனைகளுடனும் தீர்வுகளுடனும் முன்னோக்கிக் கொண்டு சென்றார்.

தற்போது அவர் தொழில் முயற்சி வளத் திட்டமிடலுக்காக சக்தி அமைச்சின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். இவர் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் ஒருவராகவும் பணியாற்றகின்றார்.
இவர். தொழில்பாட்டு சேவைகள், தொழில்முயற்சி வளத் திட்டமிடல், சக்தி போன்றன உள்ளடங்கலாக பல துறைகள் முழுவதும் இரண்டு தசாப்தகால நிரூபிக்கப்பட்ட பரந்த சிரேஷ்ட முகாமைத்தவ அனுபவத்தை கொண்டுள்ளார். அவரது பணி அனுபவமும் தேர்ச்சி வெளிப்பாடுகளும் ஜரோப்பா மற்றும் தெற்காசியாவின் ஏனைய பாகங்கள் உள்ளடங்கலாக உலகின் பல்வேறு பிராந்தியங்களுக்கும் நீடிக்கின்றது.

அவர் லண்டன் மெட்ரோ பொலிடன் பல்கலைக் கழகத்திலிருந்து விஞ்ஞானமானி (கௌரவ பட்டத்தினையும்) வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தின் முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளார். பல ஆண்டுகளாக இவர் பல எண்ணிக்கையான தொழில்சார் நிபுணத்தவ தகமைகளை சுயமாக வளர்த்துக் கொண்டுள்ளதுடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கீடு என்பன உள்ளடங்கலாக அவரது ஆற்றல்மிக்க துறையில் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். குறிப்பாக தொழில்முயற்சி மட்டத்தில் நிறுவன தொழில்முயற்சி வள திட்டமிடல்களை நடைமுறைப்படுத்துவதில் ஆற்றல் மிக்கவராக திகழ்கின்றார்.



திரு. ஈ. ஏ. ரத்னசீல
பணிப்பாளர்

பொது நிதி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமான தொழில் ரீதியாக இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு ஐ ஐச் சேர்ந்த திரு. ஈ.ஏ. ரத்னசீல ஐக்கிய அமெரிக்காவின் மஞ்செஸ்டர் வில்லியம்ஸ் கல்லூரியில் கொள்கைப் பொருளியியலில் கலை முதுமாணி – 2007/2008 பட்டத்தை பெற்றவராவார். அவர் உருகுணைப் பல்கலைக்கழத்திலிருந்து 1993/1995 ஆண்டில் தனது விஞ்ஞானி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் கொழும்பு பல்கலைகழகத்தில் 2002 இல் பொருளாதார அபிவிருத்தியில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவையும், ஜப்பான் சிபா ஐயுநு பொருளியில் உயர்தர கல்லாரியில் இருந்து அபிவிருத்திக் கல்வியில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா - 2003/2004 டிப்ளோமா கற்கைநெறிகளையும் நிறைவு செய்துள்ளார்.

திரு. ஈ.ஏ. ரத்னசீல தனது தொழில் வாழ்க்கையை 2001 தொடக்கம் 2006 வரை அரசிறைக் கொள்கை திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளராக தொடங்கியதுடன் 2007 தொடக்கம் 2010 வரை வர்த்தக மற்றும் தீர்வை திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்த்தப்பட்டார். மேலும், இவர் 2011 - 2013 வரை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளராக பணியாற்றியதுடன் 2013 தொடக்கம் 2016 வரை இலங்கை சுங்கத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றினார். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இவர் அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளராக/ மேலதிக பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகின்றார். திரு. ஈ.ஏ. ரத்னசீல அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய ஆராய்ச்சி மன்றம், தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல அரச நிறுவனங்களில் பணிப்பாளர் சபையில் பணிப்பாளராக பொது திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் தற்போது இவர் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை மற்றம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு என்பவற்றின் பணிப்பாளர் சபைகளில் பணிப்பாளர் ஒருவராக பணியாற்றுகின்றார்.



திரு. டி ஜி ஆர் மனோஜ் குமார்
பணிப்பாளர்

திரு. டி ஜி ஆர் மனோஜ் கமகே (டி ஜி ஆர் மனோஜ் குமார்), இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் சபைகளுக்கு 2022 டிசம்பர் 13 அன்று நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாவதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஸ்ட சபை உறுப்பினருமாவார்.

திரு. ஆர் திரு. டி ஜி ஆர் மனோஜ் கமகே கௌரவ சனாபதி ரணில் விக்கரமசிங்க அவர்களின் சட்டப் பணிப்பாளராகவும், தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மற்றும் புரோபேர்டி டிவெலொப்மென்ட் லிமிடெட் (இலங்கை வங்கியின் துணைக்கம்பனி) சபைகளின் பணிப்பாளராகவும் பணியாற்றுவதுடன் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் பல ஆண்டுகளாக இலங்கையின் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் ரிவி தெரண இரண்டிலும் பணியாற்றிய நன்கு அனுபவம்பெற்ற ஊடகவியளாளருமாவார். நீதிக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் என்ற வகையில் இவர் முக்கிய சிவில் செயற்பாடுகளில் ஈடுபட்டு பங்கேற்கின்றார்.

மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, இவர் முன்னால் பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பொதுமக்கள் ஒருங்கிணைப்புச் செயலாளராக விருந்ததுடன் முன்னால் சனாதிரி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் சட்டப் பணிப்பாளராகவும், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை பணிப்பாளராகவும், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளராகவும் இருந்தார்.



திரு. தர்மதாச பண்டிதரத்ன
பணிப்பாளர்

திரு. தர்மதாச பண்டிதரத்ன சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் இன் பணிபாளர் குழாமில் 2022 ஆகஸ்ட் முதல் சேவையாற்றுகின்றார். CPSTL இன் பொறியியல் செயல்பாட்டில் ஊழியராக 1990 களில் பணியாற்றினார். இவர் கெஸ்பேவ நகர சபையின் உறுப்பினராக 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் பெற்றுள்ளார். ஒரு தன்னம்பிக்கை, தெளிவான கருத்து வெளிப்பாடு மற்றும் பன்முக அரசியல்வாதிகளால் நன்கு மதிக்கப்படும் இவர் சமூகத்தின் மீதான அவரது ஆர்வம் நீதி, ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துகிறது சமூகம் மற்றும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது மக்களின் மனங்களை வெல்ல வழிவகுத்தது.



திரு. மனோஜ் குப்தா
பணிப்பாளர்

திரு. மனோஜ் குப்தா ஜெய்ப்பூரின் கௌரவம் மிக்க தேசிய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து சிவில் பொறியியல் பட்டத்தையும் ஜெய்ப்பூரின் பொடார் முகாமைத்தவ நிறுவனத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றவராவார். பெற்றோலியத் துறையில் 28 ஆண்டுகளுக்க மேற்பட்ட நிபுணத்துவத்துடன், திரு. குப்தா இந்தியாவின் முதன்மைக் கம்பனியும் 500 போர்ச்சூன் உலகளாவிய கம்பனியுமான இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிடெட்டின் சில்லறை விற்பனை, விமானத்துறை போன்றவற்றை உள்ளடக்குகின்ற பல்வேறு வகிபாகங்களில் பரந்தளவான அனுபவத்தை பெற்றவராவார். ஹரியானா மாநிலத்தின் மாநில மட்ட ஒருங்கிணைப்பாளர் என்ற ரீதியில் இவர் ஒட்டுமொத்த மாநிலத்திலும் பெற்றொலிய உற்பத்திகளின் இடைத்தடங்கலற்ற வழங்கலை பேணுவதிற்கும் வேறு எரிபொருள் சந்தைப்படுத்தல் கம்பனிகள் மற்றும் மாநில அரசாங்கம் என்பவற்றுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பினை பேணுவதற்கு பொறுப்படையவராவிருந்தார். இவர், பணிப்பாட் மற்றும் கொல்கத்தா என்ற இரு மிகவும் உபாயம்மிக்க அத்துடன் உயர் அளவுகளைக் கொண்ட பிரதேச அலுவலகங்களுக்கு தலைமை வகித்தார். இப்பிரிவுகளின் பிரதானி என்ற ரீதியில் இவர் தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு ஒருங்கிணைப்பிலிருந்தும் அத்துடன் தொழில் பங்காளர்களின் இயலளவினை கட்டியெழுப்புவதிலிருந்தும் அனுகூலம் பெற்று மிகவும் இயலச் செய்கின்ற அத்துடன் ஊக்கமளிக்கின்ற பணியிடத்தை உருவாக்குவதன் மீது கவனம் செலுத்தினார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் சில்லறை விற்பனைகள் பற்றி ஆழ்ந்த அறிவுடனும் பத்திக்கூர்மையுடனும் பல அரசாங்க உபாயமிக்க அமைவிடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

திரு. குப்தா சர்வதேச ஆலோசகர்களுடன் இந்தியன் ஒயில் மூலம் பொறுப்பேற்கப்பட்ட கௌரம்மிக்க சில்லறை விற்பனை மாறுதலடையச் செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் (Dhurva) மைய உறுப்பினர் ஒருவராக இருந்தார். இவர் துருவா கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட FIT, SEVA, AWESM, DARPAN (விநியோத்தர்கள் புள்ளி அட்டை) முன்முயற்சியை வடிவமைப்பதில் முதன்மை வகித்தார். மேற்குறித்த உபாய முன்முயற்சியும் வலையைமப்பும் வாடிக்கையாளரை மையமாக கொண்ட அணுகுமுறையும் கூட்டுத்தாபனம் பற்றிய இணைப்பங்காளர்களினதும் வர்த்தக நாம எண்ணபாங்கினதும் ஈடுபாட்டினை மேம்படுத்தி காண்பதையும் உணர்வதையும் மேம்படுத்துவதில் அதிகளவு பங்களித்துள்ளன. வியாபார கூட்டுமுயற்சியும் புத்தாக்கமும் வெற்றியின் மந்திரம் என அவர் நம்புகின்றார்.

லங்கா ஐஓசி பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளர் என்ற ரீதியில் அவரது முக்கிய பணிக்கு மேலதிகமாக இவர் இலங்கையின் பெற்றோலிய துறைக்கு அவரது நிபுணத்துவத்தை பங்களிப்பதன் வாயிலாக சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் மற்றம் ரிங்கோ பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் என்பவற்றின் சபையில் பணியாற்றுகின்றார். இவர் இந்திய பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மன்றத்தின் அரசாங்க ஒருங்கிணைப்பு தலைவராக பணியாற்றுகின்ற அதேவேளை பல்வேறு நிறுவன சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் முனைப்புடன் பங்கேற்கின்றார்.



திரு. அசீம் பார்கவா
பணிப்பாளர்

திரு. அசீம் பர்காவா இந்திய ஒயில் கோப்பரேசன் லிமிடெடில் நிதி, சர்வதேச வர்த்தகம் மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு துறையின் வர்த்தக நோக்குகள் ஆகிய துறைகளில் இரண்டு தசாப்தத்திற்கும் மேற்பட்ட பல்வேறுபட்ட பணி அனுபவத்தைக் கொண்டவராவார். இவர் கணிசமான காலமாக சுத்தகரிப்புச்சாலை அமைவிடத்திலும் பணியாற்றியுள்ளார்.

பல்வேறுபட்ட துறைசார் அனுபவம் விருப்பப்பட்ட நிறுவனசார் உபாயங்களை எய்தும் பொருட்டு தொழில் குறிக்கோள்களுடன் கூடிய நிதியியல் குறிக்கோள்களை ஒத்திசையச்செய்வதற்கு அவரை இயலச்செய்துள்ளன. சிரேக்ஷ்ட துணைத் தலைவர் (நிதி) என்ற வகையில் கம்பனியின் ஒட்டுமொத்த நிதியியல் கருமங்களையும் கவனிக்கின்றார்.

இவர் இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICAI) உறுப்பினராவதுடன் டெல்லி பல்கலைக்கழகத்தலிருந்து வணிகமானி (கௌரவ) பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் கம்பனிச் செயலாளர்கள் நிறுவனத்திலிருந்து திறமைப்பட்டியலில் இந்தியாவில் 10 ஆவது நிலையினை பெற்று கம்பனிச் செயலாளர் உறுப்புரிமையினை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளதுடன் இந்தியாவின் பூனேயின் சிம்போஸிஸ் முகாமைத்தவ கற்கைகள் நிறுவனத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் பட்டப் மேற்படிப்பு (நிதி) டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். இந்தியன் ஒயில் கோப்பரேசன் நிறுவனத்தில் அவரது தொடர்ச்சியான சேவைக்காலத்தின் போது இவர் சுத்தகரிப்புச்சாலை நிதி, சுத்திகரிப்புசாலைகள் தலைமை அலுவலகம், நிறுவன நிதி, சர்வதேச விவகாரங்கள் போன்ற பல்வேறு நிறுவனசார் மட்ட துறைகளில் செயன்முறைசார்ந்த அனுபவத்தையும் பெற்றவராவார். திரு. பர்காவா சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் பணிப்பாளராகவும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினராகவும் விளங்குகின்றார்.



திரு. ராஜேஸ் குமார் பகத்
பணிப்பாளர்

திரு. ராஜேஸ்குமார் பகாட் பெற்றோலிய துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை பெற்றுள்ளதுடன் தற்போது லங்கா இந்தியன் ஒயில் ஐஓசி பிஎல்சியில் சிரேக்ஷ்ட துணைத் தலைவராகப் (தொழிற்பாடுகள், இறக்குமதிகள் மற்றும் கப்பல் எரிபொருள் விற்பனைகள்) பணியாற்றுகின்றார். 2001 இல் முகாமைத்துவ பயிலுநராக இந்தியன் ஒயில் கோப்பரேசன் லிமிடெட்டில் இவர் இணைந்து கொண்டதுடன் இந்தியாவின் தெற்குப் பாகத்தில் அமைந்துள்ள தூத்துக்குடி முனையத்தில் நான்கு ஆண்டுகள் தொழிற்பாடுகளில் பணியாற்றினார். 2005 ஆம் ஆண்டு தொடக்கம் ONGC மற்றும் ஏனைய கப்பற் தொழிற்துறைகளுக்கு கப்பல் எரிபொருள் விற்பனைகள் உள்ளடங்கலாக டாடா குழுமம், அதானி குழுமம் பாரிய அரசாங்க துறைகள் போன்ற பாரிய கைத்தொழிலுக்கு தேவையான பல்வேறு பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகளை கவனித்து மஹாராக்ஷ்டிரா மாநிலத்தில் மும்பாய் மற்றும் பூனே நகரங்களில் நிறுவனசார் விற்பனை திணைக்களத்தில் பணியாற்றினார். தற்போது இவர் லங்கா ஐஓசி பிஎல்சியின் கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிலுக்கு தலைமை வகித்து நாட்டின் தேவைக்கான பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தல் உள்ளடங்கலாக தலைமைத்துவம் வழங்கி வருகின்றார்.

திரு பகாட் முகாமைத்துவத்திற்கான கீர்த்திமிக்க கல்லூரியான மும்பாயின் நர்சி முன்ஜி கல்லூரியிலிருந்து உற்பத்தி பொறியியலில் முதுமாணி தொழில்நுட்ப பட்டத்தினையும் வியாபார முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் சபையின் பணிப்பாளர் ஒருவராக திரு. பகாட் எரிபொருள் முனைய தொழிற்பாடுகள் மற்றும் கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிற்பாடுகள் போன்றவற்றில் சபை மட்ட தீர்மனங்களை மேற்கொள்வதை மேலும் மேன்படுத்தும் விதத்தில் கப்பல் எரிபொருள் விற்பனை உள்ளடங்கலாக அவரது அளவற்ற அனுபவத்தை வழங்குகின்றார்.

சிரேஷ்ட முகமைத்துவக் குழு



திரு. ஒ.பி. காக்கொட ஆராச்சி
பிரதி பொது முகதமையாளர் (நிதி)



திரு. ஜே.ஏ.யூ.ஆர்.கே. ஜயலத்
முகாமையாளர் (நிதி)



திருமதி. எஸ்.என். கமகே
நிறுவன விவகாரங்கள்



திரு. ஜி.எம்.ஏ. பண்டார
பிரதிப் பொது முகாமையாளர்
(பொறியியல் மற்றும் துனைச் சேவைகள்)



திரு. ரி.வி. சரத்சந்திர
பிரதிப் பொது முகாமையாளர்
(தொழிற்பாடுகள்)



திரு. ஈ.ஏ.ஆர்.டி. பண்டார
பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வளம் மற்றும் நிர்வாகம்) /
முகதமையாளர்
(பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி)



திரு. டி.ஆர்.எம். டயஸ்
முகாமையாளர்
(தகவல் முறைமைகள்)



திரு. என். ஜெயவர்தன
முகாமையாளர்
(பாதுகாப்பு)



திரு. டி.ஏ.ஜே.எஸ். தர்மபிரிய
தொழிற்பாட்டு முகாமையாளர்
(வாகனங்கள்)



திரு. ஆர். எஸ். எஸ். பிரேமகுமார
முகாமையாளர் (பெறுகை)



திரு. டபில்யூ.எம்.ஆர்.டபில்யூ.ஏ. பண்டார
முகாமையாளர் - விநியோகம்



திரு. அஜித் விஜேசூரிய
முகாமையாளர் (வளாகங்கள் மற்றும் பொறியியல் சேவைகள்)



திரு. டு.ளு. ஹேமந்த குமார
முகாமையாளர்
(மொத்த இயக்கம் மற்றும் மொத்த தயாரிப்புகள்)



வைத்தியர் திருமதி ஆர். சுசிறிவர்தன
(மருத்துவ அதிகாரி)



திரு. கே.எச்.எம். ஜெயசேகர
முகாமையாளர்
(உள்ளகக் கணக்காய்வு)



திரு. என்.எம். முனாஸ்
முகாமையாளர்
(மனித வளம்)



திருமதி. டபிள்யூ.பி.ஜி.ஏ.டபிள்யூ. ஜெயவர்தன
தலைமை சட்ட அதிகாரி



திரு.ஜி.எச்.என்.எம்.சந்திரசிறி
முகாமையாளர்
(ஆய்வுகூடம்)



மேஜர். ஆர்.எம்.என். ஜயதிலக்க
WWV RWP RSP (Rtd)
முகாமையாளர் (புலனாய்வு)



குழுத் தலைவர் பி.எம்.சி.பி. டயஸ்
முகாமையாளர்
(தீ மற்றும் பாதுகாப்பு)



திரு. எச்.எம்.யு. பண்டார
பொறியியல் முகாமையாளர்




திரு. டி.ஜே.ஏ.எஸ். டி எஸ்.ராஜகருணா
பதில் முகாமையாளர்
(முத்துராஜவெல முனையம்)



திரு. டி.ஆர்.ஜே. போபேராச்சி
பதில் முகாமையாளர்
(கரைகடந்த தொழிற்பாடுகள்
தொழிற்பாடுகள்)



திரு. எம்.டி.ஏ. அசோக குமார
பதில் முகாமையாளர்
(களஞ்சியசாலை)



முகாமைத்துவ கலந்தரையாடல் மற்றும் பகுப்பாய்வு


TK-36

தொழிற்படுகின்ற சூழல்

உலகளாவிய பெற்றோலியச் சந்தை


கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கங்கள் அதிக தொற்றுக்கொண்ட டெல்டா மற்றும் ஒமிக்ரோன் திரிபுகளின் தோற்றத்துடன் இணைந்து மோசமடைந்து, பல நாடுகளில் வழங்கல் இடையூறுகளை எதிர்பார்த்ததை விடவும் நீடிக்கச்செய்து பணவீக்கத்திற்கு தூண்டுதலளித்தது.

உலகளாவிய மசகெண்ணெய் விலைகளில், கொவிட்-19 நோய்த்தொற்றின் மீளெழுச்சி காரணமாக சில கீழ்நோக்கிய அழுத்தங்கள் காணப்பட்ட போதிலும், உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் நிலையான மீட்பு அதேபோன்று இறுக்கமான நிரம்பல் நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு 2021இல் சடுதியாக உயர்வடைந்து. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட உலகளாவிய கேள்விமீளேற்பட்ட சுருக்கத்தின் காரணமாக சராசரி மசகெண்ணெய் விலை (பிறென்ட்) 2020இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 43.35ஆக விளங்கிய போதும், உலகளாவிய பொருளாதாரத்தின் முழுமையான திரும்பல் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நடமாட்டக் கட்டுப்பாடுகளின் தளர்வு என்பவற்றுடன் 2021இல் பன்னாட்டுச் சந்தையில் சராசரி விலை பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 70.80 ஆக 63.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020இன் நடுப்பகுதியில் ஆரம்பித்த உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் மீட்சியானது 2021 ஒக்டோபரில் ஏழு வருட உச்சத்தை அடைவதற்கு முன்னர் வேகமடைந்து 2021 மார்ச்சளவில் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னைய மட்டங்களை அடைந்தது. வெஸ்ட் டெக்ஸாஸ் இன்டர்மீடியேட் (WTI) விலையும் அதிகரிக்கும் போக்கினைக் கொண்டிருந்ததுடன் 2020இல் பீப்பாயொன்றிற்கு சராசரியாக ஐ.அ.டொலர் 39.78உடன் ஒப்பிடுகையில் 2021இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 67.94ஆக பதிவுசெய்தது.

உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் அதிகரிப்பானது பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) மற்றும் அதன் நட்பு நாடுகளினால் பேணப்பட்ட இறுக்கமான உலகளாவிய எண்ணெய் நிரம்பல் நிலைமைகளுக்கு மத்தியில் உலகளாவிய மீட்சிச் செயன்முறைகளைச் சூழவுள்ள எதிர்பார்க்கைகள் மற்றும் உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட உயர்வு என்பவற்றினால் முதன்மையாக உந்தப்பட்டது. கீழ்நோக்கிய அழுத்தங்களின் குறுகிய நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டமைக்கு தற்காலிக முடக்கல்களையும் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளையும் விதிப்பதனைக் கட்டாயப்படுத்திய கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் நோய்த்தொற்றின் புதிய திரிபுகளின் தோற்றம் என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற கேள்விசார் கரிசனைகள் காரணமாயமைந்தன. குறிப்பாக, ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கிடையிலான புவிசார் அரசியல் பதட்டங்கள் வழங்கலை மேலும் இறுக்கமடையச் செய்யும் என்கின்ற கரிசனைகளைத் தொடர்ந்து உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் மேலும் உயர்வடைந்ததுடன் 2008 யூலையிலிருந்து முதற்தடவையாக 2022 மார்ச்சில் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 140 ஐத் தொட்டன. உலகளாவிய மசகெண்ணெய் விலைகளின் அதிகரித்துச் செல்லும் போக்குகளுக்கு இசைவாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் சராசரி விலை 2020 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 45.57 சராசரியுடன் ஒப்பிடுகையில் 2021இல் பீப்பாயொன்றிற்கு ஐ.அ.டொலர் 68.86இற்கு 51.1 சதவீதத்தினால் அதிகரித்தது.

உலகளாவிய மசகு எண்ணெய் விலை பீப்பாய்க்கு 140 டொலர்களாக மேலும் அதிகரித்தது. இந்த நிலையானது 2008 ஜூலைக்கு பிறகு முதல் முறையாக மார்ச் 2022 மார்ச்சில் .நிகழ்ந்துள்ளது. புவிசார் அரசியல் தொடர்பான பிரச்சினைகளை தொடர்ந்து ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே பதற்றம் காரணமாக விநியோகங்களை மேலும் இறுக்குவதற்கு வழிவகுத்தது. உலகளாவிய மசகு எண்ணெய் விலையின் போக்குகள், சராசரி விலை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் 51.1 சதவீதம் அதிகரித்துள்ளது. 2021 இல் ஒரு பீப்பாய் சராசரியாக 51.1 அஅமெரிக்க டொலர்களை வழங்கியதுடன் இது 2020 ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது ஒரு பீப்பாய்க்கு 45.57 அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

உலகளாவிய மசகு எண்ணெய் விலைகளின் போக்குகள்



உலகளாவிய தொழிற்படுகின்ற சூழல்

- இவற்றுக்கு மத்தியில் உலகளாவிய நோய்தொற்றுடன் அல்லலுறுகின்ற நாடுகளின் நோய் எதிர்ப்பு ஊக்கமருந்து மற்றும் முயற்சிகள் உள்ளடங்கலாக வெற்றிகரமான தடுப்புமருந்து நிகழ்ச்சித்திட்டங்களுடன் உலகளாவிய பொருளாதாரம் மீட்சிப் பாதையொன்றில் நகர்ந்தது.
- எவ்வாறாயினும், ரஷ்யாவின் உக்ரேன் மீதான படையெடுப்பு, அதன் விளைவாக கிழக்கு ஐரோப்பாவில் மனிதாபிமான நெருக்கடி அத்துடன் ரஷ்யா மீது விதிக்கப்பட்ட தடைகள் என்பவற்றுடன் 2022 ஆரம்ப கால பகுதியிலிருந்து பொருளாதார மீட்சியினை வலுப்படுத்துவதற்கான ஆரம்ப எதிர்பார்க்கைகள் மோசமடைந்தன.
- முன்னேறிய மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் உள்ளடங்கலாக உலகம் முழுவதும் பல நாடுகள் உயர்வான பணவீக்கத்தை எதிர்கொண்டு மத்திய வங்கிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் பாரிய கரிசனை நோக்கொன்றை உருவாக்கி இறுக்கமான நாணய கொள்கைகளுக்கு தூண்டுதலளித்தது.
- சர்வதேச நாணய நிதியம், 2022 ஆண்டுக்காக 3.6 சதவீத உலகளாவிய பொருளாதார வளர்ச்சி வீதத்தினை எதிர்வுகூறுகின்ற அதேவேளை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள், மற்றும் வளர்ந்து வரும் சந்தைகள் அத்துடன் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் என்பவற்றுக்கு அதனை முறையே 3.33. 3.38 ஆக எதிர்வுகூறுகின்றது.

உலகளாவிய எண்ணிக்கை தொழிற்துறை


கேள்வியும் நிரம்பலும்: ஆண்டின் முந்திய பாகங்கள் எண்ணெய்க்கான கேள்வியில் மெதுவான மீட்சியினால் குறிக்கப்பட்டிருந்தன. இதற்கு விமானப் பயணம் மற்றும் விமான எரிபொருள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த புதிய கொவிட் -2019 நோயாளர்களின் திடீர் உயர்வடைதல் காரணமாக அமைந்தது. உலகளாவிய நோய்த்

தொற்றுடன் தொடர்புடைய கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்பட்டு பொருளாதாரங்கள் வளர்ச்சியடைந்தமையுடன் கேள்வி படிப்படியாக உயர்ந்தது. உயர்வடைகின்ற பண்ட விலைகள் அத்துடன் அத்துடன் உக்ரேன் மீதான படையெடுப்புக்கு பதிலாக ரஷ்யாவிற்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகள் என்பன உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கு அழுத்தத்தை எற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது 2022 இல் எரிபொருளுக்கான குறைவடைந்த கேள்வியை மேலும் தீவிரப்படுத்தவுள்ளது.


உலகின் இரண்டாவது பாரிய எண்ணெய் எற்றுமதியாளரான ரஷ்யாவிற்கான எரிபொருள் வழங்கல்கள் மீதான இடையூறுகள் அத்துடன் இதன விளைவான சாத்தியமான வழங்கல்கள் அதிர்ச்சி என்பவற்றுக்கு மத்தியில், குறைவடைந்த கேள்வி எதிர்பார்க்கைகளும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய ஒபெக் உடன் இணையாத நாடுகள் உடன் இணைந்து ஒபெக்குடன் சேர்ந்த நாடுகளிடமிருந்து நிலையான வெளியீட்டு அதிகரிப்புகளும் அத்துடன் சர்வதேச சக்தி முகவராண்மை உறுப்பு நாடுகளிடமிருந்து பாரிய இருப்பு வெளியீடுகளுடனும் இணைந்து அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிடமிருந்து தோன்றுகின்ற உலகளாவிய எரிபொருள் வளங்களின் சடுதியான பற்றாக்குறையினை தடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

விலையிடல்: அதிகரிக்கின்ற கொவிட் 19 தடுப்பு மருந்து வழங்கல் வீதங்கள், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றமை அத்தடன் பொருளாதார வளர்ச்சி என்பனவற்றினால் 2021 இல் அதிகரித்த மசகெண்ணை விலைகள் உலகளாவிய பெற்றோலிய கேள்வியில் பெற்றோலிய வழங்கலை விட விரைவான அதிகரிப்பிற்கு வழிவகுத்தன. ஆண்டின் இறுதி வாரங்களில் வீழ்ச்சியடைவதற்கு முன்னர் 2021 ஒக்டோபரை நோக்கி விலைகள் உச்சத்தை தொட்டன. 2022 பெப்பரவரி மார்ச் காலப்பகுதியினுள் விலைகள் மீண்டும் சடுதியாக உச்ச மட்டங்களுக்கு அதிகரித்து உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு இதற்கு காரணமாக அமைந்தது.

மாதாந்த சராசரி பிரண்ட் மசகு எண்ணெய் விலைகள்




பீப்பாய் ஒன்றுக்கான ஆண்டுக்கான சராசரி மசகு எண்ணெய் விலை மற்றும் எதிர்கால கணிப்புகள்



பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பின் செயல்திறன்


சாதகமற்ற வலுசக்தி விலை அபிவிருத்திகள்



உள்நாட்டு வலுசக்தி விலை அசைவுகள்
(ஜன. 2021 - மார். 2022)

	CPC	LIOC
பெற்றோல் 92	85%	121%
டீசல்	69%	106%
மண்ணெண்ணெய்	24%	
	Litro	**Laugfs**
எரிவாயு	79%	181%

மந்தமான போக்குவரத்து நடவடிக்கைகள்



உள்நாட்டு பொருளாதாரம்

2021 இல் இலங்கையின் பொருளாதாரம் 2020 இல் 37 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 3.6 சதவீதம் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியினை பதிவுசெய்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி

- உலகளாவிய நோய்தொற்றிலிருந்தான மீட்சி குறிப்பாக புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் உள்நாட்டு பொருளாதார சவால்கள் மூலம் பாதிக்கப்படுவதற்கு முன்னர் 2021 பிந்திய பகுதியில் தொடர்ச்சியான மாதங்களுக்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் மாதமொன்றுக்கு ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சி அத்துடன் சுற்றுலாத்தறை படிப்படியாக வளர்ச்சியடைந்து சாதகமாக காணப்பட்டது.

- உயர்வான இறக்குமதி செலவினத்தினால் தூண்டப்பட்டு வர்த்தக பற்றாக்குறை தொடர்ந்தும் விரிவடைந்தது.

- வழங்கள் பக்க காரணிகள் மற்றும் அதிகரிக்கின்ற திரண்ட கேள்வி அழுத்தங்கள் ஆகிய இரண்டினாலும் தூண்டப்பட்டு பணவீக்கம் தொடர்ந்தும் உயர்வடைந்து முதன்மை பணவீக்கம் 21.50 வீதமாகவும் மையப் பணவீக்கம் 17.30 வீதமாகவும் உயர்வடைந்தன (2022 மார்ச்/ தே.நு. வி.சு.)


- குறைவடைகின்ற வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் மின்துண்டிப்புகளுக்கு வழிவகுத்து பொருளாதார நடவடிக்கைகள் இடையூறுகளுக்கு உள்ளாக்கிய எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தன.

- செலாவணி வீதத்தில் பாரிய நிகழ்வுத்தன்மை சந்தைகளுக்கு அனுமதிக்கப்பட்டதன் மூலம் இலங்கை மத்திய வங்கியினால் 2022 மார்சில் ரூபா / ஐஅடொ ரூபா 203 கொண்ட பெறுமதி அகற்றப்பட்டது.


- 2022 மார்ச் அளவில் ரூபா 48 சதவீதத்திற்கு மேல் தேய்வடைந்து 2021 மார்ச் இறுதியைவிட ஐ.அ.டொலருக்கு ரூபா 229 ஆக பதிவாகியது. துணை நில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம், வங்கி வீதம் மற்றும் நியதி ஒதுக்கு வீதம் போன்ற முக்கிய கொள்கை வீதங்கள் 200 அடிப்படை புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டு ஆண்டு முழுவதும் இலங்கை மத்திய வங்கி இறுக்கமான நாணய கொள்கையினை பின்பற்றியது. இதன் விளைவாக சந்தை படிப்படியாக மேல் நோக்கி திருத்தம் செய்யப்பட்டன.

- உயர்வான வெளிநாட்டு படுகடன் கொடுப்பனவுகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியிடல் தெரிவுகள் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளின் வீழ்ச்சியில் இருந்து விளைகின்ற இலங்கையின் மோசமடைகின்ற வெளிநாட்டு திரவத்தன்மை நிலையினை கருத்திற்கொண்டு அதிகரித்த தவணைதவறுதல் நிகழக்கூடிய சாத்தியத்தினை எடுத்தக்காட்டி ஆண்டு காலப்பகுதியில் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ், பிட்ச், மூடிஸ் அகிய அனைத்து மூன்று முன்னணி தரமிடல் முகவராண்மைகளும்இலங்கையின் நாட்டுக்கான தரப்படுத்தலை தரங்குறைத்தன.

செலாவணி வீத அசைவு




பணவீக்கம் (%)



	இறுதி திருத்த திகதி	2021 திகதியில் உள்ளவாறான விலை (ரூபா/ லீற்றர்)
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்		
பெற்றோல் 92	20.12.2021	177.00
பெற்றோல் 95	27.12.2021	207.00
வாகன டீசல்	20.12.2021	121.00
மண்ணெண்ணை	20.12.2021	87.00
லங்கா ஐஓசீ பிஎல்சி		
பெற்றோல் 92	20.12.2021	177.00
பெற்றோல் 95	20.12.2021	210.00
ஒட்டோ டீசல்	20.12.2021	121.00

போக்குவரத்து துறைக்கு பெற்றோல் மற்றும் டீசல் விற்பனை



மூலம்: சிலோன் பெற்றோலியம் கார்ப்பரேஷன் மற்றும் லங்கா ஐஓசி பிஎல்சி

ஆண்டு காலப்பகுதியில், வலுத்துறைக்கான விற்பனைகளின் சுருக்கங்களினால் உந்தப்பட்டு உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலிய உற்பத்திகளின் ஒட்டுமொத்த விற்பனை அளவுகள் 7.7 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது.

கொவிட்-19 நோய்த்தொற்றின் ஏப்பிறல் மற்றும் ஓகஸ்ட் காலப்பகுதி முழுவதும் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தமையினால், இது 2021 காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கையில் மீளெழுச்சியொன்றினைத் தோற்றுவித்தது. இதன் விளைவாக, போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் வானூர்தித் துறைகளுக்கான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை அளவில் முறையே 10.4 சதவீத, 39.5 சதவீத மற்றும் 18.6 சதவீத வளர்ச்சியினை இது பிரதிபலித்தது. அதேவேளை, நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட ஆரோக்கியமான நீர் மட்டங்களின் காரணமாக நீர்மின்வலு உருவாக்கம் தொடர்பில் அதிகரித்த தங்கியிருக்கும் தன்மையானது வலு உருவாக்கத்திற்கான டீசல் மற்றும் உலை எண்ணெய்யின் விற்பனையில் முறையே 23.2 சதவீத மற்றும் 35.9 சதவீத குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைப் பதிவுசெய்ததன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த விற்பனை செயலாற்றத்தினையும் மந்தமடையச் செய்தது.

சபுகஸ்கந்த சுத்தகரிப்பு ஆலை பல தடவைகள் காரணமாக சுத்திகரிப்பு ஆலையின் வெளியீடானது 2021இல் 24.7 சதவீதத்திலான ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. வழமையான பராமரிப்பின் நிமித்தம் பெப்புருவரி நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மூடுதலினைத் தொடர்ந்து சுத்திகரிப்புத் தொழிற்பாடுகளுக்கான மசகெண்ணெய்யின் கிடைப்பனவின்மையின் காரணமாக 2021 நவெம்பரில் மூன்று வாரங்களுக்கு சுத்திகரிப்பு ஆலை மீண்டும் மூடப்பட்டது. எனவே, ஒட்டுமொத்த மசகெண்ணெய் செயன்முறைப்படுத்தலானது 24.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், டீசல், பெற்றோல், எரிபொருள் எண்ணெய் மற்றும் நப்தா போன்ற முக்கிய உற்பத்திகளின் சுத்திகரிப்பு ஆலை வெளியீடானது பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் முறையே 31.1, 24.5, 22.9 மற்றும் 31.9 சதவீதங்களினால் சுருக்கமடைந்தன. இவ்வாறான உற்பத்தி இடைவெளிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதியினூடாக ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் இவ்வாண்டு காலப்பகுதியில் இது 15.2 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளில் குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2021இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயலாற்றம் மேலும் மோசமடைந்தது. உலகளாவிய மசகெண்ணெயின் விலைகளின் சடுதியான அதிகரிப்பிற்கு இசைவான வகையில் விலைத் திருத்தங்கள் போதாமையையும் காலந்தாழ்ந்த தன்மையையும் பிரதிபலிக்கும் வகையில், கணக்காய்வு செய்யப்படாத தற்காலிக நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்திருந்த ரூ. 33.9 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ. 41.7 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு இழப்பொன்றினை பதிவுசெய்தது. 2021இல் போக்குவரத்து மற்றும் வலு உருவாக்கத்தின் முக்கிய துறைகளுக்கான பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனைகள் தொழிற்பாட்டு இழப்புக்களை விளைவித்த வேளையில், வான்வழி மற்றும் கைத்தொழில் துறைகள் தொழிற்பாட்டு இலாபங்களை உருவாக்கின.

ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் தேய்வடைதலானது ஆண்டு காலப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூ. 33.2 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க செலாவணி வீத வேறுபாட்டு இழப்பொன்றினை விளைவித்து ஒட்டுமொத்த இழப்பில் (வரிகளுக்கு முன்னர்) எதிர்க்கணியமாக நிறையேற்றப்பட்டு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2.4 பில்லியன் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021இல் ரூ. 82.2 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, வங்கித்தொழில் துறையிலிருந்தான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்பாடுகள் 2021இல் ரூ. 505.3 பில்லியனிற்கு ரூ. 123.5 பில்லியனினால் அதிகரித்திருந்த வேளையில், உள்நாட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான வைப்புக்கள் 2021 இறுதியளவில் ரூ. 140.1 பில்லியனிற்கு ரூ. 76.2 பில்லியனினால் அதிகரித்தன. அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மொத்த வெளிநின்ற வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் 2020இல் ரூ. 142.7 பில்லியனிலிருந்து 2021இல் ரூ. 161.1 பில்லியனிற்கு அதிகரித்தமைக்கு இலங்கை மின்சார சபை மற்றும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் என்பவற்றிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய வளர்ந்துவரும் படுகடன்கள் முக்கிய காரணமாயமைந்தன. அதற்கமைய, 2021 இறுதியளவில், இலங்கை மின்சார சபை மற்றும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் என்பவற்றிலிருந்தான வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த வர்த்தக கிடைக்கத்தக்கவைகளின் ஏறத்தாழ 90.1 சதவீதமாக விளங்கின. வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களின் போதாமையுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மோசமடையும் நிதியியல் நிலையானது காலந்தவறாததும் செலவு குறைந்ததுமான எரிபொருள் பெறுகைகளின் தடங்கல்களுக்கு வழிவகுத்துள்ளன. 2022 சனவரியில் காலந்தவறாத எரிபொருள் பெறுகையினை வசதிப்படுத்தும் மற்றும் அரசிற்குச் சொந்தமான இரண்டு வங்கிகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தங்கியிருக்கும் தன்மையினைக் குறைக்கும் பொருட்டு அவர்களது வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களுக்கான விகிதாசாரத்திற்கு அமைய உரிமம்பெற்ற வங்கிகளுக்கிடையில் எரிபொருள் கொள்வனவுகளுக்கான அத்தியாவசிய இறக்குமதி உண்டியல்களின் நிதியிடலைப் பகிர்ந்தளிப்பதனை வசதிப்படுத்தும் வகையில் மத்திய வங்கி தலையிட்டது. குறிப்பாக, இந்தியாவிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்கின்ற வேளையில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதியினை நோக்காகக் கொண்டு 2022 முன்னைய பகுதியில் இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான குறுங்கால கொடுகடன் வசதியினையும் அரசாங்கம் பெற்றுக்கொண்டது.

2021 ஆண்டு காலப்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயுவைக் கண்டறிவதனை மேம்படுத்துவதற்காக உத்வேகமிக்க தேசிய செயற்றிட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் முனைப்புடன் ஈடுபட்டது. சுயாதீனமான, செயற்றிறனான மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த முன்னோக்கிய சட்டவாக்க கட்டமைப்பொன்றினை நிறுவுகின்ற முதன்மையான நோக்குடன் 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டம் 2021 ஒத்தோபரில் சட்டமாக்கப்பட்டிருந்ததன் மூலம் பெற்றோலிய வளங்கள் மற்றும் தொடர்புடைய தொழிற்பாடுகளைக் கண்காணித்து முகாமைசெய்வதற்கு தெளிவான தேசிய முன்னோக்கிய கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. புதிய பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் சட்டவாக்கத்தினைத் தொடர்ந்து, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்திற்குப் பதிலாக தன்னிச்சையான ஒழுங்குமுறைப்படுத்துநராக இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை 2021 ஒத்தோபரில் தாபிக்கப்பட்டது. மேலும், பன்னாட்டுத் தொகுதி எல்லை நிர்ணயம் மற்றும் தற்காலப் போக்குகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், மன்னார், காவேரி மற்றும் இலங்கையின் நீர்த்தேக்கங்களை உள்ளடக்குகின்ற 871 சிறிய தொகுதிகளையும் மூன்று பாரிய தொகுதிகளையும் உள்ளடக்கியதாக புதிய கரைகடந்த ஐதரசன் காபனைக் கண்டறியும் தொகுதி வரைபடமொன்று 2021 யூலையில் வடிவமைக்கப்பட்டு வர்த்தமானியிடப்பட்டது. மேலும், 2020இல் வர்த்தமானியிடப்பட்ட இயற்கை எரிவாயு தொடர்பான தேசிய கொள்கையுடன் இசைந்து செல்லும் விதத்தில், எரிவாயுப் பயன்பாட்டு முதன்மைத் செயற்றிட்டத்தின் வரைவுடன் தொடர்புடைய ஆரம்ப செயற்பாடு 2021 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டதுடன் 2022இன் ஆரம்ப காலப்பகுதியில் இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



அட்டவணை 3.1

பெற்றோலியத் துறையின் செயலாற்றம்

விடயம்		2020(தற்)	2021(திருத்)	வளர்ச்சி வீதம் (%) 2020(தற்)	2021(திருத்)
இறக்குமதிகளின் அளவு ('000 மெ.தொ)					
மசகு எண்ணெய்		1,667	1,182	-9.5	-29.1
சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்		4,028	4,553	-15.0	13.0
நிலக்கரி		2,600	2,206	8.8	-15.1
திரவ பெற்றோலிய வாயு		437	422	1.7	-3.3
உள்நாட்டு திரவ பெற்றோலிய வாயு உற்பத்தி ('000 மெ.தொ)		25	17	-6.4	-34.1
இறக்குமதிகளின் பெறுமதி (ச.அ.டொ)					
மசகு எண்ணெய்	(ரூபில்)	207,565	123,865	-33.0	15.0
	(ஐ.அ.டொலில்)	583	625	-39.9	7.2
சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள்	(ரூபில்)	321,818	564,681	-33.4	75.5
	(ஐ.அ.டொலில்)	1,742	2,840	-35.6	63.0
நிலக்கரி	(ரூபில்)	40,194	55,118	3.8	37.1
	(ஐ.அ.டொலில்)	217	278	1.3	27.8
திரவ பெற்றோலிய வாயு	(ரூபில்)	43,812	64,436	1.5	47.1
	(ஐ.அ.டொலில்)	236	324	-2.2	37.2
மசகு எண்ணெயின் சராசரி விலை (ச.அ.டொ.)					
	(ரூபில்)	8,415	13,645	-31.6	62.2
	(ஐ.அ.டொலில்)	45.57	68.86	-33.8	51.1
பெற்றோலிய ஏற்றுமதிகளின் தொகை ('000 மெ.தொ)		798	853	-18.9	7.0
பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூபில்)		68,849	100,975	-26.1	46.7
	(ஐ.அ.டொலில்)	374	506	-28.3	35.6
உள்நாட்டு விற்பனைகள் - சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ('000 மெ.தொ)		4,600	4,246	-16.8	-7.7
இதில் பெற்றோல் (92 ஒக்டேன்) (இ)		1,139	1,238	-10.2	8.7
பெற்றோல் (95 ஒக்டேன்)		120	116	-23.6	-3.5
நன்னீர்க்க மசகு (ஈ)		1,750	1,875	-18.2	7.1
சீறுபடு மசகு		69	75	-18.8	8.2
மண்ணெண்ணெய்		176	188	-14.8	7.2
உலையெண்ணெய்		971	513	-4.0	-47.2
டீசல்		189	224	-60.2	18.6
நப்தா		165	11	1.7	-93.5
உள்நாட்டு விற்பனைகள் - திரவ பெற்றோலிய வாயு ('000 மெ.தொ.)		473	457	1.5	-3.3
உள்நாட்டு விலை (காலமுடிவில்) (ரூ/லீற்றர்)					
பெற்றோல் (92 ஒக்டேன்)		137.00	177.00	-	29.2
பெற்றோல் (95 ஒக்டேன்)		161.00	207.00	-	28.6
நன்னீர்க்க மசகு		104.00	121.00	-	16.3
சீறுபடு மசகு		132.00	159.00	-	20.5
மண்ணெண்ணெய்		70.00	87.00	-	24.3
உலையெண்ணெய்					
800 செக்கன்கள்		70.00	110.00	-27.1	57.14
1,500 செக்கன்கள்		70.00	110.00	-27.1	57.14
திரவ பெற்றோலிய வாயு (ரூ/கி.கி)					
லிட்ரோ வாயு		119.44	214.00	-	79.2
லாஃப் வாயு		119.44	227.20	-	90.2
பன்னாட்டு மசகு எண்ணெய் விலைகள் (ஐ.அ.டொலர்/ பீப்பாய்)					
பிறென்ட்		43.35	70.80	-32.3	63.3
வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் (WTI)		39.78	67.94	-30.2	70.8
பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகள் உலக எண்ணெய் நுகர்வு (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்) (உ.)		93.9	70.80	-6.4	1.8
உலக எண்ணெய் கேள்வி (நாளொன்றுக்கான மில்லியன் பீப்பாய்கள்)(உ.)		92.0	67.94	-8.6	6.0

(தற்) தற்காலிகமானது
(திருத்) திருத்தப்பட்டது
(இ) எல்லா பிரிமியம் யூரோ 3 உள்ளடங்கலாக
(ஈ) எல்லாவகை மசகு உள்ளடங்கலாக

நாலாங்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐஓசி பிஎல்சி
வரையறுக்கப்பட்ட லங்கா ஆபாயன (தனியார்) சேவிஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட லிட்ரோ காஸ் லங்கா கம்பனி
வரையறுக்கப்பட்ட லாஃப் காஸ் பிஎல்சி
இலங்கை கன்வெய் புளுன்பேர்க்
ஐ.அ.ஐக்கிய அமெரிக்கா வலுத் தகவல் நிர்வாகம்


புகையிரதப் போக்குவரத்து

இலங்கைப் புகையிரதம் 2021இல் நலிவடைந்த நிதியியல் செயலாற்றத்தினைப் பதிவுசெய்தது. தற்காலிகமான நிதியியல் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கைப் புகையிரதம் 2020இல் பதிவுசெய்த ரூ. 10.1 பில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில் ரூ. 10.3 பில்லியன் கொண்ட தொழிற்பாட்டு நட்டமொன்றினைப் பதிவுசெய்தது. இலங்கைப் புகையிரதத்தின் மொத்த வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021இல் 41.3 சதவீத குறிப்பிடத்தக்க குறைப்பொன்றுடன் ரூ. 2.7 பில்லியனாக விளங்கியமைக்கு கொவிட்-19 நோய்த்தொற்றின் ஏப்பிறல் மற்றும் ஓகத்து தோற்றப்பாடுகளினால் தூண்டப்பட்டு பயணிகள் போக்குவரத்திலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட 53.0 சதவீத சுருக்கம் முக்கிய காரணமாயமைந்தது. ஆண்டு காலப்பகுதியில் நடைமுறை மற்றும் மூலதனச் செலவினம் ரூ. 13.0 பில்லியனிற்கும் ரூ. 27.4 பில்லியனிற்கும் முறையே 11.2 சதவீதத்தினாலும் 19.6 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையினால் இலங்கைப் புகையிரதத்தின் மொத்த செலவினம் ரூ. 40.4 பில்லியனிற்கு 17.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தனியாள் ஊதியங்களின் குறைப்பு மற்றும் தொழிற்பாடுகளின் வீழ்ச்சியால் குறைவடைந்த எரிபொருள் செலவினம் என்பன நடைமுறைச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளாக அமைந்தன.

வான்வழிப் போக்குவரத்து

வான்வழிப் போக்குவரத்துக் கைத்தொழில் துறையின் செயலாற்றம் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று பரவியதுடன் பயணம் மற்றும் சுற்றுலா தொடர்புபட்ட நடவடிக்கைகளில் சடுதியான வீழ்ச்சியின் காரணமாக 2021 இல் குறிப்பிடத்தக்க் பின்னடைவினை அனுபவித்தது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, உலகளாவிய வான்வழிப் பயணக் கைத்தொழிலை முடக்கியது. பண்டாரநாயக சர்வதேச விமானநிலையத்தின் ஊடாக வானூர்திகளின் நடமாட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

பயணிகள் மற்றும் விமான இயக்கங்கள்



விநியோகிக்கப்பட்ட அளவு

	2021 அளவு (கி.லீ)	2020 அளவு (கி.லீ)
கொலொன்னாவை	2,268,475,401	2,357,655
முத்துராஜவெல	1,219,521,871	952,383
சாலைகள்	1,269,055,852	1,254,747
	4,757,053,124	4,564,785

பெற்றோலியப் பொருட்களின் விலைகள்

உற்பத்தி	2021	2020
பெற்றோல் (92 ஒக்டேன்)	177.00	137.00
பெற்றோல் (95 ஒக்டேன்)	207.00	161.00
ஒட்டோ டீசல்	121.00	104.00
சுப்பர் டீசல்	159.00	132.00
மண்ணெண்ணெய்	87.00	70.00
உலை எண்ணெய்		
பெற்றோல் 92		
‘- 800 செக்கன்கள்	110.00	96.00
‘- 1500 செக்கன்கள்	110.00	96.00





நிதியியல் மூலதனங்கள்

நிதியியல் செயலாற்றம்

வருவாய்

CPSTL நிறுவனத்தின் வருவாயனது செயன்முறைப்படுத்தல் வருமானம் மற்றும் போக்குவரத்து வருமானம் என்பன ஊடாக ஈட்டப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டில் வருவாய்க்காகன முக்கிய பங்களிப்பாக செயன்முறைப்படுத்தலில் இருந்தான வருமானம் 79 சதவீதமாகப் பதிவுசெய்த அதேவேளை இது 2020 இல் 81 சதவீமதமாகவிருந்தது.







கம்பனியானது பிரதானமாக அளவில் அதிகரிப்பின் காரணமாக மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டு காலப்பகுதியில் ரூ 14.3 பில்லியனாக 5 சதவீதம் கொண்ட வருவாய் வளரச்சியினை பதிவுசெய்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை அளவுகள் 2021 இல் 4.2 சதவீதத்தினால் அதிகரித்தள்ளன ஆயினும் இது 2019 ஈம் ஆண்டை விட குறைவானதாகும்.


இலாபத்தன்மை

நேரடிச் செலவுகளில் அதிகரிப்பு காரணமாக மீளாயப்படுகின்ற ஆண்டுக்கான வருவாய்களில் சிறிய அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும், மொத்த இலாபம் முன்னைய ஆண்டைப் போன்று ஒரே மாதிரியாக காணப்பட்டதுடன் மொத்த இலாப எல்லை 41 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை முன்னைய ஆண்டில் இது 44 சதவீதமாக இருந்தது.



கம்பனியானது செலவுகளில் அதிகரிப்பு காரணமாக முன்னைய ஆண்டுக்கு எதிராக 27சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வீழ்ச்சியுடன் ரூ. 1.3 பில்லியன் தொழிற்பாட்டு இலாபத்தினை பதிவுசெய்தது.






மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் வரிக்கு முந்திய இலாபமானது 2021இல் 3 ஆண்டுகளுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட சம்பளத்திருத்தத்தின் காரணமாக ஆளணிச் செலவில் அதிகரிப்பின் பிரதான விளைவாக 2020 இல் பதிவாகிய ரூ. 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.6 பில்லியனாக 28 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுக்கான ஆளணிச் செலவில் அதிகரிப்பினை தொடர்ந்து நிருவகித்தல் செலவுகளும் 13 சதவீதத்தினால் அதிகரித்தன. பிரதானமாக பொருளாதாரத்தின் வட்டி வீதங்களில் வீழ்ச்சியின் விளைவாக ஆண்டுகான நிதி வருமானம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதத்தால் குறைவடைந்தது.


வருவாயின் அதிகரிப்பிற்கு மத்தியில் வரிக்கு பிந்திய இலாபமானது 2020இல் பதிவாகிய ரூ 2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 41 ச சதவீதத்தை பதிவுசெய்து 1.2 பில்லியனாக குறைவடைந்தது. வரிவிதிக்கத்தக்க வருமானம் மீதான வருமான வரி தாக்கம் மற்றும் 2021இல் பிற்போடப்பட்ட வரி தாக்கம் ஆகிய இரண்டினையும் உள்ளடக்குகின்ற வருமான வரிச் செலவுகள் 2021 இல் ரூ. 413 மில்லியனாக இருந்த அதேவேளை 2020 இல் ரூ 213 மில்லியனாக இது பதிவாகியிருந்தது. 2021இல் அத்தகைய அதிகரிப்பிற்கான பிரதான காரணம் வரிக்கு முந்திய இலாபம் குறைவடைகின்ற போது வரிவிதிக்கத்தக்க வருமானம் மீதான வருமானச் செலவுகள் ரூபா 703 மில்லியனாக இருந்தும், 2020இல் பிற்போடப்பட்ட வரிச்செலவுகளின் திரும்பல் ரூ 453 மில்லியனாகவிருந்தும்கூட வருமான வரி வீதம் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது காரணமாக அமைந்தது.

கம்பனியின் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் பிரதானமாக வரையறை செய்யப்பட்ட நலக்கடப்பாடுகளின் கணிப்பீட்டு இழப்பினை உள்ளடக்குகின்றது.

நிதியியல் நிலை

மொத்த சொத்துக்கள்






ஐந்தொகையானது அதிகளவில் நடைமுறையல்லாச் சொத்துக்களை நோக்கி காணப்படுகின்றது. இது மொத்த சொத்துக்களின் 48 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. நடைமுறை சொத்துக்களில் மொத்த சொத்துகளின் 33 சதவீதத்திற் வகைகூறுகின்ற வர்த்தக


மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத் தக்கவைகளை நோக்கி காணப்படுகின்றன. ஏனைய நிதியியல் சொத்துக்களும் காசும் முறையே 5 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

மொத்த சொத்து தளமானது வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகளில் அதிகரிப்பினால் பிரதானமான துணையளிக்கப்பட்டு 2020 இன் ரூ. 32.5 பில்லியனுடன் ஒப்பிடுகையின் இவ் ஆண்டின் இறுதியில் ரூ. 38 பில்லியனாக 2021இல் 4 சதவீதத்தினால் அதிகரித்தது. செலவுகளில் அதிகரிப்பு மற்றும் பொருளாதாரம் மெதுவடைந்தமையின் காரணமாக வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக காசும் காசுக்கு சமமானவைகளும் குறைவடைந்தன.

தொழிற்படு மூலதனம்

நடப்புச் சொத்துக்கள் விகிதமும் உடனடி சொத்துக்கள் விகிதமும் 2021 இறுதியில் உள்ளவாறு முறையே 7.59 மற்றும் 7.24 ஆகவிருந்த அதேவேளை இரு விகிதங்களும் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளவற்றைவிட நடைமுறை பொறுப்புக்களில் கணிசமான அதிகரிப்பின் விளைவாக முன்னைய ஆண்டை விட கணிசமாக குறைவடைந்தன.





பங்குரிமை மூலதனமும் பொறுப்புகளும்


சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிட்டெட் கம்பனியின் சொத்துக்களின் 84 சதவீத நிதியிடலாக ரூ. 28.7 மில்லியன் கொண்ட தொகை பங்குடமையாளர் நிதியங்களுடன் நன்கு மூலதனமாக்கப்பட்டுள்ளது. கம்பனி, 2016 இல் அனைத்து கடன் பெறுதல்களையும் செலுத்தியுள்ளதுடன் இவ்வாண்டில் புதிய கடன் பெறுதல்கள் எதுவும் பெற்றக்கொள்ளப்படவில்லை சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிட்டெட்டின் மொத்த பொறுப்பு 2020 இன் ரூபா 5.36 பில்லியனிலிருந்து 2021இல் ரூ 5.31 பில்லியனாக குறைவடைந்தது.


சொத்துப் புரள்வு விகிதம்

சொத்துப் புரள்வு விகிதமானது விற்பனைகளை உருவாக்குவதற்கு கம்பனியின் அதன் சொத்துக்களின் பயன்பாட்டின் வினைத்திறனை அளவிடுகின்றது. சொத்து புரள்வு விகிதமானது 2021 இல் வருவாயின் அதிகரிப்பின் விளைவாக 2020 இன் 42 சதவீதத்திலிருந்து 2021 காலப்பகுதியில் 43 சதவீதத்திற்கு அதிகரித்தது.

பங்குரிமைமூலதனம் மீதான ஆதாயம்

கம்பனி, முன்னைய அண்டின் 7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுக்கு 4 சதவீதம் கொண்ட பங்குரிமைமூலதனம் மீதான ஆதாயத்தை பதிவு செய்துள்ளது. இவ்வீழ்ச்சிக்கு 2021இல் வரிக்கு பிந்திய இலாபத்தில் குறைவு பிரதான காரணமாக அமைந்தது.






முடுக்கு விகிதமும் மூலதன கட்டமைப்பும


கம்பனி சொத்துக்களில் 85 சதவிகிதமானவை பங்குரிமைமூலதனம் ஊடாக நிதியளிக்கபட்டுள்ளதுடன் மிகுதி 16 சதவீதமானவை நீண்டகால மற்றும் குறுகியகால படுகடன் ஊடாக நிதியளிக்கப்பட்டுள்ளன. கீழே வரைபடங்களில் காட்டப்பட்டவாறு பங்குரிமை மூலதனத்திலிருந்தான பங்களிப்பானது வரிக்கு பிந்திய இலாபத்தில் ஒன்றுசேர்தலில் காரணமாக 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் சிறிதளவு அதிகரித்துள்ளது.

கம்பனியின் சுயநிதி படுகடன் வேறுபாட்டு விகிதம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த 20 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2021 இறுதியில் 18 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

நிதியிடல் மூலங்கள் ரூபா (மில்லியன்)



பங்குறிமை மூலதனத்திற்கான கடன் பெறுதல் விகிதம் (தடவைகள்)




பங்குடமையாளர் பெறுமதி உருவாக்கம்


	2021	2020
பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.)	1.58	2.67
பங்கொன்றிற்கான தேறிய சொத்து (ரூ.)	38	36

பங்கொன்றிற்கான உழைப்பு 2021 இல் 1.58 ஆகவிருந்த வேளை அது 2020இல் 2.67 ஆகவிருந்தது. பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் பெறுமதி 2021 இன் இறுதியிலுள்ளவாறு 36 தடவைகளிலிருந்து 38 தடவைகளாக அதிகரித்துள்ளது. பங்கொன்றிற்கான உழைப்பில் அதிகரிப்பிற்கு 2021 ஆம் ஆண்டுக்கான இலாபத்தில் குறைவும் மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியில் தேறிய சொத்துக்களின் அதிகரிப்பின் காரணமாக பங்கொன்றிற்கான தேறிய சொத்து பெறுமதியில் அதிகரிப்பும் காரணமாக அமைந்தன.

ஒரு பங்கில் இருந்தான வருமானம் (இ. ரூபா)



ஒரு பங்குக்கான தேறிய சொத்துப் பெறுமதி (இ. ரூபா)



தயாரிக்கப்பட்ட மூலதனம்

1. முத்துராஜவலையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள்





சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டெட் (சிபெஸ்ரெலி) முத்துராஜவெல முனையம் மொத்தமாக 52 அலவலர்களுடன் நாளொன்றுக்கு 3 உற்பத்திகளினதும் (டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய்) 500 மெ.தொன்களை வழங்குவதற்கு 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் எரிபொருளுக்கான அதிகரித்த தேவைகள் காரணமாக மேற்குறித்த 3 உற்பத்திகளுக்கு மேலதிகமாக பெற்றோல் வழங்குதல் தொடங்கப்பட வேண்டியிருந்ததுடன் தற்போது முத்துராஜவெல முனையத்திலிருந்து 306 அலுவலர்களுடன் நாளொன்றுக்கு சுமார் 6000 மெ.தொ எரிபொருள் வழங்கப்படுகிறது. நாட்டில் எரிபொருளுக்கான கேள்வி எதிர்காலத்தில் பேணப்பட அல்லது அதிகரிக்கப்படவுள்ளதுடன் முத்துராஜவெல முனையத்திலிருந்து விநியோகிக்கப்படும் தற்போதைய அளவு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதற்கு அவசியமாக காணப்பாடுகிறது.

எனினும், முத்துராஜவெல முனையத்தை திட்டமிடும்போது ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் 52 ஊழியர்களுக்காக மாத்திரம் காணப்பட்டதுடன் தற்போது காணப்படுகின்ற வசதிகள் தற்போதுள்ள அலுவலர்களுக்கு போதாமல் காணப்படுகின்றது. வாகன தரிப்பிடம், பராமரிப்பு பணிகளுக்கான பொருட்கள் தேவையினை நிறைவுசெய்வதற்கான அதிகரிக்கப்பட்ட களஞ்சிய வசதிகள், பாதுகாப்பு அலுவலம், பணியாளர் ஓய்வு அறைகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை விஸ்தரிப்புகள் என்பன நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள மேம்படுத்தல்களாகும். மேலும், அலுவலர் விடுதிகள், விலைப்பட்டியல் அலுவலகம், மாநாட்டு மண்டபம் என்பனவும் கருத்திட்டத்தில் கூட்டிணைக்கப்படவுள்ளன. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டெட், பசுமைக் கட்டட எண்ணக்கருக்களுடனும் சக்தி வினைத்திறன் கட்டடக் கோவையுடனும் இணங்கியொழுகின்ற கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானித்துள்ளது.

முத்துராஜவெல முனையமானது ஓரளவு தானியக்கம் பெற்ற முனையமாவதுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் வேறு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டெட்டின் மொத்த சாலைகளுடன் ஒப்பிடுகையில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் என்ற நியதிகளில் பல அனுகூலங்களை கொண்டதாகும். நிரப்பும் நிலைதூண்களின் அனைத்து தளங்களும் 10 தடுப்பு அறை வீதித் தாங்கிகளை நிரப்பும் இயலளவுடையதுடன் வீதித்தாங்கிகளின் செயன்முறைப்படுத்தல் நேரம் வேறு நிரப்பு நிலையங்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவானதாகும். இதற்கு மேலதிகமாக, ஸ்ரீஆடீ-02 மிதவையில் இறக்கப்படும் உற்பத்திகள் துறைமுக கட்டணங்களுக்குட்படாது முத்துராஜவெல முனையத்திற்கு நேரடியாக அனுப்பபடுகின்றன. இம்முனையம் 2019 ஆம் ஆண்டளவில் தொழிற்பாட்டுக்கு வந்த வெளிச்சுற்றுவட்ட அதிவேகப் பாதையின் நுழைவில் அமையப்பெற்றுள்ளமை மற்றுமொரு முக்கிய அனுகூலமாகும். வெளிச்சுற்றுவட்ட பாதை கொழும்பிலிருந்து தொடங்குகின்ற அனைத்து அதிவேக பாதைகளையும் இணைப்பதுடன் குறைந்த தொழிற்படுத்தல் செலவுகளுடன் நாட்டின் எப்பாகத்தினையும் சென்றடைவதற்கு முத்துராஜவெல முனையத்தை இயலச்செய்கின்றது. புவியியல் அமைவிடத்தின் இவ் உபாயமிக்க அனுகூலமானது முத்துராஜவெல முனையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் உச்சப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு, கட்டட வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புசார் சேவைகள் அளவிடுகள் மற்றும் இடப் பரிசோதனைப் பணிகள் என்பவற்றை மேற்கொள்வதற்கான ஆலோசகர் ஒருவரின் பணியை சிபெஸ்ரெலி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆலோசகரின் முன்மொழிவு சிபெஸ்ரெலி மூலம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

2. கேட்போர்கூடம் மற்றும் மனித வள அபிவிருத்திப் பிரிவு அலுவகத்தின் புனரமைத்தலும் பழைய நிருவாக கட்டடத்தை புதுப்பித்தலும்





சிபெஸ்ரெலி கொலண்ணாவ எரிபொருள் விநியோக மையத்தில் மனித வள அபிவிருத்திப் பிரிவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக சிபெஸ்ரெலி நிறுவன ஊழியர்களின் அறிவு மற்றும் தேர்ச்சிகளை இற்றைப்படுத்தி மேம்படுத்தும் பணியினை வழங்குகின்றது. சிபெஸ்ரெலி கேட்போர்கூடம் மற்றும் மனித வள அபிவிருத்தி பிரிவு அலுவலகம் என்பவற்றில் தற்போது காணப்படுகின்ற வசதிகள் 25 ஆண்டுகளுக்கும் முன்னர் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் புனரமைக்கப்படுவது அவசியமாகும். உற்பத்தித்திறனும் உயர் தேர்ச்சியுமிக்க வேலைப்படைக்கு ஊழியர்களை பயிற்றுவித்து அபிவிருத்திசெய்வதற்கு நவீன பயிற்சி வசதி முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, பழைய நிருவாக கட்டடம் 6 வேறான பிரிவுகளை உள்ளடக்குவதுடன் இக்கட்டடம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதாகும். தொழிற்பாட்டு பாதுகாப்பு நிலமையில் கட்டடத்தை பேணுவதற்கு அழகுபடுத்தி புனரமைப்பது அவசியமாகக் காணப்படுகின்றது.

புனரமைப்பு பணி முன்னெடுக்கப்படுவதுடன் ஒட்டுமொத்தமாக 80 சதவீதம் 2021 நிதியியல் ஆண்டளவில் அடையப்பெற்றது.

3. கொலண்ணாவ எரிபொருள் விநியோக நிலையத்தில 17, 22, 23 ஆம் தாங்கிகளுக்கு உள்ளக மிதக்கும் கூரைகளை வடிவமைத்து, வழங்கி மற்றும் பொருத்துதல்







நிறுவனசார் தொலைநோக்கு மற்றும் பணி என்பவற்றுக்கு இசைவாக கப்பல் செப்பனிடல் முனையத் தொழிற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தொடர்சியாக பாடுபடுகின்றது. ஆவியாதல் மூலம் ஏற்படும் இழப்புகள் பெற்றோலிய உற்பத்திகளை கையாளுகின்ற தொழிற்பாட்டில் சிபெஸ்ரெலி மூலம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளிலொன்றாகும். ஆவியாதல் பொருளாதார இழப்பை ஏற்படுத்துவது மாத்திரமன்றி சூழலையும் மாசாக்குகின்றது. சிபெஸ்ரெலி நிறுவனம் பொறுப்புமிக்க நிறுவன பிரசை என்ற ரீதியில் ஆவியாதல் இழப்புகளை தணிப்பதற்கு இது தொடர்பில் முகாமைத்துவ கரிசனையை மேம்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்துதல் என்பது நிலையான குவிந்த கூரைகள் மீது ஆவியாதலை குறைப்பதற்கு அமெரிக்க பெற்றொலிய நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட முறையாகும். உள்ளக மிதக்கும் கூரைகள் வாயுவானது சிறுதுளைகளில் வெளியேறுவதை ஒழுங்குபடுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் வெடிக்கத்தக்க வாயுக்கள் வளிமண்டலத்திற்கு பாதுகாப்பான வழியில் வெளியேறுவதை இயலச்செய்கின்றது. உட்புறம் பொருத்தப்பட்ட நிலையான கூரை களஞ்சியத் தாங்கிகள் பொருளாதார ரீதியாக இலாபகரமான தெரிவாகவும் காணப்படுகின்றன. உள்ளக மிதக்கும் கூரையானது திரவ மேற்பரப்பின் பிரதான பாகத்தினை மூடுவதுடன் செயல்திறன்வாய்ந்த முத்திரையொன்றினூடாக வெளியேற்றம் 98 சதவீதம் வரை குறைக்கப்படக்கூடியதாக உள்ளது.

கொலண்ணாவ எரிபொருள் நிரப்பு விநியோகத்தில் 6 நிலையான கூரைகள், வெல்டிங், செய்யப்பட்ட உருக்கு, நிலையான உற்பத்தி களஞ்சிய தாங்கிகள் ஆவியாக்க இழப்புக்களை குறைப்பதற்கு உள்ளக மிதக்கம்

கூரைகளை பொருத்தவதற்கு தெரிவுசெய்யப்பட்டன. உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்துவதற்கான மொத்த முதலீடு ரூ. 120 மில்லியன் ஆகும். முன்மொழியப்பட்ட அபிவிருத்தியின் கீழ் 18, 19 மற்றும் 41 ஆம் இலக்க தாங்கிகள் திருத்தம் செய்யப்பட்டு உள்ளக மிதக்கும் கூரைகள் பொருத்துதல்கள் நிறைவுசெய்யப்பட்டன. இம்மூன்று தாங்கிகளும் தொடங்கப்பட்டு தற்போது வெற்றிகரமாக தொழிற்படுகின்றன. எஞ்சியிருக்கின்ற 17, 22 மற்றும் 23 ஆகிய மூன்று தாங்கிகளினதும் உள்ளக மிதக்கும் கூரை பொருத்தல் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருத்திட்டதினை நடைமுறைப்படுத்துவது பெற்றோலிய உற்பத்திகள் விரையமாவதைக் குறைப்பது மட்டுமன்றி இவ் அழகிய தீவின் பெறுமதிமிக்க சுற்றாடலையும் பாதுகாப்பதற்கு பங்களித்து எமது நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் என சிபெஸ்ரெலி நிறுவனம் நம்புகின்றது.

4. 6 ஆம் வலயத்தில் குழாய் முறைமையினை தரமுயர்த்தல்









நாட்டின் எரிபொருளுக்கான கேள்வி வருடாந்தம் உறுதியாக வளர்ச்சியடைகின்றது. இக்கேள்வியை நிறைவுசெய்வதற்கு நிலைத்துாண்களின் நிரப்பும் இயலளவினை அதிகரிப்பதற்கு சிபெஸ்ரெலி திட்டமிட்டுள்ளது. பெற்றோல் நிரப்பும் இயலளவினை மேம்படுத்துதல் இக்குறிக்கோளின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. புதிய உயர் இயலளவு பம்பிகளை பொருத்தவதன் மூலம் 7 ஆம் வலயத்தில் உள்ள முக்கிய பெற்றோல் நிரப்பும் நிலைத்துாணின் இயலளவு அதிகரிக்கப்படும். கொலண்ணாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் 6 ஆம் வலயத்தில் புதிய உற்பத்தி பம்பி நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மொத்த ஒப்பந்த பெறுமதி ரூ. 36 மில்லியன் என்பதுடன் பம்பி நிலைய நிர்மாணப் பணிக்கு சமாந்திரமாக குழாய் நீடிப்பு நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டது. நீடிப்பு நிர்மாணம் வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன் இக்கருத்திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 50 மில்லியன் ஆகும்.

வேண்டப்பட்ட குழாய்கள், வால்வுகள் மற்றும் அழுத்த அளவிகள் போன்ற ஏனைய துணைப்பொருட்கள் கொள்வனவு 2019 ஆம் நிதி ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. பெறுகையின் மொத்த பெறமதி ரூ. 55.7 மில்லியன் ஆகும்.

குழாயினை தயாரித்தல் ருமேனியாவில் யீஜ 54டு –தரம் டீ உற்பத்தி விபரத்துடன் உருக்கு ஆலையில் ருமேனியாவில் டீ தரத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. நிதி ஆண்டின் இறுதியளவில் குழாய்கள் 3 ஆம் தரப்பு பரிசோதனையினைக் கொண்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டன. அமைவிடத்துக்கு பொருட்கள் ஒப்படைக்கபட்டுள்ளதுடன் 2022 இன் முதலாவது காலாண்டுக்குள் நிறைவுசெய்வதற்கு

எதிர்பார்க்கப்படுகின்றது. குழாய்களை பொருத்துதல் 2022 இன் இறுதியளவில் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

5. முத்துராஜ முனையத்தில் 6, 7 மற்றும் 8 ஆம் தாங்கிகளுக்கான உள்ளக மிதக்கும் கூரைகளை வடிவமைத்தல் வழங்குதல் மற்றும் பொருத்துதல்





நிறுவனசார் தொலைநோக்குக்கும் பணிக்கும் இசைவாக சிபெஸ்ரெலி முனையத் தொழிற்பாடுகளின் வினைத்திறன்களை மேம்படுத்துவற்கு தொடர்ந்தும் பாடுபடுகின்றது. ஆவியாதல் மூலம் ஏற்படும் இழப்புகள் பெற்றோலிய உற்பத்திகளை கையாளுவதில் சிபெஸ்ரெலி எதிர்கொள்கின்ற முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆவியாதலானது பொருளாதார இழப்பு மாத்திரமன்றி சுற்றாடலையும் மாசுமடுத்துகின்றது. சிபெஸ்ரெலி பொறுப்பு மிக்க நிறுவன பிரசை என்ற வகையில் ஆவியாதல் இழப்புகளை தணிப்பதற்கு இந்நோக்கிலான கவனத்தை முகாமைத்துவம் பயன்படுத்தியுள்ளது.

உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்துதல் என்பது குவிந்த நிலையான கூரை தாங்கிகள் மீது ஆவியாதலை தடுப்பதற்கு அமெரிக்க பெற்றொலிய நிறுவனத்தினால் பரிந்துரையாக்கப்பட்ட முறையாகும். உள்ளக மிதக்கும் கூரைகள் வாயு துளைகளை ஒழுங்குபடுத்தவதற்கு வடிவமைக்கபட்டுள்ளதுடன் வெடிக்கத்தக்க வாயுக்களை வளிமண்டலத்தக்கு பாதுகாப்பான விதத்தில் வெளியேற்றுகின்றன. உட்புறம் நிலையான கூரை பொருத்தப்பட்ட களஞ்சிய தாங்கிகள் பொருளாதார ரீதியாக இலாபமிக்க தெரிவொன்றாகவும் காணப்படுவதுடன் உள்ளக மிதக்கம் கூரை திரவ மேற்பரப்பின் பெரும்பான்மையான பாகத்தை மூடி செயல்திறன் வாய்ந்த முத்திரையொன்றினூடாக வெளியேற்றத்தை 98 சதவீதம் வரை குறைக்கின்றது.

முத்துராஜவல முனையத்தில் 3 நிலையான குவியக்கூரை, வேல்டிங் செய்யப்பட்ட உருக்கு மற்றும் நிலைக்குத்தான பெற்றோல் களஞ்சிய தாங்கிகள் ஆவியாதல் இழப்புக்களை குறைப்பதற்காக உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்தவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. உள்ளக மிதக்கும் கூரைகளை பொருத்துவதற்கான மொத்த முதலீடு ரூபா 70 மில்லியன் ஆகும். முன்மொழியப்பட்ட அபிவிருத்தியின் கீழ் 6 மற்றும் 7ம் தாங்கிகளின் திருத்தல்கள் மற்றும் உள்ளக மிதக்கும் கூரை பொருத்துகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவை பொருத்தப்பட்டு தற்போது வெற்றிகரமாக தொழிற்படுகின்றன. 8 ஆம் தாங்கிக்கான உள்ளக மிதக்கும் கூரைப் பொருத்தல் முன்னெடுக்கப்படுகிறது. இக்கருத்திட்டம் 2022 நிதியாண்டியின் இறுதியளவில் ஒட்டுமொத்தமாக 80 சதவீத முன்னேற்த்தை பதிவுசெய்தது. இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதனூடாக பெற்றொலிய உற்பத்திகளின் விரையம் குறைக்கப்படுவது மாத்திரமன்றி அழகிய இந்நாட்டின் விலை மதிப்பற்ற எமது சூழலுக்கு பங்களிப்பதற்கும் எமது நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டுவதுமாக அமையும்.

6. 6. கொலண்ணாவையில் 7000 கன மீ. மற்றும் 15000 கன மீ. களஞ்சிய தாங்கிகள் இரு எண்ணிக்கைகளை நிர்மாணித்தல்





இலங்கையில் வருடாந்தச் சராசரி எரிபொருளுக்கான கேள்வி 4-5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இக்கேள்வி அதிகரிப்புக்கு இசைவாக தரப்பட்ட ஏதேனும் நேரத்தில் குறைந்தது 30 நாள் கையிருப்புக்களை பேணும் பொருட்டு போதுமான களஞ்சிய வசதிகளை அபிவிருத்திசெய்ய வேண்டியுள்ளது. இந்நிலமையைப் பகுப்பாய்வுசெய்து எரிசக்தி அமைச்சானது இலங்கையிலுள்ள எரிபொருள் களஞ்சிய வசதிகளை 100,000 மெ.தொன்களால் அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக் கொண்டுள்ளது.



எரிசக்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்குறித்த தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கான

எண்ணிக்கை	பண்டம்	கொள்ளவு (kP3)	அடர்த்தி	கொள்ளவு (மெ.தொ)
தாங்கி E	காஸ்லைன் 92	15,000	0.745	11,175
தாங்கி F	நப்தா/காஸ்லைன்	7,000	0.690	4,830
தாங்கி I	நப்தா/காஸ்லைன்	7,000	0.690	4,830
	மொத்தம்	29,000		20,835

வழிமுறையாக பின்வரும் கொள்ளளவுகளுடன் கொலண்ணாவ எரிபொருள் விநியோக நிலையத்தில் 3 களஞ்சிய தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு சிபெஸ்ரெலி நிறுவனம் தீர்மானித்தது.

தாங்கிகளின் நிர்மாணம் இன்டோ ஈஸ்ட் எஞ்சினியரிங் கன்ஸ்ரக்ஸன் (லங்கா) (பிரைவெட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. தாங்கியினை நிர்மாணிப்பதன் மீதான மொத்த முதலீடு ரூ. 1,270 மில்லியன் ஆகும். கொலண்ணாவ முனையத்தில் முன்மொழியப்பட்ட கொள்ளளவு விரிவாக்கத்தின் கீழ் 44 ஆம் இலக்க தாங்கி (15000 கன மீ.) 2021 இறுதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அடுத்த இரு தாங்கிகளும் 2022ம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு தொடங்கப்படும்.

கிழக்கு பிராந்தியத்திற்கான சிபெஸ்ரெலி நிறுவனத்தின் விநியோக மையமாக மட்டக்களப்பு இலங்கை மொத்தச் சாலை விளங்குகின்றது. இச்சாலை பெற்றோலுக்காக 350,000லீ இயலளவை உடைய மற்றும் டீசலுக்கான 814,000லீ இயலளவுடைய 13 உற்பத்தி களஞ்சிய தாங்கிகளை கொண்டுள்ளது. பிந்திய கேயுயு தரநியமங்களுக்கு இணங்க இம்மொத்தச்சாலையின் தீயணைப்பு முறைமை இயலளவை மேம்படுத்தும் தேவைப்பாட்டினை சிபெஸ்ரெலி நிறுவனம் இனங்கண்டுள்ளது. முறைமை மேன்படுத்தலின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள முக்கிய நடவடிக்கைகளாவன:

- 350 கன மீ. தீயணைப்பு நீர்த்தாங்கி.
- சுழல் குழாய், சுழற்சி கண்காணிப்பாண்கள், தனிம வால்வுகள் மற்றும் நான்கு முனை பீச்சு கருவி என்பவற்றுடன் 6 அங்குல மூடப்பட்ட தீயணைப்பு நீர்த் குழாய் முறைமை.
- 1250 US gpm டீசல் எஞ்சின் பம்பி நிலையம்

350 கன மீ. கொள்ளளவு தீயணைப்பு நீர்த் தாங்கி கருத்திட்ட நிர்மாணம் லாப்ஸ் எஞ்சினியரிங் பிரைவட் லிமிட்டட்டிற்கு ரூ 15 மில்லியன் மொத்த கருத்திட்ட செலவில் வழங்கப்பட்டதுடன் ஏறத்தாழ 90 சதவீதமான பணி 2021 நிதியாண்டு இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

7. 350 கன மீ. தீயணைப்பு நீர்த்தாங்கி நிர்மாணம்



8. 3 ஆம் வலயத்தில் நிரப்பும் நிலைத்தூண் நிர்மாணம









சிபெஸ்ரெலி நிறுவனம், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தான விமான பிரிவிற்கு புகையிரத தாங்கிகள் ஊடாக சுமார் 38 மில்லியன் லீற்றர் ஜெட் யு1 விமான எரிபொருளை வழங்குகின்றது. கொலண்ணாவ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 3 ஆம் வலயத்தில் தற்போது காணப்படுகின்ற விமான எரிபொருள் புகையிரத தாங்கி நிரப்பும் வசதி நிழலின்றி திறந்த நிரப்பும் வசதியொன்றாக தொழிற்படுத்தப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் மோசமான வானிலை நிலமைகளால் இடையூறுக்குள்ளாக்கப்படுகின்றன. சில சந்தரப்பங்களில் சுமார் 5 புகையிரத தாங்கி தொகுதிகள் மாதமொன்று அனுப்பப்படாது ஏறத்தாழ ரூ. 36 மில்லியன் கொண்ட அமையச் செலவினை தோற்றுவிக்கின்றன. அத்தகைய அமையச் செலவுகளை தவிர்ப்பதற்கு நிழலுடன் கூடிய புகையிரத தாங்கி நிரப்பு நிலைத்தூண் ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் போது நிலைத்தூண் நிரப்புவதன் பாதுகாப்பும் நிரப்பும் நிலைத்தூணை நிர்மாணிப்பதன் வாயிலாக மேம்படுத்தப்படலாம்.

இதன் பின்னணியில், 3 ஆம் வலய விமான எரிபொருள் வசதியில் புதிய நிரப்பும் நிலைத்தூணை நிர்மாணிப்பதில் ரூ 32.8 மில்லியன் கொண்ட முதலீடு சிபெஸ்ரெலி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூரை கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு தளத்தின் முக்கிய பிரிவுகள் 2020 நிதியாண்டு காலப்பகுதியில் நிறைவடைந்து சுமார் 90 சதவீதமான பணி 2021 நிதியியல் ஆண்டில் இறுதியளவில் முடிவடைந்தள்ளது. சர்வதேச விமான தொழிற்பாட்டிற்கான எரிபொருள் வழங்கல் எவ்விதத்திலேனும் இடைத்தடங்களுக்குட்படக்கூடாது என்பதனால் இக்கருத்திட்டத்தின் முன்னேற்றம் கவனமாக முன்னெடுக்கப்படுகிறது. ஆகையினால் கட்டமைப்பு கருவிகளை வெளியிட வடிவமைத்து வேலைத்தளங்களில் வடிவமைத்து வர்ணம் பூசுவதற்கும் அமைவிடத்தில் ஒன்று சேர்ப்பதற்கும் விசேட வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

9. 3, 14 மற்றும் 47 ஆம் இலக்க தாங்கிகளுக்கான பழுதுபார்த்தல் – கொலண்ணாவ







சிபெஸ்ரெலி நிறுவனத்தின் முதன்மை குறிக்கோள் களஞ்சிய தாங்கிகளை ஒரே சீர்மையாகப் பேணுவதாகும். தாங்கியின் நிலையும் தொழிற்பாட்டு பொருத்தப்பாடும் உலகளாவிய தரத்தினாலான பெற்றொலிய கைத்தொழில் நியமங்களுக்கிணங்க வழமையான பரிசோதனைகளை நடாத்துவதன் மூலம் கண்காணிக்கபட்டு மதிப்பிடப்படுகின்றன. களஞ்சிய தாங்கி பராமரிப்பு அதற்கேற்றவாறு அட்டவணைப்படுத்தப்பட்டள்ளது. கொலண்ணாவ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 3, 14, 47 ஆம் இலக்க தாங்கிகள் 2020 ஆம் ஆண்டின் பழுதுபார்த்தலுக்கான அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தன.

அ. 3 ஆம் இலக்க தாங்கி நிலைக்குத்தானதும் குவியக்கூரை பொருத்தப்பட்ட கூரையும் வெல்டிங் செய்யப்பட்ட தாங்கியுமாகும். இது, 12,500 கன மீ. கொள்ளளவினை கொண்டது (விட்டம் 31மீ. உயரம் 17.5மீ.) 1999 இல் நிர்மாணிக்கப்பட்டது. துருப்பிடித்தல்கள் காணப்பட்டதா என்பதனை தாங்கி கூரையின் தூண்கள் ஊடாக தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு அவதானிக்கப்பட்டது. சிபெஸ்ரெலி நிறுவனத்தின் பரிசோதனை பிரிவு தாங்கியின் வெளிப்புற அடிப்பகுதியில் வெல்டிங் செய்யப்பட்ட பகுதியினை வெல்டிங் செய்து நிரப்பி வர்ணம் பூசுவதற்கும் பரிந்துரைத்தது.

ஆ. 14 ஆம் இலக்க தாங்கி கும்பு/ நிலையான கூரையினையுடையதும் ரிவெட் ஆணிகள் பொருத்தப்பட்ட 1,00 கன மீ. கொள்ளளவினை கொண்டது. (விட்டம் -16.5மீ, உயரம் 8.92மீ) இது 1937 இல் நிர்மாணிக்கப்பட்டது. இத்தாங்கி தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வேண்டப்பட்ட சிறிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. சிபெஸ்ரெலி நிறுவனத்தின் பரிசோதனைப் பிரிவு அனைத்தையும் உள்ளடக்கிய பரிசோதனையை அனைத்தையும் உள்ளடக்கிய பரிசோதனையை மேற்கொண்டு ஒட்டுமொத்த கூரைத்தகடுகளையும் மாற்றீடு செய்வதற்கும் கூரையின் கட்டமைப்பினை மீள வர்ணம் பூசுவதற்கும் தாங்கியின் ஒட்டுமொத்த அடிப்பாகம் மற்றும் உச்ச அடியின் 300 மீமீ ஓட்டு பகுதியும் வர்ணம் பூசப்பட்டு ஏனைய சிறிய பழுது பார்த்தல்கள் செய்யப்பட வேண்டுமென பரிந்துரைத்தது.

இ. 47 ஆம் இலக்க தாங்கி கும்பு /நிலையான கூரை வெல்டிங் செய்யப்பட்ட தாங்கியும் 11,680 கன மீ. கொள்ளளவினைக் கொண்டது. (விட்டம-34.15 மீ, உயரம் 14.86 மீ) இது 1991 இல் நிர்மாணிக்கப்பட்டது. இத்தாங்கிக்கு சிறிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு 2008 இல் தொட்டி மாற்றீடு செய்யப்பட்டு இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சிபெஸ்ரெலி நிறுவனத்தின் பரிசோதனை பிரிவு புறப்பகுதி மீது விரிவான பரிசோதனையினை மேற்கொண்டு ஒட்டு மொத்த கூரைத்தகடுகளையும் மாற்றீடு செய்வதற்கும் தாங்கியினை மீள வர்ணம் பூசி ஏனைய சிறு பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கும் பரிந்துரைத்தது.

2021 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணியின் சுமார் 67 சதவீதமான முன்னேற்றம் எய்தப்பட்டன.

10. SPBM கப்பல் செப்பனிடல் – முத்துராஜவெல







முத்துராஜவெல இரட்டை வழி மிதவையானது முத்துராஜவெல தாங்கி பண்ணைக்கு தனியான 18 அங்குல குழாய் இணைப்பு ஊடாக தூய சுத்தகரிக்கப்பட்ட உற்பத்திகளை (டீசல் மற்றும் பெற்றோல்) மற்றும் எரிபொருள் எண்ணெய் இறக்கும் நோக்கத்திற்காக 2010 ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டது. இந்நோக்கத்திற்காக இது இருவேறான குழாய்ச் சுருள்களை கொண்டுள்ளது. முத்துராஜவெல SPBM, சிபெஸ்ரெலி நிறுவனத்திற்கு மாத்திரமன்றி ஒட்டுமொத்த தேசத்திற்கும் இன்றியமையாத கட்டமைப்பொன்றாகும். இது நாட்டிற்கு பிரதான சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளை இறக்கும் மையமாகக் காணப்படுவதுடன் முத்துராஜவெல முனையத்திற்கு உள்நோக்கி வரும் உற்பத்தியினை இறக்குவதற்கு ஒரேயொரு வசதியமாகும். முத்துராஜவெல ளீடீஆ ஊடாக சராசரியாக வருடாந்தம் சுமார் 40 எண்ணிக்கையான தாங்கி கப்பல்களில் 1 மில்லியன் மெ. தொன்னுக்கும் அதிகமாக சுத்தகரிக்கப்பட்ட உற்பத்திகளை இறக்கப்படுகின்றன.

8 வருடங்கள் கொண்ட வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு பின்னர் 2017 செப்டெம்பர் தொடக்கம் உலை எண்ணெய் முறைமையில் மிதவையின் பல்பொருள் விநியோக பிரிவில் முத்திரை கசிவு எற்பட்டது. இதன் காரணமாக முக்கிய பராமரித்தலுக்கான சரியான காலப்பகுதியினை இனங்காண்பதற்கு முறைமையினை சிபெஸ்ரெலி நிறுவனம் உன்னிப்பாக கவனித்தது. மேற்குறித்த முத்திரை கசிவுக்கு மேலதிகமாக 2019 இல் தொழில்நுட்பக்குழு பெற்றோல் பல்பொருள் விநியோக பிரிவு முறைமையிலிருந்து மற்றுமொரு சிறிய முத்திரை கசிவினை அடையாளப்படுத்தியது.

மிதவையின் நிலமையினை தொழில்நுட்பக்குழு பகுப்பாய்வுசெய்து தயாரிப்பாளரின் பரிந்துரையுடன் தாமதமின்றி மிதவை தயாரிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் மிதவைக்கு முக்கிய பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

கடலில் மேலும் 5 தொடக்கம் 8 ஆண்டுகள் பயன்பாட்டிற்காக மிதவையின் பழுதுபார்த்தலுக்காக கப்பல் செப்பனிடல் முன்னெடுக்கப்பட்டது. இது முத்துராஜவெல மிதவையின் முதலாவது கப்பல் செப்பனிடலாகும். கப்பல் செப்பனிடலின் கீழ் பராமரிப்பு செயற்பாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

01. பல் பொருள் விநியோக பிரிவின் பழுதபார்த்தலை நிறைவுசெய்தல்.

02. மிதவையின் உட்பகுதியை சுத்தம்செய்து. பழுதுபார்த்து, வரணப்பூச்சினை முடிவுறுத்தல்.

03. சுழலும் முறைமையில் பழுதுபபர்த்தலை நிறைவுசெய்தல்.

04. மிதவையின் கதோட்டு பாதுகாப்பு முறைமையினை மாற்றீடுசெய்வதை நிறைவுசெய்தல்.

இப்பழுதுபார்த்தல்கள் மிதவை தயாரிப்பாளரான IMODCO Services நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழும் 3 ஆம் தரப்பு அளவீட்டாளராக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ரீதியான வழிக்காட்டல்களின் கீழும் மேற்கொள்ளப்பட்டது.

SPMB மிதவையின் பாதுகாப்பையும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டினையும் செப்பனிடலை நடாத்துவதன் மூலம் 5 ஆண்டு காலப்பகுதிக்கு உத்தரவாதமளிக்கபட்டுள்ளது. ஏனைய நன்மைகளானவை மிதவை தொழிற்பாடுகளுக்கான இரட்டை பாதை கிடைக்கப்பெறுகின்ற தன்மையினை உள்ளடக்குகின்றது. செப்பனிடலுக்கு முன்னர் தொழிற்பாடுகளுக்காக ஒரு வழி மாத்திரம் கிடைக்கப்பெற்றது. மிதவை தொழிற்பாடுகளின் சார்ந்திருக்கும் தன்மை செப்பனிடலுடன் அதிகரிக்கப்பட்டுள்ளது.



மனித மூலதனம்

ஏதேனும் நிறுவனத்தின் மிக முக்கிய மூலதனம் மனித மூலதனம் ஆகும். ஏனெனில் அது கூட்டான அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம், பயிற்சி மற்றும் ஆரோக்கியம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. சிபெஸ்ரேலி நிறுவனத்தில் நாம் எமது தொழிலின் வெற்றிக்கு குழுவாகவும் தனிப்பட்டவர்களாகவும் அபரிமிதமாக பங்களிக்கின்ற எமது தொழிலின் இன்றியமையாத சொத்தாக எமது ஊழியர்கள் விளங்குகின்றனர் என நாம் நம்புகின்றோம். முறையான மனித வள கட்டமைப்பினை பின்பற்றுவதன் வாயிலாக ஊழியர்களின் தொழில் அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டு செயலாற்றுவதற்கு நியாயமான வெகுமதிகள் அளிக்கப்படுகின்றன என உறுதிசெய்வதன் மூலம் எமது மனிதவள இயலளவின் தரத்தினை நாம் மேம்படுத்தி, விருத்தி செய்கின்றோம்.

நாம் கவனம்செலுத்தும் முக்கிய துறைகள

- ஊழியர் பலவகைமை மற்றும் சமவாய்ப்பு
- நியாயமான கொடுப்பனவு மற்றும் ஏனைய நன்மைகள்
- வெகுமதிகளும் அங்கீகரித்தலும்
- பயிற்சி மற்றம் தொழில்சார் அபிவிருத்தி
- ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

முக்கிய குறிகாட்டிகள்

2630
ஊழியர்களின் எண்ணிக்கை


6.9 பில்லியன் ரூபா
ஊதியம் மற்றும் நன்மைகள்

2.7 மில்லியன் ரூபா
பயிற்சி மற்றும் அபிவிருத்தி முதலீடு

சிபெஸ்ரேலி நிறுவனம் ஆளுகை கட்டுப்பாட்டுடன் சிறந்து விளங்குவதற்கு ஊக்கமுள்ள மக்களுடன் ஒன்றிணைந்து அதிகம் ஊக்கமளிக்கபட்ட அணிகளின் ஒரு பாகமாக பணியாற்றுவதற்கு சிறந்த இடத்தை வழங்குவதன் வாயிலாக அதன் ஊழியர்களுக்கு முதன்மையாக பெறுமதியினை உருவாக்கவதுடன் ஊழியர்களின் உற்பத்திதிறன் மிக்க இலக்குகளுக்கு ஊழியர்களுக்காக கம்பனி எவ்வாறு பெறுமதியினை உருவாக்குகின்றது, மற்றும் கொள்கை கட்டமைப்புகள், முறைமைகள், செயன்முறைகள் என்பன செயற்படுத்தப்பட்டுள்ளன. சிபெஸ்ரேலி நிறுவனத்தின் 2,630 ஊழியர்களைக் கொண்ட அணி எமது உபாய திட்டத்திற்கு பின்னாலிருந்து இயக்கி எமது நிறுவன விழுமியங்களுளை உயிர்ப்பூட்டுகின்றன.

ஊழியர் பல்வகைமையும் சம வாய்ப்பும்

அனைவரையும் உள்ளடக்கிய சமத்துவத்திற்கான எமது அர்ப்பணிப்பானது பாலினம், இனம், மதம், வயது, தேசியம், சிவில் அந்தஸ்து, அல்லது அரசியல் விருப்பு என்பவற்றை பொருட்படுத்தாது ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி வாய்புகளிலிருந்து மற்றும் பதவி உயர்வுகள் வரை எமது மனித வளச் செயன்முறைகள் முழுவதும் உட்பொதிந்துள்ளன. பன்மைத்துவ பின்னணிகள், சமூக அந்தஸ்துகள், கல்வி, ஆக்கத்திறன் மட்டம், அனுபவம் மற்றும் சனத்தொகை போன்றவற்றிலிருந்து வருகின்ற மக்களை எமது கம்பனிக்கு நாம் வரவேற்கின்றோம். பல்வகைமையானது சிறந்த பெறுபேறுகளை தருவதற்கு நிறுவனத்திற்கு உதவுகின்ற தனித்துவம், ஆக்கத்திறன்கள், ஆலோசனைகள் என்பவற்றுடன் பங்களிப்பதற்கு ஒவ்வொரு ஆளையும் ஊக்கவிக்கின்றது. சிபெஸ்ரேலி நிறுவனத்தில் நாம் ஊழியர் பல்வகைமையினதும் சமவாய்ப்பினதும் முக்கியத்துவத்தினை புரிந்துகொள்கின்றோம் என்பதுடன் பல்வகைமையினையும் அனைவரையும் உள்ளடக்குவதனையும் பேணி ஊக்கவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இக்கடமைபொறுப்பினை நாம் மனத்திற்கொண்டு, தற்போது நாம் கம்பனியின் வேறுபட்ட பிரிவுகளில் 04 மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்கி வருகின்றோம். அனைத்து இனங்களையும் மதத்தையும் உள்ளடக்கி நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவதுடன் 12 சதவீதமான பெண் ஊழியர்கள் பிரதிநிதிப்படுத்துகின்றனர். பெண்களின் பிரதிநிதித்துவம் நிறைவேற்று தரமல்லாத தரத்தில் ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படுகின்ற அதேவேளை நிறைவேற்று தரங்களில் அது 30 சதவீதமாக காணப்படுகின்றது. அதற்கு காரணம் நாம் ஈடுபட்டுள்ள தொழிற்துறையின் தன்மையாகும்.



நன்மைகள், வெகுமதிகள் மற்றும் அங்கீகாரம்
நெருக்கடி நிலையிலும் கூட, ஊழுவுடு தனது ஊதியக் கொள்கைகள் மற்றும் தரங்களைப் பராமரித்து, ஊழியர்களின் 100மூ வேலைப் பாதுகாப்பை உறுதிசெய்தது அத்துடன் வருடாந்திர போனஸ் கொடுப்பனவுகள் வழக்கம் போல் வழங்கப்பட்டன. தொற்றுநோய் காரணமாக ஊழியர்களின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான சில ஒத்திவைப்புகள் நிவாரணமாக அனுமதிக்கப்படுகின்றன.


CPSTL இன் வெகுமதி கட்டமைப்புகள்

வெளிப்படைத்தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லாமல் வணிகம் முழுவதும் ஒரே சீரான தரநிலைகளை பராமரிக்கும் தரங்களுக்கு எதிராக இது நியாயமான மற்றும் சமமான அளவுகோலாக உள்ளது. அனைத்து ஊழியர்களும் வரையறுக்கப்பட்ட திறன் கட்டமைப்பின் அடிப்படையில் வருடாந்திர செயல்திறன் மதிப்பீடுகளுக்கு உட்படுகிறார்கள்.

CPSTL இன் நிரந்தர பணியாளர்களுக்கு வழங்கப்படும் நன்மைகள் பின்வருமாறு

நிரந்தர பதவியணிக்கான ஊழியர் நன்மைகள்	விபரம்
விடுமுறை	
- வருடாந்த விடுமுறை	14 நாட்கள்
- அமைய விடுமறை	7 வேலை நாட்கள்
- மருத்துவ விடுமறை	21 வேலை நாட்கள்
- மகப்பேற்று விடுமுறை	- 84 வேலை நாட்கள்
	- 84 அரை வேலை நாட்கள்
	- சம்பளமற்ற விடுமுறை 84 நாட்கள்
- விபத்து விடுமுறை	பணியில் இருக்கும் போதான விபத்து
- பதில் விடுமறை	ஒரு மாதத்தில் 4 சனிக்கிழமைகள் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் 2 நாட்கள் விடுமுறையையும் மேலதிக நேரக்கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வர்
- விசேட விடுமுறை	விசேட நிகழ்வுகளுக்கு (தேர்தல், ஊரடங்கு போன்றன)
- கடமை விடுமுறை	அலுவலக கடமைகளுக்கான விசேட நிகழ்வுகள்
- சம்பளமற்ற விடுமுறை	வெளிநாட்டு கற்கைகள், பயிற்சி, செயலமர்வு போன்றன.
சம்பள உயர்வு	ஊழியரின் பணி, வரவு மற்றும் நடத்தை மதிப்பீடு செய்யப்படும்
கொடுப்பனவுகள்	உணவுக் கொடுப்பனவுகள், பயணக் கொடுப்பனவுகள், முன்னைய கொடுப்பனவுகள், வருகைக்கான ஊக்குவிப்பு, மாற்றல் கொடுப்பனவுகள், வருடாந்த விடுமுறைக் கொடுப்பனவுகள், வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள், வாராந்த விடுமுறை நாள் கொடுப்பனவுகள், உத்தியோகபூர்வ தொலைபேசி நன்மைகள்.
மிகையூதியம்	மருத்துவ, வருடாந்த மிகையூதியம்
கடன்கள்	
- இடர் கடன்	10 மாத சம்பளம். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.
- வீட்டுக் கடன்கள்	காணி அல்லது வீட்டை வாங்குவதற்கு அல்லது வீட்டைக் கட்டுவதற்கு வழங்கப்படும் சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும் 300 மாதங்களில் அல்லது ஊழியரின் மீதிச் சேவைக்காலத்தில் எது குறைவானதோ அதில் மீளப் பெறப்படும்.
- வீட்டுத் திருத்தக் கடன்	வீட்டைத் திருத்துவதற்கு வழங்கப்படும், 120 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.
- வீட்டு வசதிக் கடன்	தளபாடங்களை வேண்டுவதற்கு. 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.
- சிக்கன சங்கக் கடன்	03 மாத சம்பளம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.
- கார் கடன்	03 மாத சம்பளம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மட்டும். இலகுவான சலுகை வட்டி வீதம்.
- மோட்டார் சைக்கில் கடன்	60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.
- முச்சக்கர வண்டிக் கடன்	60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.
முற்கொடுப்பனவு	
- விழாக்கால முற்கொடுப்பனவு	வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும்
- புது வருட முற்கொடுப்பனவு	வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும்
- பாடசாலைப் புத்தகங்களுக்கான முற்கொடுப்பனவு	வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும்
விருது வழங்கல்	ஊழியரின் சேவை அடிப்படையில் தங்கியுள்ளது
நலன்புரி சார் நன்மைகள்	- ஒவ்வொரு ஊழியரும் 3 பகல் மற்றும் 2 இரவுகள் குடும்பத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விடுமுறை பங்களாவில் தங்குவதற்கு உரித்துடையவர்கள். - சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விளையாட்டு களரி நிகழ்வுகளில் பங்குபற்றல் - வருடாந்த சுற்றுலா - இரத்ததான நன்கொடை முகாம் - சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனையங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள் - சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வளாகத்தில் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்படுகின்றது
மருத்துவ நன்மைகள்	- மருத்துவ நன்மைகள் - சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தில் உள்ளக மருத்துவ வைத்தியர் உள்ளார் மற்றும் இலவச மருந்துகள் வழங்கப்படும் மற்றும் மருத்துவ மீள்கொடுத்துத் தீர்த்தல். - வைத்தியசாலையில் தங்கியிருத்தலுக்கு மருத்துவ காப்புறுதி. - மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல். - விசேட மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல். (CT scan> MRI etc).
மரண நன்மைகள்	மரண இழப்பீடு
சிக்கன சங்க நன்மைகள்	- ஊழியரின் மரணம் உள்ளடங்கலாக நெருங்கிய குடும்ப அங்கத்தவரின் மரணத்தின் போதான மரண நன்கொடை - நியதிச்சட்ட பணக்கொடை போன்ற பணிக்கொடை வழங்கப்படும்.
ஓய்வூதிய ஏற்பாடு	நியதிச்சட்ட பணிக்கொடை
ஏனைய வசதிகள்	விசேட கடமைகளுக்கான சீருடைகள், ஊழியர்களின் இரவு நேர கடமைகளுக்கான உணவுகளை வழங்கல்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதன் மூலம் சிபெஸ்ரேலி நிறுவனம் உயர்கல்விக்காக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்கின்றது. இவ்வாண்டு காலப்பகுதியில் வேறுபட்ட துறைகளில் பல்கலைகழக மாணவர்களுக்காக 79 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. குறிப்பட்ட ஆண்டு கால சேவைகள் பணியாற்றிய ஊழியர்கள் கம்பனி மூலம் ஆண்டுதோறும் பாராட்டப்படுகின்றனர்.



ஊழியர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் - 2021

சேவைக் காலம்	ஊழியர்களின் எண்ணிக்கை
20 வருடங்கள்	16
30 வருடங்கள்	3
35 வருடங்கள்	6
40 வருடங்கள்	1

பயிற்சியும் தொழில்சார் அபிவிருத்தியும்

இன்றைய இயக்கவாற்றல் மிக்க சிக்கலான சூழல் அமைப்பில் முன்னேற்றகரமாக கற்கின்ற உபாயமானது எதிர்கால தொழில் தேவைகளை நிறைவுசெய்வதற்கு முக்கியத்துவம்மிக்க முன் தேவைப்பாடாக விளங்குகின்றது. அதன் ஊழியர்களின் இயலுமை இக்கம்பனியின் தொழில் நோக்கினையும் நீண்டகால பெறுமதி உருவாக்க இலக்குகளையும் எய்துவதற்கு இன்றியமையாதவையென கம்பனி அங்கீகரிக்கின்றது. இதன் விளைவாக, போட்டிமிக்க ஊழியர்களை விருத்திசெய்தலும் தக்கவைத்தலும் கம்பனியின் உபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அதன் வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதற்கும் முக்கியமானதாக விளங்ககின்றது. சிபெஸ்ரேலி நிறுவனத்தின் பயிற்சி மற்றும் மனிதவள பிரிவு அதன் ஊழியர்களின் தொடர்ச்சியான தனிப்பட்ட அபிவிருத்திக்கு ஒட்டுமொத்தமாக அர்ப்பணித்துள்ளதுடன் அதேபோன்று அனைத்து ஊழியர்களினதும் பயிற்சி தேவையினை கிரகமாக கண்காணித்து நிறைவேற்றுகின்றது.

செயலாற்றுகைப் பின்னூட்டல் மற்றும் ஆற்றல் கலந்துரையாடல்கள் என்பன ஊடாக கம்பனி, அதன் ஊழியர்களின் பயிற்சி தேவைகளை அடையாளப்படுத்துகின்றது. உள்ளக பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்களுக்கு மேலதிகமாக தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனங்கள் போன்ற மூன்றாம் தரப்பினரால் நடாத்தப்படுகின்ற பயிற்சி திட்டங்களில் பங்கேற்பதற்கு ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆண்டு காலப் பகுதியில் ஊழியர்களின் தொழில்நுட்ப அறிவு, மென்திறன்கள் மற்றும் தலைமைத்துவ தேர்ச்சிகள் என்பவற்றை விருத்திசெய்வதற்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிதிட்டங்கள் நடாத்தப்பட்டன. இது 3,806 பயிற்சி மணித்தியாலங்களாக அமைந்திருந்தது.

கம்பனியானது ஊழியர்களின் தொழில் விருத்தியில் எப்போதும் ஆர்வமாக காணப்படுவதுடன் தராதர சான்றளிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனங்களுடன் இணைந்து கொள்வதற்கு விரும்புகின்ற ஊழியர்களுக்கு அதன் ஆதரவினை வழங்கி தொழில்சார் அபிவிருத்திக்காக அவர்களை ஊக்குவித்து

நிகழ்ச்சிகள் / செயலமர்வுகள் / கருத்தரங்குகள்	கால அளவு	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	பயிற்சி நேரம்
பணியாளர் ஒழுங்குமுறை மேம்பாடு	7 hrs	128	896 hrs
BM மற்றும் BP இன் தொட்டி மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி	21 hrs	8	168 hrs
இசை பயிற்சி	4 hrs	24	96 hrs
இடர் மேலாண்மையின் முக்கிய முதன்மைகள் மற்றும் நோக்கங்கள்	7 Hrs	37	259 hrs
ஊஜனுயு விலை அதிகரிப்பு சூத்திரம் மற்றும் கணக்கீடு உள்ளீட்டு சதவீதங்கள்	7 hrs	35	245 hrs
தொழில்துறை சட்டத்திற்கான சமூக பாதுகாப்பு	7 hrs	127	889 hrs
ஒரு தொழில்முறை படத்திற்கான சீர்ப்படுத்தல் மற்றும் வணிக ஆசாரம்	7 hrs	51	357 hrs
தொட்டி நிரப்பிகளுக்கான பயிற்சி	21 hrs	11	231 hrs
விலை அதிகரிப்பு பட்டறை (I)	7 hrs	29	203 hrs
விலை அதிகரிப்பு பட்டறை (II)	7 hrs	29	203 hrs
தனிப்பட்ட திறன்கள், மதிப்புகள் மற்றும் பணி வாழ்க்கை சமநிலை	7 hrs	37	259 hrs
மொத்தம்			**3806 hrs**

வியாபார நிருவாக முதுமாணி மற்றும் ஏனைய பட்டப்பின் படிப்புக்களை தொடருவதற்கு நிதியியல் உதவியினையும் வழங்குகின்றது. கம்பனி வருடாந்த தொழில்சார் நிறுவன சந்தாக்களையும் மீளச் செலுத்தவதுடன் தொழில்சார் நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற மாநாடுகள் மற்றும் செயலமர்வுக்கான கட்டணைங்களை மீளளிப்பதன் வாயிலாக தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியினையும் ஊக்குவிக்கின்றது.



தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும்

கம்பனி, அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பான மற்றும் காயங்கள் ஏற்படாத பணியாற்றும் சூழலை வழங்குவதன் மூலம் அதன் தொழிற்பாடுகள் முழுவதும் ஆராக்கியம் மற்றும் பாதுகாப்பின் உயர்வான தரநியமங்கள் மீதான அதன் பொறுப்பினை நிறைவுசெய்கின்றது.

2021 ஆம் ஆண்டு அனைத்து இலங்கையர்கள் வாழ்விலும் கடுமையான ஆராக்கியத்துடன் தொடர்புபட்ட முக்கியமான ஆண்டாகவிருந்தது கொவிட்-19 வைரஸ் சிபெஸ்ரேலி நிறுவன ஊழியர்களையும் எதிர்மறையாக பாதித்ததுடன் ஊழியர்கள் அனைவரும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றிணைந்து மிக இக்கட்டான காலத்தினை அனுபவித்தனர் சிபெஸ்ரேலி முகாமைத்துவம் ஆண்டு முழுவதும் எரிபொருள் விநியோகித்தும் இக்கட்டான பணியினை கொண்டிருந்த



அதேவேளை, ஊழியர்களின் ஆரோக்கியத்தினையும் கவனிக்க வேண்டியிருந்தது. இதற்காக சிபெஸ்ரேலி நிறுவன முகாமைத்துவமானது மிகவும் அபாயமிக்க சுகாதார நிலமைகளை முறியடிப்பதற்கு சிபெஸ்ரேலி கொவிட்-19 தடுப்பு குழுவை உருவாக்கி பல வழிகளிலும் ஊழியர்களுக்கு வசதியளித்தது.

பணியாற்றுகின்ற மணித்தியாலங்களின் போது கொவிட்-19 கண்டுபிடிக்கப்பட்ட ஊழியர்கள் புத்த மந்திரய கட்டிடத்திலும் தற்காலிக இடமாற்ற நிலையங்களிலும் வைக்கப்பட்டனர். பெண்களும் ஆண்களும் வெவ்வாறாக வைக்கப்பட்டு அவர்கள் தங்கியிருந்த காலபகுதியில் அவர்களுக்கு உணவு மருந்து மற்றும் வேண்டப்பட்ட ஏனைய தனிப்பட்ட மற்றும் ஆரோக்கிய சுகாதார சேவைகள் வழங்கப்பட்டன. கொவிட்-19 தடுப்புக்குழு பல தனியார் வைத்தியசாலைகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி நியாயமான வீதங்களில் மருத்தவ காப்புறுதி நிதியுதவியுடன் சிகிச்சை பெறுவதற்கு பாதிக்கப்பட்ட ஊழியர்களை இயலச்செய்தது.

தனிமைப்படுத்தப்பட்ட ஊழியர்களுக்கென ஆண்கள் மற்றும் பெண்களுக்காக வெவ்வேறாக கட்டிடம் ஒன்றின் இரண்டு தளங்கள் உடனடியாக வசதியான கட்டில்கள் மற்றும் மெத்தைகளைக் கொண்டு தயார்படுத்தப்பட்டன. அவர்கள் தங்கியிருந்த காலப்பகுதியில் உணவு, அவர்களுக்கு நாளாந்த தேவைகள் மற்றும் மருத்துவம் என்பன வசதிப்படுத்தப்பட்டன. அவசரகால நிலையில் மருத்தவ அலுவலர்களுடன் ஸ்கைப் வாயிலாக தொடர்பு கொள்வதற்கு வெளிப்படையாக கணனி ஒன்றும் வைக்கப்பட்டது.





தடுப்பு முறையிலாக கொலண்ணாவ சுகாதார மருத்துவ அதிகாரியின் உதவியுடன் தடுப்பு மருந்தேற்றல் தொடங்கப்பட்டதுடன் குழு வாரியாக மருத்துவ காரணங்களின் மீது சில ஊழியர்கள் தவிர அனைத்து ஊழியர்களுக்கும் 1 ஆவது, 2 ஆவது மற்றும் ஊக்கி மருந்துகள் வழங்கப்பட்டன. 1130 ஊழியர்களுக்கு இரு தடுப்பு மருந்துகளும் எற்றப்பட்ட அதேவேளை (மொத்த ஊழியர்களின் 46 சதவீதமானோர்) 1248 ஊழியர்களுக்கு 2 தடுப்பு மருந்துகளுடன் சேர்த்து ஊக்கி மருந்தும் (மொத்த ஊழியர்களின் 51 சதவீதம்) வழங்கி சிபெஸ்ரேலி நிறுவன ஊழியர்கள் மத்தியில் கொவிட் தடுப்பு மருந்து உள்ளடக்கம் 97 சதவீதமாக இருந்தது. அதற்குப் புறம்பாக கொவிட் தடுப்புக்குழு ஆர்வமிக்க ஊழியர்களுக்கு கொவிட் தடுப்பு மருந்தின் 4 ஆவது மருந்தினையும் தடுப்பு மருந்து சிகிச்சைப் பிரிவில் ஏற்பாடு செய்தது.

இவ்வுடனடி முன்னெச்சரிகைகளுக்கு சமாந்தரமாக வீட்டிலிருந்து பணியாற்றவதற்கும் ஊழியர்கள் குறித்தொதுக்கப்பட்டதுடன் தலைவர் திரு. உவைஸ் முஹமட் அவர்களின் வழிகாட்டல்களுடன் ஒவ்வொரு பிரிவின் தலைவர் மூலமும் குறித்தொதுக்கப்பட்ட பணிச்சுழற்சிக்கு அமைவாக நேரடியாக அலுவலகத்தத்துக்கு ஏனைய அலுவலர்கள் அழைக்கப்பட்டனர்.

தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் பணிச்சுழற்சி அடிப்படையில் பணியாற்றும் முறை மற்றும் தனிமைப்படுத்தல் முறைகள் என்பவற்றின் விளைவுகளுடன் வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு காலப்போக்கில் கொவிட்-19 நோயாளர்களின் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையும் மெதுவாக குறைவடைந்தது.

2022 இல் கொவிட்-19 ஐக் கொண்ட இக்கட்டான காலப்பகுதியில் அனைத்து எனைய உறுப்பினர்களுடனும் அத்துடன் கொவிட்-19 தடுப்பு துணைக்குழு உறுப்பினர்களுடனும் இணைந்து மருத்துவ அலுவலரும் பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்) உன்னதமான குழுவாக பணியாற்றி நிறுவனத்தின் வேலைப்பாய்ச்சலுக்கும் நாட்டின் தேவைகளுக்கும் சேதமேற்படுத்தாது சீரான எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு மேல் முகாமைத்துவத்திற்கு ஆதரவளித்து ஒருங்கிணைத்து வழிகாட்டினர்.





சிபெஸ்ரேலி நிறுவனம் இலங்கையில் பாரிய பெற்றோலிய முனையங்களின் தொழிற்படுத்துனராகும். சிபெஸ்ரேலி மூலம் கையாளப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகள் எளிதில் தீப்பற்கூடியன. என்பதுடன் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் உயர் இடர் வகையின் கீழ் வருகின்றன. பொருளார உயிரோட்ட நிலையமாக சிபெஸ்ரேலி நிறுவனம் பாரிய அளவு தீ நாட்டின் பொருளாதாரத்தை முடங்கச்செய்யலாம். ஆகையினால், கைத்தொழில் மற்றும் தொழில்சார் ஆரோக்கியமும் பாதுகாப்பும் சிபெஸ்ரேலி நிறுவனத் தொழிற்பாடுகளில் மிகவும் உயர் முக்கியத்துவம் மிக்க காரணியாக விளங்குகின்றது. சிபெஸ்ரேலி நிறுவனம் பின்வரும் பிரத்தியேக நிலையங்களை கொண்டுள்ளது.

- 24 x 7 நாட்கள் பணிக்கமர்த்துவதற்கு உடனடியான, தொழிற்பாடுகளை பாதுகாப்பாக ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான தீயணைப்பு படை என்பவற்றுடன் கூடிய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு
- ஆராக்கியத்தை கண்காணிப்பதற்கும், 24ஒ7 நாட்களுடன் கூடிய ஊழியர்களின் மருத்துவ அவசர நிலமைகளை கவனிப்பதற்கும் உள்ளக நோயாளர் அவசர வண்டிச் சேவையுடனும் கூடிய மருத்துவ நிலையம்



கம்பனியானது பின்வருவன தொடர்பில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கருமங்களையும் அத்துடன் இடர்களை இல்லாதொழிப்பதன் மீதும் விசேட கவனம் செலுத்துகின்றது.

- இயந்திரங்கள், உபகரணம் மற்றம் பணி முறைமைகளை வழங்குதலும் பேணுதலும்
- எரிபொருட்களை கையாளுதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டுசெல்லல்
- தொடர்புடைய தகவல்கள் பயிற்சி மற்றும் மேற்பார்வையினை வழங்குதல்
- பணி நிலைமைகளைப் பராமரித்தல்
- பணியில் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு அபாயங்களை தடுத்தல்
- அனைத்து ஊழியர்களும் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கண்டிப்பாக கடைப்பிடித்தல

ஊழியர் நிகழவுகள்

- இரத்ததான பிரச்சாரம்

  வருடாந்த இரத்ததான பிரச்சாரம் 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக 41 ஆவது ஆண்டாக முழுமையாக நடாத்தப்பட்டதுடன் கம்பனியின் ஊழியர்கள் முனைப்புடன் பங்கேற்றனர்.





சென்செவீரிஆ (Sansevieria)

ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பிரிவின் மூலதம் செய்யப்பட்ட தளம்பல் மிக்க சேதன சேர்வை கணக்கெடுப்பு வழிமுறைகளுக்கமைவாக சிபெஸ்ரேலி நிறுவன உள்ளகப் பிரதேசங்களின் சில அமைவிடங்களில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அனுதிக்க உயர்ந்தபட்சு அளவுக்கு மேல் தளம்பல் மிக்க சேதன சேர்வை உள்ளடக்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆகையினால், சிபெஸ்ரேலி நிறுவன நிறுவனத்தினுள் தளம்பல் மிக்க சேதன சேர்வையின் காரணமாக எற்படும் சாத்தியமான விளைவுகளை குறைப்பதற்கு தளம்பல் மிக்க சேதன சேர்வை செறிவைக் குறைப்பதற்கு சிபெஸ்ரேலி அலுவலகங்களுக்கு 'சென்செவீரிஆ' என அழைக்கப்படும் உயர் வினைத்திறன் மிக்க தளம்பல் மிக்க சேதன நிலையை உறிஞ்சும் மரக்கன்றுகளை விநியோகிப்பதன் வாயிலாக சிபெஸ்ரேலி நிறுவனத்தினுள் தளம்பல் மிக்க சேதன சேர்வை செறிவினை குறைப்பதற்கு கருத்திட்டம் ஒன்ற முன்னெடுக்கபபட்டது. சென்செவீரிஆ (விஞ்ஞானப் பெயர்: சென்செவீரிஆ ரைபாசியாட்டா மற்றும் பொதுவான பெயர்: பாம்புத் தாவரம்) நாசாவின் தூய வளி ஆய்வு மூலம் வளியிலிருந்து பென்சின், போமல்டிஹைட் மற்றும் ரைகுளோரோதைலீன் (தளம்பல் மிக்க நிலையத்தில் முக்கிய சேர்வைகள்) போன்ற நச்சு முகவர்களை இயற்கையாக அகற்றுகின்றவையாக இனங்காணப்பட்டுள்ளன.





மரநடுகை

சிபெஸ்ரேலி நிறுவனத்தினுள் பசுமையான சூழலை ஊக்குவிக்கும் முயற்சியொன்றாக கொலண்ணாவ பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்புடன் ஆரோக்கிய, பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பிரிவினால் மரநடுகை நிகழ்வொன்று மேற்கொள்ளப்பட்டது. கொலண்ணாவ பிரதேச செயலகத்தினால் 30 மரக்கன்றுகள் அன்பளிப்பு செய்யப்பட்டு அவை சிபெஸ்ரேலி நிறுவனத்தின் கொலண்ணாவ எரிபொருள் விநியோக நிலைய வளாகத்தினுள் தெரிவு செய்யப்பட்ட தொழிற்பாடற்ற பிரதேசங்களில் நடப்பட்டன.





ஆளுகையும் இணங்குவித்தலும்


CEYPETCO
CEYPETCO

நிறுவன ஆளுகை

சபையின் பிரகடனம்

கொவிட்-19 நோய்த்தொற்றின் எதிர்பாராத தாக்கத்தின் காரணமாக சவால்மிக்க இவ் ஆண்டுகாலப்பகுதியில் அவர்களது உபாயரீதியான வழிகாட்டலினையும் மதியுரையினையும் வழங்கியமைக்காக பணிப்பாளர் சபைக்கும் முகாமைத்துவத்துக்கும் நான் நன்றிகூற இச்சந்தப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

மேலும், கம்பனி முழுவதும் நிறுவன ஆளுகை கோட்பாடுகளை பிரயோகிப்பதில் சிபெஸ்ரேலி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பிரயோகிப்பதை அவதானிப்பதற்கு சபை உறுதியாக அர்ப்பணித்துள்ளது என்றும் நிறுவன ஆளுகை அறிக்கையானது கம்பனியினுள் நிறுவன ஆளுகை பற்றிய நியாயமான பொறுப்புக்கூறலை வழங்குகின்றது என்றும் நான் சபை சார்பில் நான் உறுதிப்படுத்த விளைகின்றேன்.

அதற்கமைய, பணிப்பாளர் சபையும் அனைத்து ஆளணியும் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டுள்ளனர் என்று நான் பிரகடனப்படுத்துகின்றேன்.

திரு. எம். உவைஸ் மொஹமட்
தலைவர் / நிர்வாக இயக்குனர்

அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் சபையினதும் முகாமைத்தவத்துவத்தினதும் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, நேர்மை என்பவற்றை வலுப்படுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த மற்றும் செயல்திறன்மிக்க நிறுவன கலாசாரம் ஒன்றினை தோற்றுவிக்கும் வகையிலும் நிறுவனம் பற்றிய பொதுமக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு உதவும் வகையிலும் சிபெஸ்ரேலி நிறுவனத்தின் நிறுவன ஆளுகை வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவன ஆளுகையின் நோக்கம் கம்பனியின் நீண்டகால வெற்றியினை கொண்டுசேர்க்கூடிய செயல்திறன்மிக்க, தொழிற்முயற்சியாண்மை அத்துடன் முன்மதிமிக்க முகாமைத்துவத்தை எனபவற்றை வசதிப்படுத்தவதாகும். பரந்த நோக்கில் இது உள்ளடக்குவன.

- தொலைநோக்கு, பணி, குறிக்கோள்கள், மற்றும் உபாயம் என்பன எவ்வாறு வடிவமைக்கப்பட்டு தொடர்பூட்டப்படுகின்றன
- விழுமியங்கள் எவ்வளவு நன்றாக இணங்கியொழுகப்படுகின்றன
- இடர்கள் எவ்வாறு முகாமைசெய்யப்படுகின்றன
- வெளிப்படைத்தன்மை எவ்வாறு ஊக்கவிக்கப்படுகின்றது
- தொழிற்பாடுகளை நிலைடிபெறத்தக்கவகையில் எவ்வாறு முகாமைசெய்வது
- எதிர்காலத் தலைவர்கள் எவ்வாறு ஊக்குவிக்கப்பட்டு விருத்திசெய்யப்படுகின்றனர்
- பங்குடமையாளர் பெறுமதியினை அதிகரிப்பதற்கு நிறுவன கலாசாரம் எவ்வாறு ஊக்குவிக்கப்படுகின்றது.

இலங்கையின் பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் விநியோகத்தை பிரதானமாக வசதிப்படுத்தும் கம்பனி என்ற வகையில் நிறுவனமானது சட்டவாக்கங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நாட்டின் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களினால் எடுத்துரைக்கப்பட்ட நடத்தைக் கோவைகள் என்பவற்றுடனான இணங்குவித்தலில் நிறுவன ஆளுகை கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதியளிப்பதுடன் கம்பனி மூலம் விதந்துரைக்கபட்ட உள்ளக கொள்கைகள் மற்றும் வழிகாட்டல் தொகுதிகளுடன் அது கடைப்பிடிப்பதனையும் உறுதிசெய்கின்றது.

நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு

சபை, அதன் துணைக்குழுக்கள், சிரேஷ்ட முகாமைத்துவம், பங்குதாரர்கள், ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் என்பவற்றுக்கிடையிலான அடிப்படை உறவுகள் சிபெஸ்ரேலி நிறுவன ஆளுகை கட்டமைப்பினால் வழிநடாத்தப்படுகின்றன. சிபெஸ்ரேலி நிறுவனத்தில் நிறுவன ஆளுகைக் கட்டமைப்பு பின்வரும் 3 தூணங்களின் கீழ் எடுத்துக் காட்டப்படக்கூடியது.

1. இணங்குவித்தல்
2. உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு
3. உத்தரவாதமும் கட்டுப்பாடும்

இணங்குவித்தல்

ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டக் குறிமீடுகள்

2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான கோவை

2003ஆம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டல்கள்

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டங்கள்

உள்ளக மட்டக்குறிமீடுகள்

சபையின் அமைப்பு விதிகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் கம்பனி ஒழுங்குவிதிகள்வியாபாரத்தை நடாத்துவதற்கான ஒழுக்கநெறி பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களுக்கான பட்டயம்

உள்ளக அமைப்பு

பங்குதாரர்கள்

தலைவர்/ முகாமைத்துவ பணிப்பாளர்

தலைவர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்கள் சபையின் நடவடிக்கைகளையும் வியாபார நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளர்களாவர்.

பணிப்பாளர் சபை

பங்குதாரர்கள் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர்கள் சபையைத் தேர்ந்தெடுக்கின்றார்கள் நிறுவனத்தின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கான உபாயமார்க்க வழிகாட்டலை வழங்குவதிலும், பலமான கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை நிறுவுவதிலும் சபை தலைமைத்துவத்தை வழங்குகின்றது.

AC | SRC | DPC

உத்தரவாதம் மற்றும் கட்டுப்பாடு

வெளிவாரிக் கணக்காளர்கள்

வெளிவாரி கணக்காளர்கள் ஒரு சுயாதீன அமைப்பு அவர்களுடைய பொறுப்பு கம்பனியின் நிதியியல் கூற்றுகளை கணக்காய்வு செய்தல் மற்றும் நியாயமான உத்தரவாதத்தை வழங்குதலாகும்

உள்ளக கணக்காய்வாளர்கள்

உள்ளகக் கணக்காய்வானது, முழுமையான இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டு சட்டகம் மற்றும் கணக்காய்வுக் குழுவுக்கான அறிக்கையிடல் சுதந்திரம் தொடர்பான ஒரு சுயாதீன மதிப்பீட்டை வழங்குகின்றது

AC - கணக்காய்வுக் குழு
SRC - கையிருப்பு மீளாய்வுக் குழு
DPC- திணைக்கள பெறுகைக் குழு

01. இணங்குவித்தல்

கம்பனியின் நிறுவன ஆளுகை நடைமுறைகள் கீழ்வரும் சட்டம், கோவைகள் மற்றும் தன்னார்வ பழக்கங்களின் சட்டகத்தைப் பின்பற்றுவதற்கான தேவைப்பாட்டுடன் இணங்குகின்றன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான கோவை
- 2003ஆம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டல்கள்
- 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டங்கள
- சபையின் அமைப்பு விதிகள்
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள்
- கம்பனி ஒழுங்குவிதிகள்
- வியாபாரத்தை நடாத்துவதற்கான ஒழுக்கநெறி
- பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களுக்கான பட்டயம்

02. உள்ளக ஆளுகைக்கட்டமைப்பு

பணிப்பாளர் சபை

கம்பனியின் அனைத்து செயற்பாடுகள் முழுவதும் உயர்தர நிறுவன ஆளுகைத் தரநியமங்களைப் பேணுவதற்கு சபை அர்ப்பணித்துள்ளது.

கம்பனியின் அனைத்து செயற்பாடுகளிலும் நிறுவன ஆளுகையின் உயர் நியமத்தைப் பராமரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. நிறுவன ஆளுகையின் நோக்கம், நீண்ட கால பங்குதாரர் பெறுதியை வினைத்திறனானதும் முன்மாதிரியானதுமான முகாமைத்துவத்தின் ஊடாக உருவாக்குதல் ஆகும். சபையின் பிரதான பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்

- நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவசியமான உபாயமார்க்கங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டலையும் பணிப்புரையையும் வழங்குதல்.
- கம்பனியின் செயலாற்றுகை நோக்கம் மற்றும் நிறுவன உபாயமார்க்கத்திற்கு உபாயமார்க்க வழிகாட்டலை வழங்குவதுடன் மதிப்பீடு செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்
- வருடாந்த திட்டங்களையும் நீண்ட கால வியாபாரத் திட்டங்களையும் மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- ஆளுகை மற்றும் இணக்க முறைமையை கண்காணித்தல்.
- கம்பனியினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் கண்காணித்தல்.
- பிரதான கைகொள்ளல்கள், அகற்றல்கள் மற்றும் மூலதன செலவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.
- சபையிலிருந்து நிறைவேற்றுதர மட்டம் வரை வழங்கப்பட்ட சாட்டுதல்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதை தீர்மானித்தல்.
- உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறை முறைமைகளைக் கண்காணித்தல்.

சபையின் உள்ளமைப்பு

2021 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு சபையின் உள்ளமைப்பு பினவருமாறு:

பெயர்	பதவி
திரு. நாலக பெரேரா	தலைவர்
திரு. சமிந்திர அபேசேகர	முகாமைத்துவப் பணிப்பாளர்
திரு. மனோஜ் குமார் குப்தா	பணிப்பாளர்
திரு. புத்திக ருவன் மதிஹாஹேவா	பணிப்பாளர்
திரு. ஈ.ஏ. ரத்னசீல	பணிப்பாளர்
திரு. திலின பீரிஸ்	பணிப்பாளர்
திரு. அசீம் பார்கவா	பணிப்பாளர்
திரு. ராஜேஷ் பகத்	பணிப்பாளர்
திரு. பிரசன்ன அமரதுங்க	பணிப்பாளர்

2021 ஆம் ஆண்டின் போதான பணிப்பாளர்களின் மாற்றங்கள்

	பணிப்பாளரின் பெயர்	சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி	சபையில் இருந்து இராஜினாமா செய்த திகதி	பதவி
01	திரு. எம்.யூ. மொஹமட்	27/01/2020 03/07/2020	20/12/2021 20/12/2021	Chairman MD
02	திரு. நாலக பெரேரா	05/05/2021 21/12/2021		NED Chairman
03	திரு. சமிந்திர அபேசேகர	15/03/2021 21/12/2021		NED MD
04	திரு. மனோஜ் குமார் குப்தா	20/05/2019		NED
05	திரு. புத்திக ருவன் மதிஹாஹேவா	27/01/2020		NED
06	திரு. ஈ.ஏ. ரத்னசீல	27/01/2020		NED
07	திரு. திலின பீரிஸ்	15/03/2021		NED
08	திரு. அசீம் பார்கவா	18/08/2021		NED
09	திரு. ராஜேஷ் பகத்	18/08/2021		NED
10	திரு. பிரசன்ன அமரதுங்க	28/12/2021		NED
11	திரு. துமிந்த லக்ஷான்	07/07/2020	08/04/2021	NED
12	திரு. பிரமோத் ஜெய்ன்	16/08/2018	06/05/2021	NED
13	திரு. தரிந்து ஹசந்த்த விக்ரமசிங்க	27/01/2020	06/05/2021	NED
14	திரு. சுராஜ் பட்நாய்க்	30/05/2018	16/08/2021	NED

NED நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர் ED நிறைவேற்றுப் பணிப்பாளர் MD முகாமைத்துவப் பணிப்பாளர்

ஆண்டறிக்கையின் 22-25 ஆம் பக்கங்களில் காணப்படும் தற்போதைய பணிப்பாளர்களின் முகக்குறிப்புகள் கம்பனிக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற உபாயம், செயலாற்றம், வளங்கள் மற்றும் தொழில் நடத்தைகள் பற்றிய விடயங்கள் மீது சுயாதீன தீர்மானத்தை வழங்குவதற்கான அதிக அனுபவத்தையும் போதுமான திறமைகளையும் எடுத்துக்காட்டுக்கின்றது.

◈ சபை பன்மைத்துவமும் சபையின் சமநிலையும்

பணிப்பாளர் சபையானது நிறுவன ஆளுகை கட்டமைப்பின் முக்கிய கூறாகும். வேறுபட்ட திறன்கள், அறிவு, அனுபவம், தொழில்சார் தகமைகள், வயது, தேசியம் என்பவற்றின் சபையின் பன்மைத்துவம் மிகவும் வினைத்திறன்மிக்க தீர்மானங்களை மேற்கொள்ளல், ஆற்றல்மிக்க தொகுதி மற்றும் மூலவளங்களை சிறப்பாக உபயோகித்தல் என்பவற்றிலிருந்து நன்மையடைவதற்கு முனைகின்றது.

மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டுகாலப்பகுதியில் சபையானது வேறுபட்ட துறைகளில் உகப்பான கலந்த தேர்ச்சிகள், நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தை கொண்ட 8 பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

◈ பணிப்பாளர்களின் நியமனம்

பணிப்பாளர்கள் அகவிதி நியமங்களுக்குட்பட்டு வருடாந்த பொதுக்கூட்டமொன்றினூடாக சபைக்கு நியமிக்கப்படுகின்றனர். பணிப்பாளர் உறுப்புரிமைக்கான அபேட்சகர்களை பரிசீலனையில் கொண்டு ஏனையவற்றுக்கு மத்தியில் அனுபவத்தின் அளவு, தொழிலைப் புரிந்துகொள்ளல், தொழில் மற்றும் நிதியியல் பிரச்சினைகளை புரிந்துகொள்ளுதல், ஆற்றல் வாய்ந்த தீர்மானத்தை பிரயோகிப்பதற்கான இயலுமை, பல்வகைமை, தலைமைத்தவம் மற்றும் சாதனைகள் அத்துடன் தொழிற்துறையினை பாதிக்கின்ற கருமங்களில் அனுபவம் போன்றன உள்ளடங்கலாக அது பொருத்தமானதாக கருதுகின்ற அனைத்து காரணிகளையும் சபை கவனத்தில் கொள்ளும்.

◈ பொறுப்புக்களை வகுத்தல்

திரு. எம். உவைஸ் மொஹமட் தலைவர் வகிபாகத்திற்கு மேலதிகமாக முகாமைத்துவ பணிப்பாளர் வகிபாகத்தினையும் தொடர்ந்து ஆற்றுகின்றார். இரண்டு பதவிகளையும் ஒன்றிணைத்தலானது பங்குடமையாளர் குறிக்கோள்களை நிறைவுசெய்வதிலும் சுறுசுறுப்பான மற்றும் செயலூக்கம் மிக்க தலைமைத்துவத்தை கருத்திற் கொள்கையிலும் இக்காலகட்டத்தில் மிகப் பொருத்தமானதென அதன் நிலையை கம்பனி பேணியது.

ஆகையினால் திரு. உவைஸ் மொஹமட் சபையின் செயற்பாடுகளின் மேற்பார்வை பொறுப்பு மற்றும் கம்பனியின் தொழில் மேற்பார்வை பொறுப்பு இரண்டினையும் 2021 டிசம்பர் 20 வரை வகித்தார். இது தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையினை விரைவுபடுத்துவதற்கும் பிணக்குகளை தவிர்ப்பதற்கும் உதவுகின்றது.

சபையிலிருந்து திரு. உவைஸ் பதவி துறந்த பின்னர் திரு. நாலக பெரேரா தலைவராக நியமிக்கப்பட்டதுடன் திரு. சவிந்திர அபேசேகர 2021 டிசம்பர் 21 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கம்பனியில் முகாமைத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

சிபெஸ்ரேலி நிறுவனத்தின் தொழிற்பாடுகள் துணை வகைகளாக பிரிக்கப்படலாம். அவை கொலண்ணாவ எரிபொருள் விநியோக நிலையத்தின் தொழிற்பாடுகள், முத்துராஜவெல முனையத்தின் தொழிற்பாடுகள், கொழும்பு துறைமுக எரிபொருள் வளாக அலவலகம் மற்றும் நாடுபூராகவுமுள்ள இலங்கை மொத்த சாலைகளில் தொழிற்பாடுகள் என்பனவாகும். முத்துராஜவெல முனைய தொழிற்பாடுகளுக்கு முனைய முகாமையாளர் (முத்துராஜவெல) தலைமைத்துவம் வகிக்கின்றார். தொழிற்பாட்டு முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடுகள்) கொழும்பு துறைமுக எரிபொருள் வளாக அலுவலகத்திற்கு தலைமை வகிப்பதுடன் இலங்கை மொத்தச் சாலைகள் பிரதிப் பொது முகாமையாளரின் (தொழிற்பாடுகள்) மேற்பார்வையின் கீழ் சாலை கண்காணிப்பாளர்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

◈ சபை கூட்டங்களும் சமூகமளித்தலும்

வழமையான அடிப்படையில் மாதாந்தக் கூட்டங்கள் நடைபெறுவதுடன், அவசியமாயின் விசேட கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. அழைப்பின் பேரில் சிரேஸ்ட முகாமையாளர்கள் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர்.

சபைக் கூட்டங்களானது வழமையான நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் நடாத்தப்படுவதுடன். கூட்டத்திற்கு முன்னர் பணிப்பாளர்கள் விரிவான முறையில் உரிய பின்புலத் தகவல்களை வழங்குகின்றனர். 2021ஆம் ஆண்டு 13 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. கீழ்வரும் அட்டவணையில் பணிப்பாளர்களின் கூட்டத்திற்கான வருகை காட்டப்பட்டுள்ளது.

கீழ்வரும் அட்டவணையில் பணிப்பாளர்களின் கூட்டத்திற்கான வருகை காட்டப்பட்டுள்ளது.

பெயர்	07/ ஜன	22/ பெப்	08/ ஏப்	06/ மே	09/ ஜூன்	28/ ஜூலை	11/ ஆக	18/ ஆக	13/ செப்	15/ அக்	30/ நவ	14/ டிச	30/ டிச
திரு. உவைஸ் மொஹமட்	P	P	P	P	P	P	P	P	P	P	P	P	N/A
திரு.புத்திக மதிஹாஹேவா	P	P	P	P	P	P	P	P	P	P	P	P	AB
திரு. மனோஜ் குமார் குப்தா	P	P	P	P	P	P	P	P	P	P	P	P	P
திரு.ரத்னசீல	P	P	P	P	P	P	P	P	P	P	P	P	P
திரு. திலின பீரிஸ்	N/A	N/A	P	P	P	P	P	P	P	P	P	P	P
திரு.சமீந்திர அபேசேகர	N/A	N/A	P	P	P	P	P	P	P	P	P	P	P
திரு. நாலக பெரேரா	N/A	N/A	N/A	AB	P	P	P	P	P	P	P	P	P
திரு. அசீம் பார்கவா	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	P	P	P	P	P	P
திரு. ராஜேஷ் பகத்	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	P	P	P	P	P	P
திரு. துமிந்த லக்ஷான்	AB	AB	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A
திரு. பிரமோத் ஜெயின்	P	P	P	P	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A
திரு.தரிந்து ஹசந்த விக்கிரமசிங்க	AB	AB	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A
திரு. சூரஜ் பட்நாயக்	P	P	P	P	P	P	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A
திரு.பிரசன்ன அமரதுங்க	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	N/A	P

P - சமூகமளித்தல் / AB - சமூகமளிக்கவில்லை

◈ அதிகார ஒப்படைப்பும் குழுக்களும்

சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கருமங்களை தவிர சபைத் துணை குழுக்களுக்கு சபை அதிகாரங்களை ஒப்படைத்துள்ளது.

குறிப்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள பின்வரும் குழுக்கள் சபைக்கு துணையளிக்கின்றன.

a) கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக்குழுவானது கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றது. கணக்காய்வுக்குழு கம்பனியின் பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்ட ஒட்டுமொத்த ஆளுகைச் செயன்முறையினுள் தொழிற்படுவதுடன் அதன் பொறுப்புகளை செயல்திறன் வாய்ந்த விதத்தில் நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுகின்றது.

சிபெஸ்ரேலி நிறுவனக் கணக்காய்வுக்குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நிறைவேற்று தரமல்லாத 3 உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது. கணக்காய்வு குழுவின் உள்ளடக்கமும் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளும் ஆண்டறிக்கையின் 83 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

b) கையிருப்பு மீளாய்வுக் குழு

கையிருப்பு மீளாய்வுக் குழுவானது சிபெஸ்ரேலி நிறுவன அலுவலர்கள் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அத்துடன் லங்கா ஐஓசி நிறுவனம் ஆகிய பிரதிநிதிகளின் பங்கேற்புடன் வாராந்தம் கூடுகின்றது. கையிருப்பு நிலை மிளாய்வுசெய்யப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கான தேவைப்பாடுகள் முன்கூட்டியே திட்டமிடப்படுகின்றன. நாட்டில் எதிர்வுகூறப்பட்ட கேள்வி, சுத்தகரிப்பு சாலையின் இயலளவுகள் மற்றும் தாங்கி களஞ்சிய கொள்ளளவு என்பவற்றை பரிசீலனைக் கொள்ளப்பட்டதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட வேண்டிய அளவு இணங்குாணப்படுகின்றது. நாட்டில் இடைத்தடங்களற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதற்கு கிரமமான மற்றும் உன்னிப்பான கண்காணித்தல் கூட்டுத்தாபனத்தை இயலச்செய்கிறது.

c) திணைக்களசார் பெறுகைக் குழு

பொருட்கள், உற்பத்திகள், பணி, சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக கம்பனி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களசார் பெறுகைக்குழு தொழிற்பாடுகள் ஊடாக தேசிய பெறுகை முகவராண்மையால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை கம்பனி பின்பற்றி, வழங்கல் தாமதங்களை குறைத்து கம்பனிக்கு மிகவும் அனுகூலமான அத்துடன் தரம் வாய்ந்த சிறந்த சேவைகளையும் வழங்களையும் பெற்றுக்கொள்வதை பெறுகைப் பிரிவின் வெளிப்படத்தன்மையினை உறுதி செய்கிறது.

இக்குழுவிற்கு சிபெஸ்ரேலி நிறுவனத் தலைவர்:. முகாமைத்தவப் பணிப்பாளர் தலைமைவகிப்பதுடன் பிரதிப் பொது முகாமையாளர் -தொழிற்பாடுகள் மற்றும் பெற்றோலிய வள அமைச்சின் பிரதிநிதிகள் ஆகியோரை இது உள்ளடக்குகின்றது.

◈ தகவலுக்கும் மூல வளங்களுக்கும் சபைக்கான பெறுவழி

கடமைகளையும் பொறுப்புக்களையும் செயல்திறன்வாய்ந்த விதத்தில் மேற்கொள்வதற்கு முகாமைத்தவ மற்றும் நிறுவனசார் தகவல்களுக்கும் அதேபோன்று வேண்டப்பட்ட மூலவளங்களுக்கும் பணிப்பாளர்கள் மட்டுப்பாடற்ற பெறுவழியினை கொண்டுள்ளனர். தொழிற்பாட்டு திட்டங்கள். உபாயம், நிதியியல் முகாமைத்துவம் செலவீடு. சொத்து முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம், இணங்குவித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், மாற்றங்கள் என்பவற்றுக்கெதிரான செயலாற்றம் உள்ளடங்கலாக விடயங்கள் பற்றிய எடுத்துரைப்பினை நிறைவேற்று முகாமைத்துவம் மேற்கொள்கின்றது. அவசியமானது என கருதப்படுகின்றவிடத்து கம்பனியின் செலவில் பணிப்பாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனை மற்றும் தகவல்களுக்கான பெறுவழியும் கிடைக்கப்பெறுகின்றது.

◈ கம்பனிச் செயலாளர்கள்

எக்கவுன்டிங் சிஸ்டம் செக்கடேரியல் சேர்விசஸ் (பிரைவட் லிமிட்டெட்) சபைக்கான செயலாளர்களாக செயல்பட்டு அதன் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் சபைக்கு வழிகாட்டுவதுடன் நிறுவன ஆளுகையில் சிறந்த நடத்தைகளை ஊக்கவிக்கின்றது. அனைத்து பணிப்பாளர்களும் கம்பனிச் செயலாளருக்கான பெறுவழியினை கொண்டுள்ளனர். கம்பனிச் செயலாளர் சபைக் கூட்டங்களையும் வேறு துணைக்குழுக் கூட்டங்களையும் ஒருங்கிணைத்து கூட்ட குறிப்புகளையும் ஏனைய தொடர்புடைய பதிவுகளையும் பேணுகின்றது.

03. உத்தரவாதமும் கட்டுப்பாடும்

◈ நிதியியல் அறிக்கையிடல்

நிதியியல் கூற்றுக்களை உண்மையாகவும் நியாயமான நோக்கிலும் எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். முன்கூட்டி நியமிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இரண்டுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதியியல் அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர்இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்ற விதம், பொருத்தமான தன்மை மற்றும் கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றங்கள் அத்துடன் முக்கிய தீர்மான கருமங்கள் என்பன உள்ளடங்கலாக முகாமைத்துவம் மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் கணக்காய்வு குழு, மீளாய்வுசெய்து கலந்துரையாடுகின்றது.

◈ வெளிப்படைத்தன்மையும் இணங்குவித்தலும்

அதன் அனைத்து கொடுக்கல்வாங்கல்களிலும் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்கும் சட்டங்கள், வழிகாட்டல்களுடனான கண்டிப்பான இணங்குவித்தலை உறுதிசெய்கின்ற அதேவேளை ஒழுக்கநெறிசார் நியமங்கள், தொழில் மற்றும் வணிக உரிமைகள் அத்துடன் கம்பனிக் கொள்கைகள் என்பவற்றை பேணிகாப்பதற்கும் சபை பொறுப்புடையதாகும்.

- கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையானது 1961 இன் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- 1971 இன் 31 ஆம் இலக்க நிதிச் சட்டத்துடனான இணங்குவித்தலில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை மேற்கொள்வதுடன் நிதியியல் கூற்றுக்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

- பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக நிறுவனம் புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் வேறுதொடர்புடைய ஒழுங்குவிதிகளையும் கடைப்பிடிக்கின்றது.

◈ உள்ளகக் கட்டுப்பாடுகள்

தொழிற்பாடுகளின் வினைத்திறன்கள் மற்றும் செயல்திறன்வாய்ந்ததன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றை எய்துதல், நிதியியல் அறிக்கையிடல் பற்றிய நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய சட்டங்கள் அத்துடன் ஒழுங்குவிதிகளுடனான இணங்குவித்தல் அதேபோன்ற இடர்முகாமைத்துவம் என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் ஆற்றல்வாய்ந்ததும் செயல்திறன்மிக்கதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை முறையாக நிறுவப்பட்டு, பேணப்படுகின்றதை சபை உறுதி செய்கின்றது. நிதியியல் மற்றும் கணக்கீட்டு தகவல்களின் நேர்மை, தொழிற்பாட்டு மற்றும் இலாபத் தன்மை இலக்குகளை நிறைவேற்றுதல் மற்றும் முகாமைத்தவ கொள்கைகளை நிறவனம் முழுவதும் ஊடுகடத்தல் என்பன பற்றி அது உறுதிசெய்கின்றது. ஏதேனும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நியாயமான உத்தரவாதத்தை மாத்திரம் உறுதி செய்யக்கூடியது என்பதும் தவறுகள் அல்லது முறைகேடுகள் முன்வைக்கப்படலாம் அல்லது நியாயமான காலப்பகுதிக்குள் கண்டுபிடிக்கப்படலாம் என்பதற்கு முற்றுமுழுதான உத்தரவாதம் இல்லை என்பதனையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

உள்ளகக் கணக்காய்வு பிரிவானது சிபெஸ்ரேலி நிறுவனத்தின் நிறுவப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினுள் நிறுவனம் வினைத்திறன்மிக்கவாறு தொழிற்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றது.

◈ உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவத்தின் சுயாதீனமாகவுள்ள உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுகள் கொண்டு நடாத்தப்படுகின்றன. உள்ளக கணக்காய்வொன்றின் குறிக்கோள் நிறுவனம் ஒன்றின் அனைத்து நடவடிக்கைகள் மீதும் கண்டிப்பான கட்டுப்பாட்டினை பேணுவதாகும். நிதியியல் பதிவுகளின் உண்மையான தன்மை மற்றும் நிறுவனத்தின் தொழிற்பாடுகளின் வினைத்திறன் பற்றிய உத்தரவாதம் முகாமைத்துவத்திற்கு தேவைப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வொன்று இவை இரண்டினையும் உறுதிசெய்வதற்கு உதவுகின்றது. எடுத்துரைக்கப்பட்ட நடைமுறைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எனபவற்றுக்கு இசைவாக நிறுவனத்தினுள் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பேணப்படுவதை இது உறுதி செய்கின்றது. உள்ளகக் கணக்காய்வு பிரிவின் நோக்கலை பின்வருமாறு:

- அனைத்து வியாபார கொடுக்கல்வாங்கல்களும் நிறைவேற்றவதற்கு முன்னர் ஏற்கனவே காணப்படுகின்ற விதிகள் மற்றும் ஓழுங்குவிதிகளுக்கு அமைவாக முறையாக அதிகாரமளிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்.
- அனைத்து கணக்கீட்டு தகவல்களும் ளுயீ முறைமையில் முறையாக பதிவுசெய்யப்படுகின்றன அதேபோன்று முதல்நிலை பதிவுகள் செம்மையாக பேணப்படுகின்றன அத்துடன் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்கு தொடர்புடைய புள்ளிவிபரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு தரவுகள் முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்தல்.
- நிதியியல் மற்றும் கணக்கீட்டு கூற்றுகள் நிறுவனத்தின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வெளிப்படுத்துவதை உறுதிசெய்தல்.
- தொழிற்பாடுகளில் உள்ளக கட்டுப்பாட்டின் முறைமைகளின் வினைத்திறனை மதிப்பிடுதல்.
- பின்வருவனவற்றை மீளாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் முறைமை அடிப்படையில் அமைந்த அணுகுமுறையினை பின்பற்றுதல்:
- திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களும் ஏனைய தொழிற்பாடுகளும் கொள்கைக் குறிக்கோள்களை எய்துவதில் வெற்றிகரமானவையாக காணப்படுகின்றன என்ற ரீதியில் அளவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றவை உள்ளடங்கலாக திணைக்களம் ஒன்றின் தொழிற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முறைமைகளையும் செயன்முறைமைகளையும் வடிவமைத்தலும் தொழிற்படுத்தலும்.
- சட்டம் மற்றும் முன்வைக்கப்பட்ட எனைய தேவைப்பாடுகள் அத்துடன் முகாமைத்துவ திட்டங்கள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்குவித்தலின் அளவு.
- சொத்துகளைக் கையகப்படுத்தல், கையுதீர்த்தல் மோசடி, துர்நடத்தை முறைகேடு உள்ளடங்கலாக சொத்துகளை அல்லது நலன்களை இழப்புகளிலிருந்து பாதுகாத்தல்.
- மூலவளங்களை சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் பயன்படுத்தவதற்கும் விரயங்களை தவிர்ப்பதற்குமான ஒழுங்குகள்.
- தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அத்துடன் பொறுப்புக்கூறவதற்கு வழங்கப்படுகின்ற தகவல்களின் போதுமை, நம்பகத்தன்மை மற்றும் ஒருங்கமைவு மற்றுமஅத்தகவல்கள் பயன்படுத்தப்படுகின்ற அளவு.

◈ வெளிவாரிக் கணக்காய்வு

கம்பனியின் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதற்கும் அத்துடன் கம்பனியின் நிதியியல் நிலை மற்றும் செயலாற்றம் என்பனவற்றின் நியாயமான மற்றும் உண்மையான எடுத்துரைத்தல் மீது நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் பொறுப்புடையவர்களாவர்

1971இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2018 இன் தேசிய கணக்காய்வு சட்டம் என்பவற்றுக்கு இணங்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறுவனத்தின் வெளிவாரி கணக்காய்வினை கொண்டு நடாத்துவதுடன் ஆண்டுதோறும் நிதியியல் கூற்றுகளை வெளியிட்டு பாராளமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவையுடன் இணங்கல்

கோவை தொடர்பு	நிறுவன ஆளுகைக் கொள்கை	இணங்குவித்தல் விபரங்கள்	இணங்குவித்தல் நிலை
A	பணிப்பாளர்கள்		
A.1	சபை	உபாயமார்க்க வழிகாட்டலை உருவாக்குவதற்கும் கம்பனியின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு பலம் வாய்ந்த கட்டுப்பாட்டு சட்டகத்தை உருவாக்குவதற்கும் பணிப்பாளர் சபை தலைமைத்துவத்தை வழங்கும்.	இணங்கியது
A1.1	வழமையான பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்	• பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட்டதுடன், அவசியமான வேளையில் விசேட கூட்டங்கள் நடாத்தப்பட்டது. • பணிப்பாளர் சபைக்கான கூட்டத்திற்கு வருகை தந்தவர்களின் விபரங்கள் 64ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.	இணங்கியது
A1.2	பணிப்பாளர் சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்	சபை கீழ்வருவனவற்றுக்கான பொறுப்புகளை எடுத்துக்கொள்வதன் ஊடாக தொழில்முயற்சி தலைமைத்துவத்தை வழங்குகின்றது • உபாயமாவிருத்தல் மற்றும் அமுல்படுத்தல் • பிரதான முகாமைத்துவ நபர்களின் திறன்கள் மற்றும் ஆட்சேர்ப்பு • தகவல், உள்ளக கட்டுப்பாடுகள், வியாபார தொடர்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கான கட்டுறுதி • சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நெறிமுறை நியமங்களுடனான இணக்கம். • தீர்மானம் எடுத்தலின் போது அனைத்து பங்குதாரர்களின் நன்மைகள் தொடர்பாக கவனமெடுத்தல். • நிலையான வியாபார அபிவிருத்தி. • பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை இணைத்துக்கொள்ளல் மற்றும் நிதியியல் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல்	இணங்கியது
A1.3	நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக இணங்கியொழுகுதல் வேண்டும்	அனைத்து பிரயோகிக்கக்கூடிய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கம்பனி இணங்கியொழுகுபவரை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தும்.	இணங்கியது
A1.4	சபை மற்றும் கம்பனி விடயங்கள் தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பணிப்பாளரும் அர்ப்பணிப்பை மேற்கொள்ள போதிய நேரத்தை ஒதுக்குதல்	• ஏக்கவுண்டிங் சிஸ்டம் செக்ட்டேரியல் சேர்விஸ் (பிறைவட்) லிமிடட் பணிப்பாளர் சபையின் செயலாளர்களாக தொழிற்படுவதுடன், நிறுவன ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதுடன் பணிப்பாளர் சபை அதன் கடமைகள் மற்றும் பெறுப்புகளை வெளிப்படுத்துவதற்கு வழிகாட்டும். • அத்துடன் செயலாளர் முன்னோக்கிச் செல்வதற்கு அவசியமான புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பார்.	இணங்கியது
A1.5	சுயாதீனமான தீர்மானம்	சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களின் கண்ணோட்டத்தை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான சமமான சந்தர்ப்பம் பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது.	இணங்கியது
A1.6	சபை மற்றும் கம்பனி விடயங்கள் தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பணிப்பாளரும் அர்ப்பணிப்பை மேற்கொள்ள போதிய நேரத்தை ஒதுக்குதல்.	அறிவித்தல், நிகழ்ச்சிநிரல் மற்றும் சபைப் பத்திரங்கள் என்பவற்றை போதியளவு நேரம் எடுத்து மீளாய்வு செய்து, மேலதிக தகவல்களை அல்லது விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, அனைத்துப் பணிப்பாளர்களுக்கும், அவை முன்கூட்டியே பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.	
A1.7	அவசியமாயின், கம்பனியின் நலனுக்காக மூன்றில் ஒரு பணிப்பாளர்கள் வாக்கெடுப்பினை கோரி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியும்.		பொருத்தமற்றது
A1.8	சபை அறிமுகம் மற்றும் பயிற்சி	உள்ளக மற்றும் வெளிவாரி சூழல் தொடர்பாக உரிய தகவல்களை தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் தொடர்ச்சியாக பணிப்பாளர்களை இற்றைப்படுத்துகின்றது.	இணங்கியது
A.2	தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் இருவருக்கும் இடையிலான பொறுப்புகளின் பிரிப்பு	மீளாய்வுக்குட்பட்ட இந்த வருடம் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் எனும் இரு வகிபாகங்களும் ஒன்றிணைக்கப்பட்டன. நியாயப்படுத்தலுக்கு தயவுசெய்து A.2.1 ஐம் பார்க்க	Refer A.2.1
A.2.1	தலைவர் மற்றும் பிரதமநிறைவேற்று அலுவலர் ஒரு நபராக இருக்கும் பட்சத்தில் இணைக்கப்பட்ட வகிபாகங்களின் நியாயத்தன்மை	திரு.எம். உவைஸ் மொஹமட் பணிப்பாளர் சபையின் தலைவர் எனும் பதவிக்கு மேலதிகமாக முகாமைத்துவப் பணிப்பாளர் பதவியையும் வகித்தார். பங்குதாரர்களின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கும் வேகமான மற்றும் சுறுசுறுப்பான தலைமைத்துவத்திற்குமான தேவையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கட்டத்தில் இரண்டு வகிபாகங்களின் ஒன்றிணைப்பை மிகவும் பொருத்தமானது எனும் நிலைப்பாட்டை நிறுவனம் தக்கவைத்துக் கொண்டது.	இணங்கியது

A.3	தலைவரின் வகிபாகம் சிறந்த நிறுவன ஆளுகையைப் பாதுகாப்பதாகும்	தலைவர் பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுடன் கீழ்வருவனவற்றை உறுதிசெய்தல், ● பணிப்பாளர்களின் வினைத்திறனான பங்களிப்பு மற்றும் பங்குபற்றல் ● பரிசீலனையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக பணிப்பாளர்களின் கருத்துகள் உறுதியிட்டப்பட்டவை ● கம்பனி விவகாரங்கள் தொடர்பாக சபை பூரணக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அனைத்து பங்காளர்களுக்கும் அதன் கடமைகள் தொடர்பாக விழிப்பூட்டுகின்றது.	இணங்கியது
A.4	நிதிசார் புத்திஜீவிகளின் கிடைப்பனவு	கம்பனியின் நிதி விடயங்களைக் கையாளுவதற்கு சபைக்கு வழிகாட்டலை வழங்குவதற்கு அவசியமான நிதி அறிவினைக் கொண்ட அனுபவமுள்ள தொழில்சார் நிபுணர்கள் சபையில் உள்ளனர். ● திரு. சமிந்திர அபேசேகர ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கௌரவ வணிகவியல் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளார். அவர் பட்டய மேலாண்மைக் கணக்காளர் நிறுவனத்தில் (CIMA) உறுப்பினராக உள்ளார் மேலும் மேற்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் வணிக நீர்வாக முதுமானி பட்டமும் பெற்றுள்ளார். ● திரு. திலின பீரிஸ் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICASL) இறுதிப் பரீட்சை முடித்தவராவார்.	இணங்கியது
A.5	சபையின் சமநிலை		இணங்கியது
A.6	உரிய நேரத்தில் சரியான தகவல்களை சபைக்கு வழங்குதல் வேண்டும்		இணங்கியது
A.7	பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள்		இணங்கியது
B	பணிப்பாளர்களின் ஊதியம்		
B.1	நிறைவேற்றுத் தரத்தினருக்கும் பணிப்பாளர்களுக்குமான ஊதியம் மீது கொள்கையொன்றை உருவாக்கும் செயன்முறை யொன்றை நிறுவல்.		இணங்கியது
B.2	ஊதிய மட்டம் மற்றும் எல்லை		இணங்கியது
B.3	கொடுப்பனவு செய்யப்பட்ட சபைக்கான ஊதியத்தின் வெளிப்படுத்தல்	நிதியியல் தகவல் - விரிவான வருமானக்கூற்று	இணங்கியது
C	பங்குதாரர்களுடனான உறவுமுறை		
C.1	வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடு மற்றும் பொதுக்கூட்டங்களை நடாத்துதல்		இணங்கியது
C.3	தொடர்புடைய நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக அனைத்து முக்கியமான கொடுக்கல் வாங்கல்களையும் பணிப்பாளர்கள் வெளிப்படுத்தல் வேண்டும்.		இணங்கியது
D	பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வும்		
D.1	நிதியியல் அறிக்கையிடல்	● வருடாந்த அறிக்கையில் நிதியியல் நிலமை, செயலாற்றுகை, வியாபார மாதிரி, ஆளுகைக் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள், சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பான நடுநிலையான மீளாய்வினை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ● வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி தயாரிக்கும் போது கம்பனிக்கு பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியுள்ளது. ● கோவையில் குறிப்பிட்டவாறு வருடாந்த அறிக்கையில் கீழ்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளது. i. 30 - 57ஆம் பக்கம் வரை முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வுகள்	

		ii. 80-82ஆம் பக்கம் வரை பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை. iii. 110ஆம் பக்கத்தில் கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று iv. தொடர்ந்தியங்கும் நிலை மீதான கூற்று v. 80ஆம் பக்கத்தில் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் கூற்று. vi. 86 - 109ஆம் பக்கம் வரை சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை. vii. 20 - 21ஆம் பக்கம் வரை தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று viii. நிதியியல் சுற்றுகளின் குறிப்பு 19இல் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன ix. அழைக்கப்படுவதற்கு மூலதனத்தில் கடுமையான இழப்பு இல்லை • அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக அமைச்சினால் கோரப்படும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி சமர்ப்பித்துள்ளது	இணங்கியது
D.2	இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு	கம்பனிக் கொள்கைகளுக்கு அமைவாக பலமான இடர் முகாமைத்துவ சட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வழிகாட்டலுடனும் உதவியுடனும் உள்ளக கட்டுப்பாடுகள் காலமுறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் இடர் முகாமைத்துவப் பிரிவு தொடர்பாக 70 - 78ஆம் பக்கத்திலும். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 83 - 84ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது	இணங்கியது
D.3	கணக்காய்வுக் குழு	கணக்காய்வுக் குழு மூன்று பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவு துணைபுரிகின்றது. கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த அறிக்கையின் 83 - 84ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	இணங்கியது
E	நிறுவன முதலீட்டாளர்கள்		
	பங்குதாரர் வாக்கெடுப்பு	அனைத்து நிறுவனத்தின் பங்குதாரர்களும் பங்குதாரர் கூட்டத்தில் பங்கெடுப்பதற்கும் அனைத்து விடயங்கள் தொடர்பாக அவர்களுடைய கருத்தினை வழங்குவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.	இணங்கியது
	ஆளுகை வெளிப்படுத்துகை தொடர்பான மதிப்பீடு	வருடாந்த அறிக்கை, நிறுவன ஆளுகை செயன்முறையை வெளிப்படுத்துகின்றது.	இணங்கியது
G	இணையதளம் மற்றும் சைபர் பாதுகாப்பு		
	சைபர் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் நிறுவன வலையமைப்புக்கு கம்பனியின் உள்ளேயும் வெளியேயும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் இணைக்கப்படுவதற்குரிய செயன்முறையையும் பணிப்பாளர் சபை கொண்டிருத்தல் வேண்டும்.	• முழுமையான தொழிற்படுத்தப்பட்ட இடர் மீட்பு முகாமைத்துவ நிலையம் • வலையமைப்புப் பாதுகாப்பு, தரவு இழப்பு, இணைய வழியில் ஏமாற்றுதல் (சைபர் ஸ்புவிங்), விநியோகிக்கப்பட்ட சேவை தாக்குதல், மொபைல் டிவைஸ் மற்றும் சந்தேகத்திற்கிடமான சைபர் நடவடிக்கைகள் கண்காணிப்பு என்பவற்றுடன் கூடிய வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்ப அமுல்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அன்றாட பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தல் • காப்பு சேவையகம் மற்றும் மீட்பு சேவையகம் • மேலதிக விபரங்கள் 70 - 78ஆம் பக்கத்தில் உள்ள இடர் முகாமைத்துவ அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது	இணங்கியது
H	சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகைகளை அறிக்கையிடல்		
H.1	சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகை அறிக்கையிடல் செயலாற்றுகை தொடர்பாக போதிய வெளிப்படுத்துகைகளை வழங்குதல்	வருடாந்த அறிக்கை முழுமையான மீளாய்வினை வழங்குகின்றது. அறிக்கையின் வேறுபட்ட பகுதிகளில் குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட மூலதனங்களின் செயலாற்றுகை வழங்கப்பட்டுள்ளது.	இணங்கியது

இடர் முகமைத்துவம்

ஆற்றல்வாய்ந்த இடர் முகாமைத்துவ நடத்தைகள் நீண்டகால வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவையென சிபெஸ்ரேலி நிறுவனம் உறுதியாக நம்புகின்றது. கம்பனியின் இலக்கு நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்திற்கும் மிகவும் நிலைபேறான பெறுமதியினை சேர்க்கின்ற அதேவேளை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவாக தொழிற்பாடுகளை எதிர்மறையான பாதிக்கின்ற சாத்தியமான மேல்நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய அனைத்து காரணிகளையும் கவனத்திற் கொள்வதாகும். இடர் முகாமைத்துவமானது தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன் நிறுவன உபாயத்தினை நடைமுறைப்படுத்தவதற்கு மிக முக்கியமாக விளங்குகின்ற செயன்முறையினை பரிணமிக்கச் செய்கின்றது.

கம்பனியின் தொழில் இடர்நேர்வுகள் பல எண்ணிக்கையான காரணிகளால் பாதிக்கப்படுகின்றன, அவற்றில் அனைத்தும் கம்பனியின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை அல்ல. நிறுவனத்தின் கீர்த்தி, பாதுகாப்பு, சுற்றாடல், ஆரோக்கியம், பாதுகாப்பு பிரச்சினைகள், உற்பத்தித் தரம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பொதுவான தொழில் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையுடன் ஒன்றிணைந்த வெளிவாரியாக தூண்டப்படுகின்ற சவால்கள் கம்பனியின் இடர் முகாமைத்துவ செயல்முறையின் பாகமாக இடையறாது மீளாய்வுசெய்யப்படுகின்றன.

சிபெஸ்ரேலி நிறுவனத்திற்கான தொழில்முயற்சி இடர் முகாமைத்துவக் கொள்கை

இடர் முகாமைத்துவ உபாயமானது கம்பனியில் நிறுவன ஆளுகை, முகாமைத்துவ தீர்மானங்கள் மற்றும் தொழில் செயன்முறைகள் என்பவற்றின் மிக முக்கியமான பாகமாக காணப்படுகின்றது. ஒருங்கிணைங்கப்பட்ட இடர் முகாமைத்துவமானது மேலிருந்து கீழ்நோக்கிய தொழிற்பாடுகளின் செயல்திறன்வாய்ந்த இயக்கத்திற்கு அத்தியாவசியமானதாகும். இடர் முகாமைத்துவ முன்முயற்சிகளை தொழில் திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல் ஆகிய செயன்முறையினுள் இடம்பெறச் செய்வது திட்டமிடல், அறிக்கையிடல், கணக்காய்வு செய்தல் மற்றும் தகவல் முறைமைகளை முகாமைசெய்தல் என்பவற்றிற்கிடையில் காத்திரமான ஒருங்கிணைப்பொன்றை வழங்கும். சிபெஸ்ரேலி இடர் முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றுவதாயினும், சிபெஸ்ரேலி நிறுவனத்திற்கு முறையான தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ கொள்கையொன்று காணப்படவில்லை. தளம்பல் மிக்கதும் கொந்தளிப்பு மிக்கதுமான தொழில் சூழலில் இருந்து தொழிற்படுகின்ற

கம்பனி என்ற ரீதியில் சிபெஸ்ரேலி நிறுவனத்தின் தலைமைத்துவம் அதாவது தலைவரான திரு. உவைஸ் முஹமட் அதன் ஆளுகை செயன்முறையினை வலிமைப்படுத்துவதற்கான முயற்சியாக 2021.11.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் சிபெஸ்ரேலி நிறவனத்திற்கான தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ தொழிற்பாட்டுக்கான தொழில்சார் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு மிகவும் முன்மதிமிக்க தீர்மானத்தை மேற்கொண்டார்.

"சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிட்டெட், அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பவற்றை மேம்படுத்தவதற்கு மற்றுமொரு கொள்கை முயற்சியில் தடம்பதித்துள்ளது"

நிறுவனத்தின் முதன்மைக் தொழில் குறிக்கோள் சிபெற்கோ மற்றும் எல்ஐஓசி நிறுவனங்களின் மொத்த பெற்றோலிய உற்பத்திகளின் கட்டுக்காவலராக செயற்படுவதாகும் என்ற காரணத்தின் அடிப்படையில் சிபெஸ்ரேலி நிறுவனத்திற்கான கொள்கை முன்முயற்சியாக தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம் நீண்ட காலம் எதிர்பார்க்கபட்டிருந்ததாகும். சிபெஸ்ரேலி நிறுவனத்தின் பொறுப்புகளை நிறைவேற்றுகையில் எதிர்பாராத நிகழ்வொன்றினால் அதன் குறிக்கோள் இடையூறுக்குள்ளாக்கப்படாது என்பதனை காத்திரமான இடர்முகாமைத்துவ உபாயங்களை உறுதிசெய்வதன் காரணமாக இடர்கள் உன்னிப்பாக அடையாளப்படுத்தப்படுகின்றன என்பது முக்கியமாக காணப்படுகின்றது. மேலும் தொழில்சார் கட்டமைப்பொன்றினுள் இடர்களை முகாமைசெய்வது ஏதேனும் நிறுவனத்திற்கு குறிப்பாக சிபெஸ்ரேலி நிறுவனத்தை ஒத்த அதீதமாக தீப்பற்றக்கூடிய சூழல் ஒன்றில் தொழிற்படுத்தப்படுகின்ற ஒரு நிறுவனத்திற்கு பல எண்ணிக்கையான நன்மைகளை ஒன்றுசேர்ப்பதற்கு வழிவகுக்கும். சிபெஸ்ரேலி நிறுவனத்தை பின்னணியாக கொண்டு, புதிதாக தயாரிக்கப்பட்ட இடர் கொள்கையானது பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் தனிப்பட்ட ஊழியர்கள் போன்றோரின் பொறுப்புகளை தெளிவாக வரையறைசெய்யும் இது நிறுவனத்தினுள் கலாசார மாறுதல் ஒன்றுக்கு வழியமைக்கும். இதற்குப் பிரதான காரணம் தொழிற்முயற்சி இடர் முகாமைத்துவ கொள்கையானது இடர் பற்றிய விழிப்புணர்வும் இடர் கலாசாரமும் அதன் வெற்றிக்கான தளமாக அமைந்திருக்கும் என்ற உண்மையை வலியுறுத்துவதாகும். தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தல் முகாமைத்துவ கடமைப்பொறுப்பினை மாத்திரமன்றி அடிமட்ட ஊழியர்களினது பங்களிப்பினையும் வேண்டி நிற்கின்றது. இது இடரினை தணிப்பதற்கான பங்கேற்பு அணுகுமுறையொன்றினை உருவாக்கும்.

சமூக பொருளாதார அமைப்பில் நிச்சயமின்மை

"சமூக பொருளாதார அமைப்பில் குறிப்பான நிச்சயமின்மைகளுடன் இடர் காரணிகளின் வெளிப்படையான உள்ளடக்கம் வரவிருக்கும் ஆண்டுக்கு நிச்சயமின்மைகளை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

குறைவான உள்முகப் பணவரவுகள் மற்றும் இலங்கை ரூபா பெறுமதி குறைந்தமை என்பன காரணமாக வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை நெருக்கடியானது சக்தி நெருக்கடிக்கு இட்டுச் சென்றுள்ளது."

உலகளாவிய நோய்தொற்று நீடித்திருந்த காலப்பகுதி குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்களை தோற்றுவித்து மக்களின், தொழில்களின் அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிக்கப்படும் தன்மைகளையும் இடருக்குள்ளாகும் தன்மையினையும் அதிகரித்தது. 2021இல் புதிய திரிபுகள் மற்றும் அலைகளுடன் தொழில்களுக்கான இடையூறு தொடர்ந்தும் இடம்பெற்று, ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு அதேபோன்று தொழில் தொடர்ச்சி என்பன பற்றிய கரிசனைகளை எழச்செய்தது. நாடு முழுவதும் தடுப்பு மருந்துகள் விநியோகிக்கப்பட்டன. பண்ட விலைகள் உயர்வடைந்து நிரம்பல் - கேள்வி அழுத்தங்கள் காணப்பட்டமையினால் 2021இன் முதலரைப் பகுதியில் பணவீக்கம் அதிகரித்தது. தொற்று நோய் தொடங்கியதிலிருந்து பல அரசாங்கங்கள் அளவுசார் தளர்த்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தின. இது 2021இன் 2 ஆம் அரைப் பகுதியில் நாணய கொள்கை இறுக்கமாக்கல் மற்றும் வட்டி வீதங்களில் அதிகரிப்பு என்பவற்றிற்கு வழிவகுத்தது. தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் டிஜிட்டல் தளங்களுக்கு புலம்பெயர்ந்து, வியாபாரங்கள் அவற்றின் டிஜிட்டல் மயமாக்கங்கள் திட்டங்களை துரிதப்படுத்தி உலகம் முழுவதும் டிஜிட்டல் உட்கட்டமைப்பின் பயன்பாட்டு இயலளவை அதிகரிக்கச்செய்தது. இணையவழியாக தாக்குபவர்கள் மிகவும் நவீனத்துவம் பெற்றமையினால் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல் அபரிமிதமாக வளர்ச்சியடைந்து இணையப் பாதுகாப்பு முதலீடுகளில் அதிகரிப்பதற்கு அவசியப்படுத்தியது. 2021 இன் 4 ஆம் காலாண்டளவில் இலங்கை ஒன்றாக நிகழ்ந்த இடர் காரணிகளை எதிர்கொண்டு, அதன் பொருளாதார பாதிக்கப்படும்தன்மை அதிகரித்து அதன் நாட்டுக்கான தரப்படுத்தல் மேலும் தரங்குறைக்கச் செய்வதற்கு வழிவகுத்தது. சுற்றுலா துறையில் தொடர்ச்சியான பிரச்சினைகளும் அதேபோன்று குறைவான உள்முகப் பணவரவுகளும் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை நெருக்கடியை ஏற்படுத்தின. இது சக்தி நெருக்கடியொன்றுக்கும் இலங்கை ரூபா பெறுமதி குறைவடைவதற்கும் வழிவகுத்திருந்தது. சமூக பொருளாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைகளுடன் தெளிவாக ஒன்றாக நிகழ்ந்த காரணிகளும் வரவிருக்கும் ஆண்டுக்கு

நிச்சயமின்மைகளை தீவிரப்படுத்தியுள்ளன.

கம்பனியானது பொருளாதாரத்தின் மைய நரம்பாக காணப்படுவதனால், நாட்டில் எவ்விதமான நிலைமையின் அல்லது நெருக்கடியின் கீழும் கம்பனியின் தொழிற்பாடு அத்தியாவசியமானது. ஆகையினால், கம்பனியின் இடர் கணிப்பு உபாயமானது தொழில் தொடர்ச்சி திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை ஈடுபடுத்தி மாற்றுவழியாக பணியாற்றும் எற்பாடுகள் ஊடாக தொழிற்பாடுகளையும் இயக்கங்களையும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இயலச்செய்கின்ற அதேவேளை அரசாங்கத்தின் பணிப்புரைகளை கண்டிப்பாக கடைப்பிடித்து ஆதரவளிப்பதை இயலச்செய்கின்றது.

இடர் ஆளுகை

உபாய பணிப்புரையை வழங்குவதற்கும் இடர் முகாமைத்துவத்திற்கும் சபையே இறுதியாக பொறுப்புடையதாகும். உரிய காலத்தில் இடரை இனங்காண்பதற்கும் அதற்கான தெளிவான பொறுப்புக்கூறலை வசதிப்படுத்துவதற்கும் இடர் ஆளுகை கட்டமைப்பொன்றினை அவர்கள் நடைமுறைப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழு மற்றும் உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் என்பன கம்பனியின் முகாமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடர் முகாமைத்துவ செயன்முறையில் வழிகாட்டி ஆதரவளிக்கின்றனர்.

பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபையானது இடர் ஏற்பை நிர்ணயிப்பதற்கும் இடர் உபாயத்தினை தொடர்பூட்டுவதற்கும் செயல்திறன்வாய்ந்த இடர் முகாமைத்துவத்திற்கான கொள்கைகளை அங்கீகரிப்பதற்கும் பொறுப்படையதாகும்.

கணக்காய்வுக் குழு

உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்படும் அறிக்கைகளை மதிப்பிடுதல், அத்துடன் வெளிவாரி கணக்காய்வாளர்களின் சுயாதீனம் மற்றும் செயலாற்றுகையினை கணித்தல் என்பன வாயிலாக உள்ளக கட்டுப்பாடுகள் பற்றிய போதுமையினை குழு மீளாய்கின்றது. ஒவ்வொரு திணைக்களத்தின் மூலமும் அறிக்கையிடப்படுகின்ற இடர்களை மீளாய்வுசெய்து, அத்தகைய இடர்களிலிருந்து தோன்றுகின்ற தாக்கங்களை முகாமைசெய்து, தணிக்கக்கூடிய விதத்தில் கம்பனி மூலம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் குழு அனுமதிக்கின்றது.

பிரிவுகளின் பிரதானிகள்

பிரிவுகளின் பிரதானிகள் அவர்களது திணைக்களத்தினுள் இடரை முகாமைசெய்வதற்கும் பொருத்தமான இடர் தணிப்பு நிகழ்ச்சிதிட்டங்கள் செயற்பாட்டிலுள்ளன என்பதையும் அவை கம்பனியின் இடர் முகாமைத்துவ தரநியமங்களுக்கும் உள்ளக கட்டுப்பாடுகள் முறைமைக்கும் இணங்கி காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வதற்கும் முதன்மையாக பொறுப்புடையவர்களாவர்கள்.

உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வுகள்

உள்ளக கணக்காய்வின் வகிபாகமானது நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம், ஆளுகை. உள்ளக கட்டுப்பாட்டுச் செயன்முறைகள் எனபன செயல்திறன் வாய்ந்த விதத்தில் தொழிற்படுகின்றன என்ற சுயாதீன உத்தரவாதத்தை வழங்குவதாகும்.

வெளிவாரி கணக்காய்வாளர்கள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கும் கம்பனியின் நிதியியல் நிலை மற்றும் செயலாற்றுகை பற்றிய நியாயமான மற்றம் உண்மையான எடுத்துக்காட்டல் மீது நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதற்கும் பொறுப்புடையவர்களாவார்.

இடர் முகாமைத்துவச் செயன்முறை

இடர் முகாமைத்துவமானது தொடர்ச்சியான செயன்முறை ஒன்றாவதுடன் கம்பனியின் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகள் என்பவற்றில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இடர் முகாமைத்துவத்தின் நோக்கம் இடரை கையாளுகின்ற செயற்பாடுகள் திட்டமிடப்படக்கூடிய அத்துடன் தேவைப்பட்டவாறு உருவாக்கப்படக்கூடிய அல்லது குறிக்கோள்களை எய்துவதன் மீது சாதகமான தாக்கங்களை தணிப்பதற்கு எதிர்வுகூறக்கூடிய விதத்தில் இடர் நிகழ்வதற்கு முன்னர் சாத்தியமான பிரச்சினைகளை இனங்காண்பதாகும்.

இடர் முகாமைத்துவ செயன்முறையானது நான்கு படிமுறைகளை கொண்டுள்ளது.

01. இடர் மதிப்பீடு

தொழிலுக்கான உள்ளக மற்றும் வெளிவாரி சூழலிலிருந்து வருகின்ற நடப்பு, எதிர்கால, சாத்தியமான இடர்களை இனங்கண்டு, பகுப்பாய்வுசெய்து அத்துடன் மதிப்பிடுகின்ற முறைமைசார்ந்த செயன்முறை

02. இடர் பரிகாரம் / இடர் தணிப்பு


இடர் பரிகாரம் என்பது இடரொன்றினை முகாமைசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாகும். அதாவது கம்பனி இடரொன்றை தவிர்ப்பதா, கைமாற்றுவதா, குறைப்பதா, அல்லது ஏற்றுக்கொள்வதா என்பதாகும். இது இடரின் தன்மை மற்றும் மதிப்பீடு என்பவற்றைச் சார்ந்துள்ளது.

03. கண்காணிப்பும் மீளாய்வும்

இடர் கண்காணித்தல் என்பது செயற்பாட்டிலுள்ள இடர் முகாமைத்துவ உபாயங்களுக்கான ஏதேனும் அவசியமான சீராக்கங்களை இனங்காண்கின்ற, முன்னெடுக்கப்படுகின்ற அல்லது தொடர்ச்சியான செயன்முறையாகும்.

04. தொடர்பூட்டலும் ஆலோசனையும்

தொடர்பூட்டலும் ஆலோசனையும் இடர் முகாமைத்துவத்தில் தனித்துவமான கட்டமொன்றல்ல, ஆனாலும் ஒட்டுமொத்த செயன்முறை முழுவதும் இயங்குகின்றது. ஒரு நிறுவனம் அதன் அலுவலர்கள் ஒவ்வொருவரும் அவர்களது வகிபாகத்திற்கு அமைவாக நிறுவனத்தின் இடர் உபாயத்தை அறிந்துள்ளனர், இடர் முன்னுரிமைகள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்கூறல்களை அறிந்துள்ளனர் என்பதனை உறுதிசெய்ய வேண்டும். ஏனைய விடயங்களுக்கு மத்தியில், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடு பற்றிய ஆற்றல்வாய்ந்த உள்ளக தகவல்கள் மற்றும் செயன்முறைகளை தொடர்பூட்டல் அத்துடன் பொறுப்பினை ஏற்றல் என்பவற்றை உறுதிசெய்வதற்கு சபை பொறுப்புடையதாகும்.



இடர் முகாமைத்துவம் தொடர்பான நிறுவனத்தின் அணுகுமுறை

நிறுவன இடர்களை அடையாளம் காண்பதற்கு, முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் இடர்களை இல்லாது செய்வதற்கு கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்ட இரு நிலை தற்காப்பு மாதிரியை இணைத்துக் கொண்டுள்ளது

முதலாவது நிலைப் பாதுகாப்பு
தொழிற்பாட்டு தலைவர்கள்
தொழிற்பாட்டுத் தலைவர்கள் அவர்களுடைய தொழிற்பாடுகளுக்கு உரிய இடர்களை அடையாளம் காணுதல், அளவிடுதல், கண்காணித்தல், அறிக்கையிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு பொறுப்பாக உள்ளனர்.
நிறுவன உள்ளக கட்டுப்பாடுகளுக்கான விரிவான முறைமையை வடிவமைத்துள்ளது. இது பிரிவுத் தலைவர்கள் இடர்களுடன் தொடர்புடையவற்றை அடையாளம் காண்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் தடுப்பதற்குமான அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கியுள்ளது.
இரண்டாவது நிலைப் பாதுகாப்பு
உள்ளக கட்டுப்பாடு மற்றும் வெளிவாரி கணக்காய்வு
உள்ளக கணக்காய்வுகள் முழுமையான இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு சட்டகம் மற்றும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடல் சுயாதீனத்தின் வினைத்திறன் மற்றும் போதுமை பற்றிய சுயாதீன மதிப்பீட்டை வழங்குகின்றது. வெளிவாரி கணக்காய்வாளர்கள் சுயாதீன தரப்பினராவர் மற்றும் அவர்கள் கம்பனியின் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதுடன், நியாயமான உத்தரவாதத்தை வழங்குதல் அவர்களுடைய பொறுப்பாகும்.

நிறுவனத்தை பாதிக்கும் முக்கிய இடர்கள் பற்றிய கண்ணோட்டம்

இடர்	பிரதான தூண்டல்கள்	தணிப்பு உபாயமார்க்கம்
கோவிட் -19 நோய்ப்பரவல்		
சமூக இடைவெளியை உறுதிப்படுத்துவதற்காக ஊரடங்கு மற்றும் வீட்டில் இருந்து பணியாற்றல் போன்ற கண்டிப்பான வழிமுறைகளை அரசாங்கம் பின்பற்றியமையால் 2020 மார்ச்சில் கொவிட் -19 நோயின் சடுதியான பரவல் காரணமாக மீளாயப்படும் ஆண்டு பல சவால்களை எதிர்கொண்டது. 		கம்பனியின் உடனடி முன்னுரிமையாக அதன் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் அமைந்துள்ளது. ● தேர்ந்தெடுக்கப்பட்ட வகிபாகங்களுக்கு சுழற்சிமுறைப் பணிகள் மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றல். உதா: பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்கள் வீட்டிலிருந்து பணிகளைச் செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். ● பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஆடைகளை வழங்குவதற்கான ஏற்பாடு. ● பணிசெய்யும் இடத்தில் சமூக இடைவெளியைப் பேணுதல். ● உச்சளவான சுகாதாரத்தைப் பேணுதல். ● வளாகத்தில் உள்நுழையும் ஊழியர்களும் ஏனைய வருகையாளர்களுக்கும் அவசியமான மற்றும் பரிசோதனைக்கு கருவிகளைக் கிடைக்கப்பெறுதல். ● ஊழிய அங்கத்தவர்களின் வெப்பநிலை பரிசோதனை மற்றும் ஏனைய சோதனைகளை மேற்கொள்ளல். ● முக்கியமான பணிகளுக்கு இன்னுமொரு குழுவை தயார் நிலையில் வைத்திருத்தல். 

இயற்கை அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற நிலைகள்		
எங்கள் தொழிற்பாடுகளுக்கு எங்களின் கட்டுப்பாட்டுக்குள் அமையாத இயற்கை அனர்த்தங்கள் மற்றும் வேறு நிகழ்வுகள் தாக்கத்தினை உருவாக்கும். 	• வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு, கடுமையான காற்றும் என்பன இடையூறுகளை உருவாக்கும். • பயங்கரவாத நிகழ்வுகள்	• சில அடையாளம் காணப்பட்ட இடர்களுக்கு எதிராக காப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டது. . • கம்பனியானது பொருளாதாரத்தின் நாடியாக இருப்பதனால், உயர் பாதுகாப்பகள் மற்றும் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன.
தொழிற்பாட்டு இடர்கள்		
தொழிற்பாட்டுடன் தொடர்புடைய ஆபத்துகள் நிறுவனத்தை பாதிக்கும்  	• குழாய்களில் ஏற்படும் எதிர்பாரத ஒழுக்குகள் / சேதங்கள் தொழிற்பாட்டுத் தாமதத்தை ஏற்படுத்தும். • விநியோகக் கட்டமைப்பில் தடங்கல்களை ஏற்படுத்தும் • விபத்துகள் • பாரியளவிலான தீ விபத்து	• தொடர்ச்சியான சேவையளிப்பு மற்றும் பராமரிப்பு மூலம் குழாய் முறைமைகள் ஏற்படும் ஒழுக்குகளையும் சேதங்களையும் குறைத்தல். • எந்தவொரு ஆபத்தான தாக்கத்தையும் குறைத்துக் கொள்வதற்கு ஊழியர்களை போதியளவில் பயிற்றுதல். • CPSTL இன் தீயணைப்பு அலகு. 
போட்டியாளர்களின் இடர்		
ஏனைய முனையத் தொழில் கம்பனிகளில் இருந்து வரும் போட்டி. இவை வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் சௌகரியமான களஞ்சிய வசதிகளை வழங்குவதனால் இது எங்கள் நிதி நிலைமையையும் தொழிற்பாடுகளின் பெறுபேறுகளையும் எதிர்மறையாக பாதிக்கின்றது.	CPSTL இன் இரு பங்குதாரர்களான (CPC & LIOC) ஏனைய நிறுவனங்களிடமிருந்து போட்டியை நாம் சந்திக்கின்றோம்.	• பவுசர் தொகுதிகளினை அதிகரித்தல். • களஞ்சிய இயலளவை அதிகரித்தல் அல்லது வேறுவகையில் தற்போதுள்ள முனையங்களை விரிவுபடுத்தல். • சரியான முறையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் பயிற்றுவித்தல் என்பவற்றில் உயர் சேவை நியமங்களை பராமரித்தல். • எங்கள் போட்டியாளர்களுடன் முன்னேறு வதற்கு புதிய தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதன் ஊடாக மாறும் வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாகப் புத்தாக்கம்

சட்ட இடர்		
எமது தொழிற்பாடுகள் உற்பத்தித் தர விபரக்குறிப்புகள் தொடர்பான சட்டம் மற்றும் இலங்கை சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டவை. அத்துடன் நாங்கள் விநியோகிக்கும் பண்டங்கள் சில குறித்துரைக்கப்பட்ட தரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது எங்கள் விநியோகத்தர்களினால் வழங்கப்படும் பண்டங்களின் தோல்வியின் பெறுபேறாக சேதங்களுக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட முடியும்.	• ஆவியாதல் அமுத்தம், சல்பூரிக் அளவு, எதனோல் அளவு மற்றும் டீசல் அளவு உள்ளடங்கலாக உற்பத்தித் தர அமைப்புக் குறிபீடுகள் அல்லது கலவை தேவைப்பாடுகள் மீது சட்டத் தேவை. • எங்கள் தொழிற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யும் பண்டத்தரச் சட்டத்தை மீறுதல் குறிப்பிட்ட தண்டங்கள் மற்றும் அபராதங்களுக்கு உட்படுவதுடன் எதிர்மறையான பிரச்சாரத்தையும் ஏற்படுத்தும் • விபரக் குறிப்புகளை நிறைவு செய்யும் (தரமற்ற) பொது மக்களின் பயன்பாட்டுக்கு விநியோகிக்கப்படும் பண்டங்களின் விளைவாக ஏற்படும் எஞ்சினின் மோசமாக செயலாற்றுகை அல்லது எஞ்சினின் சேதம் போன்றன இழப்புகளுக்கான கோரிக்கைகளை வழங்குவதுடன் எதிர்மறையான பிரச்சாரத்தையும் ஏற்படுத்தும்.	CPSTL எந்தவொரு பெற்றோலிய எரிபொருளையும் பரிசோதனை செய்வதற்கான நவீன பரிசோதனைக்கூடத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சான்றுபடுத்தலுடன் இணங்கும் வகையில் தரக் கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படுகின்றது. 
சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் இடர்		
சிக்கலானதும் அடிக்கடி மாறும் சுற்றாடல், சுகாதாரம், பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு கம்பனி குறிப்பிடத்தக்களவு ஆகுசெலவுகளையும் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்கின்றது.	• கம்பனியினால் உயர் தீப் பற்றக்கூடிய பிரதான பண்டங்கள் கையாளப்படுவதனால் தொழிற்பாட்டு செயற் பாடுகள் உயர் இடர் வகையீட்டினுள் வருகின்றன. சிறிய தவறு பாரிய தீயினை ஏற்படுத்தக்கூடும். இது கம்பனியினதும் நாட்டின் பொருளாதாரத்தினதும் தொழிற்பாடுகளில் பாரிய தாக்கத்தை உருவாக்கும் • பெற்றோலியப் பண்டங்களின் களஞ்சியப்படுத்தல், கையாளுகை மற்றும் போக்குவரத்து என்பன சுற்றாடலுக்கு அபாயமான பதார்த்தங்கள் மற்றும் வாயுக்களையும் புகையையும் வெளியிடக்கூடும். • எங்கள் வியாபாரம் இயல்பாகவே பொருள் தற்செயலான கசிவுகள், கசிவுகள், வெளியேற்றங்கள், பெற்றோலிய அல்லது அபாயகரமான சம்பவங்கள் சூழலுக்குள் மற்றும் அண்டைய பிரதேசங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும், இவை கணிசமான பொறுப்பினை உருவாக்குவதனால் அதனை விசாரித்து தீர்வினைக் காணுதல் வேண்டும். • சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை காரணமாக நிர்வாக, சிவில் அல்லது குற்றவியல் தண்டங்கள், அனுமதி இரத்துச் செய்தல் மற்றும் அனைத்து அல்லது சில தொழிற்பாடுகளை வரையறுத்தல் அல்லது தடைசெய்தல் உள்ளடங்கலாக பொருளாதார தடை மதிப்பீடுகளை பெறுதல்	• CPSTL பிரத்தியேகமான உள்ளக தீ அணைப்பு அலகு, முதலுதவி பயிற்சி, தீயணைப்பு படை, பாதுகாப்புப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. தீயணைப்பு உபகரணங்கள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்யப்பட்டு அவை நல்ல நிலைமையில் உள்ளன என உறுதிப்படுத்தப்படுகின்றன. அதாவது தீயணைப்பு விழிப்புக் கருவி நாள்தோறும் பரிசீலிக்கப்படுகின்றது. அலுவலக உபரகணங்கள், குழாய்த் தொகுதி நாள்தோறும் பரிசோதிக்கப்படுகின்றது • எண்ணெய்ப் படிவுகள் உரிய கேள்விப்பத்திர முறை ஊடாக காலத்திற்கு காலம் அகற்றப்படுகின்றதுடன், அது சுற்றாடலில் எவ்வித சேதத்தையும் உருவாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது. • தேவைப்படுத்தப்பட்ட நியமத்தில் கழிவுநீரை வைத்திருப்பதற்கான கழிவுநீர் அகற்றல் முறைமையை ஒழுங்குமுறைப்படுத்தல். • உரிய முறையிலான கழிவு வேறாக்கல் மற்றும் அகற்றல் முறைமை அமுல்படுத்தப்பட்டது. • குழாய் இணைப்புகளை மற்றும் கரைகடந்த ஒழுக்குகளை கையாளுவதற்கு ஊழியர்கள் உரிய முறையில் பயிற்றப்பட்டுள்ளனர்

சைபர் இடர்		
நாங்கள் எங்கள் சொத்துக்களை தொழிற்படுத்துவதற்கும் எங்கள் வியாபாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கும் தொழில்நுட்பவியல் முறையைப் பயன்படுத்துகின்றோம். எங்கள் தகவல் தொழில்நுட்ப முறைமை மீதான சைபர் தாக்குதல்கள் அல்லது ஏனைய பாதுகாப்பு மீறல்கள் பாரிய தொழிற்பாட்டு அல்லது நிதியியல் கட்டுப்பாடு என்பவற்றை மீறி எங்கள் தொழிற்பாடுகள், வர்த்தக நடவடிக்கைகள் அல்லது நிதியில் செயன்முறையில் தடையினை ஏற்படுத்தக்கூடும்.  	• கோவிட்-19 நோய்ப்பரவல் காரணமாக ஊழியர்கள் வீட்டிலிருந்து பணிபுரிந்ததனால் திறந்த இணைய சேவையைப் பயன்படுத்தியமையினால் தகவல் மற்றும் சாதனப் பாதுகாப்பிற்கு இடர் வெளிபாடு காணப்பட்டது. • இலக்கு வைக்கப்பட்ட ஹக்கர்களின் தாக்குதல்கள், இலக்கு வைக்கப்படாத ஒருங்கிணைக்கப்பட்ட சேதங்கள், உள்ளக தாக்குதல்கள், விபத்தான சைபர் நிகழ்வுகள் அல்லது ஏதேனும் இணைந்த நிகழ்வுகள் என்பன தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.	• வலையமைப்பு பாதுகாப்பு, தரவு இழப்பு, இணைய வழியில் ஏமாற்றுதல் (சைபர் ஸ்புவிங்), விநியோகிக்கப்பட்ட சேவை தாக்குதல், மொபைல் டிவைஸ் மற்றும் கண்காணிப்பு சந்தேகத்திற்கிடமான சைபர் நடவடிக்கைகள் என்பவற்றுடன் கூடிய வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்ப அமுல்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அன்றாட பரிசோதனை • முழுமையான தொழிற்படுத்தப்பட்ட இடர் மீட்பு முகாமைத்துவ நிலையத்தை நிறுவுதல் • காப்பு சேவையகம் மற்றும் மீட்பு சேவையகம்
ஊழியர்களை தக்கவைப்பு இடர்		
எங்களின் எதிர்கால வெற்றி எங்கள் நிறைவேற்றத்தர அலுவலர்களினதும் ஏனைய பிரதான நபர்களினதும் தொடர்ச்சியான சேவையில் தங்கியுள்ளது. நாங்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்றத்தர அலுவலர்களினதும் ஏனைய பிரதான நபர்களினதும் சேவையை நாங்கள் இழந்தோம் எனில் அதன் விளைவாக எங்கள் வியாபாரத்தின் தொழிற்பாட்டு பெறுபேறுகள் மற்றும் நிதியியல் நிலைமைகள் தாக்கமடையக்கூடும்	• தற்போதைய பதவியுயர்வு மற்றும் நடைமுறைகள் தொடர்பாக ஊழியர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். • தொழில் அபிவிருத்திக்கு போதிய சந்தர்ப்பமின்மை • எண்ணப்பங்கு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. • வலுவற்ற தலைமைத்துவம் • நெகிழ்வற்ற தன்மை	• ஊழியர்களை அங்கீகரித்தல், பாராட்டுதல்கள் மற்றும் பதவியுயர்வுகள் போன்ற பலமான பெறுமதி ஊக்குவிப்பின் ஊடாக ஊழியர்களை பராமரித்தல். • பதவியை மேம்படுத்தவதற்கான சந்தர்ப்பங்கள். • தொடர்ச்சியாக ஈடுபடுதல் மற்றும் சமூக மற்றும் நலன்புரி நிகழ்வுகளை நடாத்துதல் • பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் தொடர்ச்சியான முதலீடு மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள். 
பொருளாதார இடர்		
எங்கள் நிதியில் பெறுபேறுகள் எங்கள் முனையங்களில் நாங்கள் தொழிற்படுத்தும் இலகு சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள், கனரக சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள், மசகு எண்ணெய் மற்றும் ஏனைய சேவைகளுக்கான கேள்வியில் தங்கியுள்ளது. நிலையான காலத்திற்கு அந்த பண்டங்களுக்கு காணப்படும் குறைந்த கேள்வியின் பெறுபேறாக பொதுவான பொருளாதார வீழ்ச்சி ஏற்படலாம். இது எங்கள் முனையங்களில் களஞ்சியப்படுத்தலில் குறிப்பிட்டளவு வீழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது எங்கள் காசுப் பாய்ச்சலினையும் எங்கள் பங்குதார நிறுவனங்களுக்கான விநியோக இயலுமையையும் குறைக்கும்.	இலங்கையின் அனைத்து குடிமக்களின் நலனுக்காக கோவிட்-19ஐ சிறப்பாகக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கக் கொள்கை மற்றும் விதிமுறைகள் உதாரணம்: அதாவது சமூக இடைவெளியை உறுதி செய்வதற்காக ஊரடங்கு உத்தரவு மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்யும் திட்டங்கள் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இலங்கை ரூபாயின் மதிப்பு மார்ச் மாதத்திலிருந்து கடுமையான வீழ்ச்சியை வெளிப்படுத்தியது 2020 இல் COVID-19 இன் பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து மசகு எண்ணெய்க்கான விலை சூத்திரத்தின் தாக்கம், உலக சந்தையில் பீப்பாய் ஒன்றின் விலைக்கு ஏற்ப எரிபொருள் விலையை தொடர்ந்து மாற்றங்களை ஏற்படுத்தும். வரிகள், வட்டி விகிதங்கள், பணவீக்கம் மற்றும் எரிசக்தி விலைகள் மீதான அரசின் கொள்கைகள் எரிபொருள் பொருட்களின் தேவையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.	• எதிர்மறையான பொருளாதார காரணிகள் காரணமான நியியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு குறுங்கால மற்றும் நீண்ட கால நிதியியல் கருவிகளில் முதலீடுகள். • ஆய்வுகூட பரிசோதனைக் கட்டணங்கள், தனியார் பவுசர்/ கொண்டு செல்லும் கட்டணங்கள், தீ அணைப்பு சேவைகள், ஒப்பரவுக் கட்டணங்கள், வாடகை வருமானம் போன்ற ஏனைய வருமானங்களை மேம்படுத்தல்.

கையிருப்பு, ஆதனம் மற்றும் உபகரணங்களின் இடர்கள்		
களஞ்சியப்படுத்தல் பண்டங்களின் தீப்பற்றும் நிலை காரணமாக போதியளவு கையிருப்பில்லை மற்றும் காப்புறுதியில் காணப்படும் தெளிவின்மை காரணமாக காப்புறுதி கோரிக்கைகள் காப்புறுதி கம்பனிகளினால் நிராகரிக்கப்படலாம்.		• இலங்கை காப்புறுதி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளில் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளல் • CPSTL தீ மற்றும் வணிக காப்புறுதி, முழு (கரைகடந்த குழாய்கள்), பண்டக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, களஞ்சிய தாங்கிகள் மற்றும் உபகரணங்களுக்கு காப்புறுதி பூட்கைகளை பெற்றுக்கொண்டுள்ளது.
ஊழியர்களின் உறவுமுறை இடர்		
99% வீதமான எங்கள் ஊழியர்கள் தொழிற்சங்கத்தில் இணைந்துள்ளனர். இதனை நாங்கள் சங்கங்களுடன் இணைவதற்கான சுதந்திரம் என அங்கீகரிக்கின்றோம்	• தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தம் தேவையற்ற தடங்கல்களுக்கு காரணமாகின்றது.	• எந்தவொரு விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு ஊழியர்களுக்கு திறந்த கதவுக் கொள்கை பின்பற்றப் படுகின்றது. • அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஒழுங்குமுறையாக கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் மேற்கொள்ளல். • அவர்களுடைய பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு ஊழியர்களுக்கு திறந்த கதவுக் கொள்கை பின்பற்றப் படுகின்றது.
எரிபொருள் முனைய கைத்தொழிலுக்கு குறித்துரைக்கப்பட்ட பணியிடன் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் கிடைக்கப்பெறாமை		
வரையறுக்கப்பட்ட இருப்பு செயல்படுத்தும் வேகத்தைப் பாதிக்கும் வேகம் மற்றும் பணியின் உயர் ஆகுசெலவு, பணிகளை விரைவாக நிறைவேற்றுவதில் தாக்கம் மற்றும் உயர்வாக பணிச்செலவு		• உள்ளூர் தரப்பினர்களுக்கு பணிகளை வழங்குதன் ஊடாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது உள்நாட்டு தரப்பினருடன் இணைந்து வெளிநாட்டுத் தரப்பினர் பங்குபற்ற முடியும்
உள்ளூர் சமூக உறவுகள் இடர்		
கம்பனி பற்றிய எண்ணப்பாங்கைள கட்டியெழுப்புவதற்கு நாங்கள் செயற்படும் சமூகத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வலுவூட்டல் மற்றும் பங்களிப்பு செய்தல். உதாரணம்: கொழும்பில் இருந்து கொலொன்னாவை வரையிலான புதிய குழாய் இணைப்புக்கு கிராம மக்கள் மற்றும் வதிவிடதாரருடன் ஏற்படும் முரண்பாடுகள். 		• உயர் மட்ட சமூக ஈடுபாடு மற்றும் எங்கள் சமூகத்துடன் உண்மையான உறவுகளை பலப்படுத்தல். உதா. நாட்டினுள் கொவிட்-19 ஐக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களுக்கு கைகழுவல் திரவங்கள் வழங்கப் பட்டதுடன் பொது இடங்கள் நோய் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.  • நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தி கருத்திட்டங்களில் முதலீடு செய்தல் உதா. கொழும்பு கோட்டையில் இருந்து கொலன்னாவை முனையம் வரை அமைந்துள்ள குழாய்களுக்கு அண்மையில் சட்ட விரோதமாக குடியிருக்கும் மக்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்பட்டது.
மோசடி மற்றும் சட்டவிரோதச் சட்டங்கள்		
முகாமைத்துவ மோசடி, ஊழியர் மோசடி மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகள் இடர்		உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை மீது சுயாதீன உத்தரவாதத்தை வழங்குவதற்கு CPSTL தனியானதொரு உள்ளக கணக்காய்வு அலகினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் தலைமையின் மேற்பார்வையின் கீழ் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. வெளிவாரி கணக்காய்வாளர்களினால் நிதியில் கூற்றின் நேர்மை மதிப்பீடு செய்யப்படுகின்றது


GUNARATHNA GROUP

பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கம்பனியின் விவகாரங்கள் பற்றிய 2021 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இந்த அறிக்கை 2023 ஏப்ரல் 6ஆம் திகதி பணிப்பாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டது.

முதன்மை நடவடிக்கை

கம்பனியின் முதன்மை நடவடிக்கையானது, இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் 2003 ஒக்டோபர் 13ஆம் திகதி வெளியிடப்பட்ட 1310-8 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளவாறு எண்ணெய் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய்த் தொகுதிகள் மற்றும் பவுசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பை உரித்தாகக் கொள்ளுதல், தொழிற்படுதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் மற்றும் கொலொன்னாவை, முத்துராஜவெல நாடு முழுவதிலும் உள்ள மொத்தக் சாலைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் மற்றும் முத்துராஜவெல எண்ணெய் நிலையத்திற்கான தனி நிலைய நங்கூர மிதவை கொழும்பு துறைமுகம் முதல் கொலொன்னாவை நிலையம் வரை மற்றும் வாடிக்கையாளர் சேகரிப்பு எல்லைகள் வரை அவற்றின் கிளைகள், காலி துறைமுகம் தொடக்கம் மாகல்ல வரை மொத்தக் சாலைகள் மற்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிலையங்கள் மொத்தச் சாலைகளிலுள்ள குழாய்த் தொகுதி போன்றன தொடர்பில் பயன்படுத்தவதற்கான உரிமை அத்துடன் அல்லது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் குத்தகை உரித்து உரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டாளர் வசதியாகும்

தொழிற்பாடுகள் நிதியியல் சிறப்புக் கூறுகளும் பற்றிய மீளாய்வும்

தொழிற்பாடானது தேறிய இலாபமாக ரூபா 14,276,189,272 கொண்ட வருமானமாக ரூபா 1,182,188,045 ஐ உடன் காண்பித்துள்ளது.

விபரங்கள்	31.12.2021 ரூபா.	31.12.2020 ரூபா.
புரள்வு	14,276,189,292	13,567,875,876
வரிக்கு முன்னரான உழைப்பு	1,595,321,623	2,215,136,892
வரிக்கு பின்னரான இலாபம்/ நட்டம்	1,182,188,045	2,001,199,709

கூறப்பட்ட மூலதனம்

2021 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு கூறப்பட்ட மூலதனம் ரூபா 7,500,000,000 ஆகும். பங்குரிமை விநியோகம் பின்வருமாறு

	சாதாரண பங்குகள்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	500,000,000
இலங்கை இந்தியன் ஒயில் கம்பனி லிமிடட்	250,000,000

ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ் ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 10 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பங்கிலாபம்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான பங்கிலாபத்தை பணிப்பாளர்கள் பரிந்துரைக்கவில்லை

நிறுவன அன்பளிப்புகள்

ஆண்டின் போது கம்பனி ரூபா 317,000 தொகையை நன்கொடைகள் மற்றும் அனுசரணைக் கொடுப்பனவுகளாக வழங்கியது.

2021 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிபாளர் சபை பின்வருமாறு

திரு. கே.கே.எஸ். நாலக பெரேரா
திரு. சமிந்திர அபேசேகர
திரு. புத்திக மடிஹஹேவா
திரு. ஈ. ஏ. ரத்னசீல
திரு. மனோஜ் குப்தா
திரு. அசீம் பர்கவா
திரு. ராஜேஸ் பகட்
திரு. திலின பீரிஸ்
திரு. ஈ.ஏ.பி.வீ.ஆர். அமரதுங்க

பணிப்பாளர்களின் வேதனாதிகள்

பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற வேதனாதிகள் நிதிக்கூற்றக்கான வருமானக் கூற்றில் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன

நலன்கள் பற்றிய பதிவேடு

கம்பனியானது 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக நலன்கள் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணுகின்ற போது 2017 இன் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 192 (2)இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அனைத்துப் பணிப்பாளர்களும் பிரகடனங்களை மேற்கொள்ள வேண்டும். தொடர்புடைய பதிவுகள் மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது நலன்கள் பற்றிய பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டன.

நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசாங்கத்துடன் தொடர்புடைய மற்றும் ஊழியர்களுக்கான அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகளுக்கும் உரிய திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது கம்பனியின் ஏடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

வியாபார தொழிற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய நிதி கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை பின்பற்றுவது பொருத்தமானது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 30இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய சரிப்படுத்தல்களை வேண்டுகின்ற கம்பனி மீதான ஏதேனும் முக்கிய தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிகழ்ந்துள்ள முக்கிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை.

கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்த நியதிகளுக்கு அமைய கம்பனியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அல்லது அவர் பெயர் குறிப்பிட்டவரை நியமிப்பதற்கு கம்பனி வேண்டப்பட்டுள்ளது.

2021 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளருக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் நிதியியல் கூற்றுக்களுக்கான விபரிக்கப்பட்ட வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அறிந்தவரையில் மேலே வெளியிடப்பட்டவை தவிர கணக்காய்வாளர்கள் கம்பனியுடன் ஏதேனும் உறவினை (கணக்காய்வாளர் ஒருவராகத் தவிர) கொண்டிருக்கவில்லை. கணக்காய்வாளர்கள் கம்பனியில் அல்லது அதன் குழுமக் கம்பனிகளில் ஏதேனும் நலனையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு அமைவாக அவர்கள் சுயாதீனமானவர்கள் என்பதை உறுதிசெய்கின்றனர்.

பணிப்பாளர் சபைக்காகவும் சார்பாகவும்

எம்.யு. உவைஸ் மொஹமட் — பணிப்பாளர்
தலைவர்

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைவாக

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கட்டேரியல் சேர்விஸஸ் (பிறைவட்) லிமிடட்
கம்பனி செயலாளர்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

உள்ளமைப்பு

இலங்கை பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்ட 03 அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருந்தது.

- திரு.ஈ.ஏ ரத்னசீல - தலைவர்
- திரு. புத்திக மதிஹஹேவா - அங்கத்தவர்
- திரு.அசீம் பார்கவா - அங்கத்தவர்

திரு. பிரமோத் ஜெயின் 04.05.2021 வரை உறுப்பினராகப் பணியாற்றினார் மற்றும் திரு. அசீம் பார்கவா 17.08.2021 முதல் உறுப்பினராகப் பணியாற்றுகிறார்.

அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வு குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகளின் நோக்கெல்லையினை உள்ளடக்கி கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாணை தயாரிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கடமைகள்

இக்குழு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை, உள்ளக கணக்காய்வு செயன்முறை, உள்ளக கட்டுப்பாடுகள் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் மீதான சாத்தியமான தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் இதனூடாக நிதியியில் கூற்றுக்களில் தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு அத்துடன் அண்மைய தொழில்சார் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிவுறுத்தல்கள் மூலம் எழுப்பப்படும் முக்கிய கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்கின்றது. இதற்கு புறம்பாக குழுவானது கம்பனி ஆட்பட்டுள்ள இடரினை தணிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயற்திறன் என்பவற்றை மீளாய்வு செய்கின்றது.

உள்ளக கணக்காய்வுகள்

சொத்துக்களைப் பாதுகாக்கின்றதுடன், பணிப்பாளர்களுக்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்ற நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் மற்றும் தயாரிப்புகள் வரை நிதியியல் அறிக்கையிடல் முறைமை நம்பப்படலாம் என்ற வகையில் வடிவமைக்கப்பட்ட வினைத்திறனான நிதியியல் கட்டுப்பாடுகளை அணுகக்கூடிய கணக்கியல் முறைமை மற்றும் உள்ளக கணக்காய்வு முறையின் நோக்கெல்லை மற்றும் பூர்த்திசெய்தல்கள் அமைந்துள்ளதை மீளாய்வு செய்கின்றது. உள்ளக கணக்காய்வு செயற்பாடு கம்பனியுள் நிறுவப்பட்டுள்ளது. பின்னூட்டல் மீளாய்வுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு கணக்காய்வு விதப்புரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்கின்றது.

இடர் அடிப்படையிலான உள்ளகக் கணக்காய்வு என்பது உள்ளக கணக்காய்வின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்காக 2018 இல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறையாகும். இடர்தரப்படுத்தல் நிர்வாகத்திற்கு இதுபோன்ற சிக்கல்களுக்கு அதிக கவனம் செலுத்துகிறது உடனடி தீர்வு நடவடிக்கைகள். உள் தணிக்கையின் நோக்கம் அங்கீகரிக்கப்பட்ட உள் தணிக்கை சாசனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

நியதிச்சட்ட கணக்காய்வுகள

2018 இன் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் படி கணக்காய்வுத் தன்மை, அணுகுமுறை மற்றும் நோக்கம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வதற்காக இலங்கையின் தேசிய கணக்காய்வு அலுவலகமான நியதிச்சட்ட கணக்காய்வாளர்களுடன் குழு ஆலோசிக்கிறது. எழப்பட்ட பிரச்சினைகளில் பதிலிறுத்துவதில் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதேபோன்று செயற்பாட்டில் உள்ள உள்ளக கட்டுப்பாடுகளின் செயல்திறன் எனபனவும் கலந்துரையாடப்படுகின்றன.

கூட்டங்கள்

மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டின் போது மேலே குறிப்பிட்டவாறு குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செயலாற்றுவதற்காக 8 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின் போது கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இல	திகதி	குழுவின் உறுப்பினர் எண்.	பங்குபற்றிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை	அங்கத்தவர்களின் பெயர்		
01	04.01.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	பிரமோத் ஜெயின்
02	19.02.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	பிரமோத் ஜெயின்
03	25.03.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	பிரமோத் ஜெயின்
04	04.05.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	பிரமோத் ஜெயின்
05	17.08.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	திரு. அசீம் பார்கவா
06	11.10.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	திரு. அசீம் பார்கவா
07	22.11.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	திரு. அசீம் பார்கவா
08	25.11.2021	03	03	திரு. ஈ.ஏ.ரத்னசீல	திரு. புத்திக மதிஹஹேவா	திரு. அசீம் பார்கவா

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு வகிபாகம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது உபாயமார்க்க பிரச்சினைகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு பல தீர்மானங்களையும் விதப்புரைகளையும் வழங்கியது.

- முகாமைத்துவம், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல்.
- வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான எடுத்துரைப்பினை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையினை மேற்பார்வை செய்தல்.
- நட்டங்களை உருவாக்கும் அலகுகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விதப்புரைகளை முன்மொழிவதற்காக ஏற்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்களை அடையாளம் காணுதல் மற்றும் விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வு செய்தல்.
- வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை மீளாய்வு செய்தல்.
- உயர் மட்டத்தின் தொனியிலிருந்து வெளிக்கொணருகின்ற வலுவான மற்றும் செயற்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் முழுவதும் கடமைப் பொறுப்பொன்றினை உருவாக்குதல்.
- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், ஒழுக்கநெறிகள், ஆர்வமுரண்பாடு போன்றவற்றுடனான இணங்குவித்தல் தொடர்பில் நிறுவனக் கொள்கைகளை மீளாய்வு செய்தல்.
- நிலமைகள், முன்னேற்றங்கள், புதிய அபிவிருத்திகள், பிரச்சினை மிக்க விடயப் பரப்புகள் தொடர்பில் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துதல்

முடிவுரை

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியியல் கூற்றுகள் வரலாற்று ஆகுசெலவு மாற்றீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழுவானது, கம்பனியின் விவகாரங்கள் அதன் கொள்கைகளுக்கு அமைவாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதுடன் அதனூடாக கம்பனியின் சொத்துக்கள் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டு போதிய பாதுகாப்பளிப்பதற்கு கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு போதியளவான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது என்பது தொடர்பாக திருப்தியடைகின்றது.



ஈ.ஏ. ரத்னசீல

தலைவர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு



நிதி அறிக்கைகள்



கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. ENR/A/CPSTL/1/21/1

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 14 December 2022

தலைவர்
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் லிமிடட்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ்லிமிடெடின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1. முனைப்பலியுள்ள அபிப்பிராயம்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினலஸ் லிமிடெடின் (கம்பனி) 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப் பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம், எனது அறிக்கையின் முனைப்பலியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களுக்கான விளைவுகள் தவிர, இணைந்துள்ள நிதிக்கூற்றுகள், 2021 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான கம்பனியின் நிதியியல் நிலைமை மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்றன.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

1.2 விடயங்களின் முக்கியத்துவம்

சொத்துக்களின் நியாயமான மதிப்பீடு தொடர்பான விடயங்களை விவரிக்கும் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தால் நீண்டகால நிலுவைத் தொகைகள் தொடர்பாக நிறுவனத்திடம் எழுப்பப்பட்ட மதிப்பீட்டின் பின்வரும் குறிப்புகளுக்கு நான் கவனம் செலுத்துகிறேன். இந்த விடயங்களில் எனது கருத்து ஏற்புடையதல்ல.

(அ) நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்பு 10.5, நிலையான சொத்துக்களை அதன் நியாயமான மதிப்பைக் கொண்டு வர மறுமதிப்பீடு செய்வதை விவரிக்கிறது. நிறுவனம் 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து அதன் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வதற்கான சரியான கொள்கையை நிறுவவில்லை, அதன்படி, ரூ. 7,875,277,911 மதிப்புள்ள 22,902 பொருட்களை உள்ளடக்கிய முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள், மறுமதிப்பீடு செய்யப்படாமலும், பயனுள்ள பொருளாதார வாழ்நாளைக் கணக்கிடாமலும் நிறுவனத்தால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது.

(ஆ) குறிப்பு 20.1(டி) நிதிநிலை அறிக்கைகளுக்கு, உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தால் நிறுவனத்திற்கு நீண்ட நிலுவையில் உள்ள மொத்த நிலுவைத் தொகைகள் தொடர்பான மதிப்பீட்டை விவரிக்கிறது. 897 மில்லியன் வருமான வரி, மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் நீங்கள் ஈட்டும்போது வரி செலுத்துங்கள் (PAYE).

1.3 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

1.3.1. கணக்கியல் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(அ) சொத்து, ஆலை ரூ உபகரணங்கள்

(i) சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் ரூ. 142.505,091 கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து, பயன்பாட்டிற்கு எளிதாகக் கிடைக்கும் நிலையில், மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டின் நிதிநிலை அறிக்கைகளில் பணி நடைபெற்று வருவதாக (WIP) காட்டப்பட்டுள்ளது. மேலும், LKAS 16ன் அடிப்படையில் தேய்மானத்திற்கான ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

(ii) 2021 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு சொந்தமில்லாத எரிசக்தி அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பிப்பதற்காக, ரூ. 10,171,541 செலவிட்டதாக மதிப்பாய்வின் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் றுஜீ என பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கம்பனிக்கிடையிலான மீதிகள்

பின்வரும் காரணங்களால் கம்பனிக்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகியவற்றிற்கு இடையேயுள்ள நிறுவனங்களுக்கு இடையிலான நிலுவைகளின் செம்மை, இருப்பு, உறுதிப்படுத்தல் மற்றும் முழுமை என்பன கணக்காய்வில் சரிபார்க்க முடியவில்லை.

(i) கம்பனியின் பதிவுகளின் பிரகாரம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் கிடைக்கப்பெறவேண்டிய மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவேண்டிய தொகைகளாக முறையே ரூ. 8,608 மில்லியன் மற்றும் ரூ.404 மில்லியன்காணப்பட்டன. எனினும்,இலங்கைப்பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தினால் பேணப்படும் பதிவுகளின் பிரகாரம், கம்பனியிடமிருந்தகிடைக்கப் பெறவேண்டிய மற்றும் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய நேரொத்த தொகைகள், முறையே ரூ 8,333 மில்லியன் மற்றும் ரூ 662 மில்லியன் ஆகவிருந்தது. அதற்கமைய, இரு நிறுவனங்கங்களுக்கிடையிலும் கம்பனிகளுக்கிடையிலான கிடைக்கப்பெறத்தக மற்றும் செலுத்தப்படத்தக்க முறையே ரூ. 535 மில்லியன் மற்றும் 277 மில்லியன் தொகையினை உள்ளடக்கியிருந்த ரூ.258 மில்லியன் கொண்ட இணக்கம்பார்க்காத தேறிய வேறுபாடு விலகியிருந்தது.

(ii) கம்பனியின் பதிவுகளின் பிரகாரம், லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்து கிடைக்கப்பெற்வேண்டிய தொகை ரூ. 710 மில்லியனாகவிருந்ததுடன் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிடமிருந்த கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தலின் படி, கம்பனிக்கு செலுத்தப்படதக்க தொகை ரூ. 715 மில்லியனாகும். அதற்கமைய, மீளாய்விற்குட்படுகின்ற ஆண்டின் இறுதியிலுள்ளவாறு நிறுவனங்கங்களுக்கிடையிலும் கம்பனிகளுக்கிடையிலான நிலுவையில் ரூ.5 மில்லியன் கொண்ட இணக்கம்காணப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) காசும் காசுக்கு சமமானவையும்

மொத்த பரிவர்த்தனை ஆதாயம் ரூ.92.134 மில்லியன் 5 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் வெளிநாட்டு நாணயம் குறிப்பிடப்பட்ட வங்கி நிலுவைகளை ரூபாயாக மாற்றுவது தொடர்பாக எழும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் வருமானமாக முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், அந்த மாற்று ஆதாயத்தில், ரூ. 19.898 மில்லியன், ரூ. 20.290 மில்லியன் மற்றும் ஷரூ. 51.946 மில்லியன் முறையே 2021, 2020 மற்றும் 2020க்கு முந்தைய ஆண்டுகளுடன் தொடர்புடையது. இதன் விளைவாக, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமான இருப்பு மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான பரிமாற்ற இலாபத்தின் வருமானம் ரூ. 72.235 மில்லியன் மற்றும் ரூ. முறையே 20.29 மில்லியன். மேலும், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான பரிமாற்ற இலாபம் ரூ. 72.235 மில்லியன்.

(ஈ) வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்படத்தக்க நிலுவைகள்

(i) மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ஷரூ.1,446,123 தொகையுடைய 25 வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்படத்தக்க கணக்குகளில் பற்று நிலுவைகள் காணப்பட்டன. இவை 5 வருடங்களுக்கு மேல் காணப்படுகின்ற மொத்தமாக ஷரூ823,996 கொண்ட 13 பற்று நிலுவைகளையும் உள்ளடக்குகின்றது. மேலும் 1 தொடக்கம் 5 வருடங்கள் தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. எனினும் தமது பற்று நிலுவைகள் தீர்பனவு செய்யப்படாத வழங்குனர்களுடன் கம்பனி அதனை தொடர்ந்தும் சில கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டிருந்தது. ஆகையினால் அப்பற்று நிலுவைகளின் இருப்பும் செம்மையும் கணக்காய்வில் கேள்விக்குறியாக அமைந்திருந்தது.

(ii) வர்த்தகத்தில் 20 பற்று இருப்புக்கள் மற்றும் பிற செலுத்த வேண்டிய கணக்குகள் ஷரூ. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் 5,936,685. மேலே உள்ள பத்து செலுத்தப்படத்தக்க நிலுவைககள், ரூ. 4,100,099 5 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது, மேலும் 10 செலுத்தப்படத்தக்க நிலுவைகள் வர்த்தகம் மற்றும் பிற செலுத்த வேண்டிய கணக்குகள் ரூ. 01 முதல் 05 ஆண்டுகள் வரை 1,836,585 தீர்க்கப்படாமல் இருந்தது. எவ்வாறாயினும், நிறுவனம் விற்பனையாளர்களுடன் சில பரிவர்த்தனைகளை அவர்களின் பற்று நிலுவைகளை தீர்க்காமல் செய்தது. எனவே, அந்த டெபில் இருப்புகளின் இருப்பு மற்றும் துல்லியம் தணிக்கையில் கேள்விக்குறியாக இருந்தது.

(உ) வர்த்தகம் மற்றும் பிற வரவுகள்

(i) வர்த்தகம் மற்றும் பிற பெறத்தக்க இருப்பு (தொடர்புடைய கட்சிகள் உட்பட) ரூ. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் ரூ. 11,246,582,021, மேலும் இதில் மற்ற வரவுகள் மீதி ரூ. 7,565,491 5 ஆண்டுகளுக்கும் மேலாக மீட்கப்படாமல் இருந்தது. எவ்வாறாயினும், குறிப்பாக அவற்றை மீளப்பெறுதல் குறித்த இருப்பு உறுதிப்படுத்தல்கள் தணிக்கைக்கு கிடைக்கப்பெறவில்லை

(ii) 07 பிற பெறத்தக்க கணக்குகளில் ரூ. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் 2,568,941. எவ்வாறாயினும், நிறுவனம் அந்த சப்ளையர்களுடன் அவர்களின் கடன் நிலுவைகளை அகற்றாமல் சிலஅடுத்தடுத்த பரிவர்த்தனைகளை மேற்கொண்டது. எனவே, அந்த கடன் நிலுவைகளின் இருப்பு மற்றும் துல்லியம் தணிக்கையில் கேள்விக்குறியாக இருந்தது.

(எ) முந்தைய ஆண்டு பிழைகளின் திருத்தம்

மதிப்பாய்வின் கீழ் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் குறிப்பு எண். 22.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, CPCயில் இருந்து போக்குவரத்துக் கட்டணங்களின் அதிகப்படியான வசூல் ரூ. 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே 77.801 மில்லியன், ரூ. 125.288 மில்லியன் மற்றும் 157.264 மில்லியன் பின்னோக்கிச் சரி செய்யப்பட்டது. எவ்வாறாயினும், தொடர்புடைய ஆண்டில் அதிக கட்டணம் வசூலிக்கப்பட்ட போக்குவரத்து வருமானத்தை மறுசீரமைப்பதற்குப் பதிலாக, அது மற்ற இயக்கச் செலவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் வருமானம் மற்றும் மொத்த இலாபம் மற்றும் பிற இயக்கச் செலவுகள் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே ரூ. 125.288 மில்லியன் மற்றும் ரூ. 157.264 மில்லியன். மேலும், வருவாயைத் தக்கவைப்பதற்கான ஒட்டுமொத்த விளைவு ரூ. ஜனவரி 01, 2020 இல் 57.054 மில்லியன்கள் சரிசெய்யப்படவில்லை, மேலும் 2019 ஆம் ஆண்டிற்கான வரி சேமிப்பு தவறாக ரூ. 2.075 மில்லியன்.

நான் இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கு (SLAuSs) இணங்க எனது கணக்காய்வை மேற்கொண்டேன். அந்தத் தரங்களின் கீழ் எனது பொறுப்புகள் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகள் பிரிவின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள். நான் பெற்ற தணிக்கைச் சான்றுகள் எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

1.4 நிறுவனத்தின் 2021 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்ட பிற தகவல்கள்

மற்ற தகவல்களில் 2021 ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் உள்ளன, ஆனால் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எனது தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவை இந்த தணிக்கையாளரின் அறிக்கையின் தேதிக்குப் பிறகு எனக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற தகவல்களுக்கு நிர்வாகமே பொறுப்பு.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எனது கருத்து மற்ற தகவல்களை உள்ளடக்காது மற்றும் நான் எந்த விதமான உறுதியான முடிவையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிநிலை அறிக்கைகள் மீதான எனது தணிக்கை தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் கிடைக்கும்போது அவற்றைப் படித்து, அவ்வாறு செய்யும்போது, மற்ற தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுடனோ அல்லது தணிக்கையில் பெறப்பட்ட எனது அறிவோ அல்லது தவறாகக் கூறப்பட்டதாகத் தோன்றுகிறதா என்பதைக் கருத்தில் கொள்வது எனது பொறுப்பாகும்.

கம்பனியின் 2021 ஆண்டறிக்கையினை நான் வாசிக்கின்ற போது அதில் முக்கிய பிறழ் கூற்றுகள் காணப்படுகின்றன என நான் த தீர்மானிப்பதாயின், சரிப்படுத்தலுக்கான ஆளுகையுடன் பொறுப்பானவர்களுக்கு அவ்விடயத்தினை அறிவிப்பதற்கு வேண்டப்படுகின்றேன். மேலும், முக்கிய சரிப்படுத்தப்படாத தவறுக் கூற்றுகள் காணப்படுமாயின், காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளை அநுசரித்து பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்படும்

1.5 முகாமைத்துவத்தினதும் நிதி கூற்றுக்களின் நிர்வாகத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டோரினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம்கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ்ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் கம்பனியானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கான முறையான ஏடுகளையும் பதிவுகளையும் பராமரித்தல் வேண்டும்.

1.6 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறுகாரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர் நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிழை கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்தவதின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனியிடமுள்ள ஆற்றல்தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனதுஅபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டமும் 2007 இன் 7 ஆம் இலக்க பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(1) (ஈ) ஆம் பிரிவு மற்றும் 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 20018ஆம் ஆண்டின் 19 அம் இலக்க கம்பனிகள் சட்டத் தின் 6(i) (d)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க காணப்படுகின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (d) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்துடன் ஒததாகக் காணப்படுகின்றது. இவ் அறிக்கையின் 1.3(a)(i),1.3.1 (b), 1.3.1 (b) மற்றும் 1.3.1 (b) ஆம் பந்திகளின் விபரிக்கப்பட்ட விடயங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (d) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த ஆண்டுகளின் என்னால் செய்யப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

